பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalāikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 27 திங்கட்கிழமை 13.11.20174 கதிர் 08

## யாழ்.பல்கலை இன்று ஆரம்பம்

யாழ். பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களுக்குமான கற்றல் செயற்பாடுகள் இன்று ஆரம்பமாகும் எனப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மாணவர்கள் அனைவரையும் விரிவுரைகளுக்கு மீளத்திரும்புமாறு கேட்கப்பட்டுள்ளது.


ஈ.பி.ஆர்.எல்.எவ். - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை இணைத்து

# பேரவையின் ஏற்பாட்டில் புதிய அரசியல் கூட்டு

**எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலைச் சந்திப்பதற்காகத் தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட் டில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் பொது அமைப்புகள், பிற கட்சிகளை இணைத்துபொதுக்கூட்டமைப்புஒன்றுஉருவாக்குவது எனத் தமிழ் மக்கள் பேரவை நேற்றுத் தீர்மானித்திருக்கின்றது.**

பக்கம் 18

## பொது சின்னம் மகரயாழ்?



யாழ்ப்பாணம், நவ.13

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் புதிதாக அமைக்கப் படும் அரசியல்கூட்டமைப்புக்கானதேர்தல் சின்னம் மற்றும் பெயர் ஆகியன குறித்து

பக்கம் 18

# திறன்மிக்க மக்கள் பிரதிநிதிகளை உருவாக்கும் முயற்சியில் பேரவை

யாழ்ப்பாணம், நவ.13

“தமிழ்த் தேசியப் பற்றுறுதியும் ஆளுமையும் உள்ள மக்கள் பிரதிநிதிகள் உருவாக்கப்படவேண்டும். அதற்கான வழிமுறைகளையும் கலந்துரையாடல்களையும் தமிழ் மக்கள் பேரவை ஆரம்பித்துள்ளது. ”

நேற்று யாழ்ப்பாணத்தில் பேரவை நடத்திய கூட்டத்தின் பின்னர் விடுக்கப்பட்ட அறிக்கையிலேயே இவ்விவரம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்

பக்கம் 18



நேற்றைய மத்திய குழுக் கூட்டத்தில்

# கூட்டமைப்பாகவே போட்டி

## வவுனியாவில் சம்பந்தன் உறுதி

வவுனியா, நவ 13

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு கூட்டமைப்பாகவே போட்டியிடும். அதில் எந்தவித மாற்றமும் கிடையாது.

–இவ்வாறு நேற்று வவுனியாவில் நடந்த தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட் டத்தில் உறுதி

பக்கம் 18

# முஸ்லிம்களையும் இணைத்து தீர்வை எட்டப் பயணிப்போம்!

## தமிழரசுவின் மத்திய குழுக் கூட்டத்தில் சம்பந்தன் வலியுறுத்தல்

வவுனியா, நவ 13

புதிய அரசமைப்பு ஊடாகத் தீர்வை எட்டும் விடயத்தில் தமிழ் மக்கள் என்றில்லாமல் முஸ்லிம்களையும் இணைத்துத் ‘தமிழ் பேசும் மக்கள்’ என்ற ரீதியில் பயணிக்க வேண்டும்.

– இவ்வாறு வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று வவுனியாவில் நடைபெற்றது. முற்பகல்

பக்கம் 18

# பேரவையின் போக்கிலிருந்து அந்நியப்பட்டார் முதல்வர் விக்கி

**யாழ்ப்பாணம், நவ.13**

**புதிய அரசியல் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடுவது என தமிழ் மக்கள் பேரவைத் தரப்பிலிருந்து செய்திகள் கசியத் தொடகியுள்ள நிலையில் -**

**அந்த முடிவிலிருந்து தம்மை அந்நியப்ப டுத்துகின்றமை போல செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டிருக்கின்றார் பேரவையின் இணைத் தலைவர்களுள் ஒருவரான வடக்கின் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்.**

பக்கம் 18





# கூட்டமைப்பிலிருந்து வெளியே செல்வது நல்லதல்ல என்கின்றார் முதலமைச்சர்!

## சேர்ந்து பயணிக்க வலியுறுத்துகின்றார் அவர்

யாழ்ப்பாணம், நவ. 13

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறுவது நல்லதல்ல. அந்தக்கட்சியோடுசேர்ந்து பயணிப்பதே நல்லது என வலியுறுத்துகின்றேன்.”

– இவ்வாறு கூறியிருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்.

தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர் என்ற முறையில் நேற்று பேரவையின் கூட்டத்தில் உரையாற்றிய அவர், சற்று நேரத்தில் அங்கிருந்து புறப்பட்டார்.

வெளியில் ஊடகவியலாளர்அவரிடம்“கூட்டமைப்

பக்கம் 18

# சுயநல சிந்தனையால் தமிழ்த் தலைவர்கள் போட்டி மனப்பான்மையுடன் நடக்கின்றனர்

## சுரேஷ் முன்னிலையில் இடித்துக் கூறினார் முதல்வர்

யாழ்ப்பாணம், நவ 13

சிங்கள – முஸ்லிம் மக்களின் தலைவர்கள் திடமான கொள்கைகளுடன் நகர்ந்து கொண்டிருக்கும் நிலையில் தமிழ்த் தலைவர்கள் உட்பூசல்களுக்கு இடங்கொடுத்து – தன்னல சிந்தனைகளுக்கு இடங்கொடுத்து, தம்முள்ளே போட்டிமனப் பான்மையுடன் நடக்கவே எத்தனித்துள்ளார்கள். இது ஒட்டு மொத்தத் தமிழ் இனமும் அழிவுப் பாதையில் செல்லவழிவகுக்கும்.

– இவ்வாறு இடித்து

பக்கம் 18

# தறுதலைகளையே தவிசாளர்களாக நியமிக்க கட்சித் தலைவர்கள் முயற்சி

## விசனத்துடன் சுட்டிக்காட்டுகின்றார் முதல்வர் விக்கி

யாழ்ப்பாணம், நவ.13

“சட்டம் சுமத்தியுள்ள பொறுப்புக்களைச் செவ்வனே செய்து முடிக்கக் கூடியவர்களையே பிரதேசசபைகளுக்கான தவிசாளர்களாக நியமிக்க முன் வரவேண்டும். ஆனால் மாறாக கட்சித் தலைமைகள் தம்மைத் தலைமைத்துவத்தில்தக்க வைக்கத்தக்க தறு தலைகள் மீதே கண்ணும் கருத்தமாக இருக்கின்றனர்.

பக்கம் 16

# ஜனநாயகத் தமிழரசுக் கட்சி

## புதிய அமைப்பு விரைவில் உதயமாகிறது

யாழ்ப்பாணம், நவ.13

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நீண்ட காலம் செயற்பட்ட பலர், அதன் ஜனநாயகப் போக்கில் அதிருப்தியுற்று தனிக் கட்சி ஒன்றை ‘ஜனநாயகத் தமிழரசுக் கட்சி’ என்ற பெயரில் ஆரம்பிக்க ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர் என நம்பகரமாகத் தெரிய வருகின்றது.

இதற்கானஏற்பாடுகள்

பக்கம் 18

# உச்சக் கட்ட ஜனநாயகம் தமிழரசுக் கட்சியில்தான்!

## அடித்துக் கூறுகின்றார் சிறீதரன்



வவுனியா, நவ.13

‘‘தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உச்சக்கட்டஜனநாயகம்உள்ளஅமைப்பு தமிழரசுக் கட்சிதான்!”

தமிழரசுக்கட்சியின் யாழ். மாவட்ட

பக்கம் 18

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

# இடைக்கால அறிக்கை மக்கள் வழங்கிய ஆணையிலிருந்து முழுதாக மாறியிருக்கிறது



## சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.13

இடைக்கால அறிக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு மக்கள் வழங்கிய ஆணையில் இருந்தும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இருந்தும் முற்றுமுழுதாக மாறியிருக்கின்றது.

ஆகவே, இந்த இடைக்கால அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் சமகால அரசியல் தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மன்னார் ஆயர் இல்லத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எங்களுக்கிடையில் என்ன பிரச்சினை இருக்கின்றது? ஏன் அந்தப் பிரச்சினை உருவாகியது? அந்த பிரச்சினைக்கு எவ்வகையில் தீர்வு காணலாம் என்பதை சற்று வெளிப்படையாக நாங்கள் கதைத்தால் மட்டுமே அந்தப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும்.

எங்களுக்கிடையில் என்ன பிரச்சினை இருக்கின்றது என்பதைத் தெரிந்து கொள்ளாமலும், அதனை நாங்கள் தீர்க்காமலும் அதைப்பற்றி கதைக்காமல் இருந்து கொண்டு பொதுவாக நாங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

ஒன்று சேர்ந்து தேர்தலிலே முகம் கொடுக்க வேண்டும் என்று நினைக்கின்றமை எங்களை நாங்கள் ஏமாற்றுவது போல உள்ளது.

பல்வேறு கூட்டங்கள் இடம்பெற்றுள்ள போதிலும், எவ்வித முடிவுகளும் எடுக்கப்படாத நிலையில் கசப்பான சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

எனவே, எங்களுக்குள் என்ன பிரச்சினை இருக்கின்றது என்பதனை முதலில் வெளிக்கொண்டு வர வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2001ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட காலத்தில் இருந்து இன்று வரைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு என்று சொல்லி ஒரு யாப்பு கிடையாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது ஒரு பதிவு செய்யப்பட்ட கட்சி இல்லை, கூட்டமைப்புக்குனஒருபொதுவான சின்னமும் இல்லை, மாறாக இதற்கு அப்பால் கூட்டமைப்பில் நான்கு கட்சிகள் இருக்கின்றன.

இந்த நான்கு கட்சிகளும் பல்வேறு தேர்தல்களை சந்திக்கின்றது, மேலும் வெளிநாட்டு ராஜ தந்திரிகளை சந்திக்கின்றன. இலங்கை அரசுடன் பல சுற்றுப்பேச்சுகளைமேற்கொண்டுள்ளோம், இந்தச் சந்திப்புகள் பேச்சுகளில் ஒரு வெளிப்படைத்தன்மை இல்லை.

தனி மனிதர்கள் ஒரு சில முடிவுகளை எடுக்கின்றார்கள், எதிர்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்றால் இந்தக் கட்சி பதிவு செய்யப்பட வேண்டும்.

இதற்கு என ஒரு யாப்பு வேண்டும், பொதுவான சின்னம் இருக்க வேண்டும், இதற்கு அப்பால் எங்களுக்கு என்று ஒரு கொள்கைத் திட்டம் இருக்க வேண்டும்.

நான்கு கட்சிகளைக் கொண்ட எங்களுக்குள் ஓர் ஒருங்கிணைப்புக்குழு இருக்கின்றது. இந்த ஒருங்கிணைப்புக் குழுவில் ஒரு கொள்கை ரீதியான தீர்மானம் மேற்கொள்ளப்படுவதில்லை.

ஒருங்கிணைப்புக்குழு கூடினால் மட்டுமே தீர்மானங்களை எடுக்க முடியும். இந்தக் குழுவைக் கூட்ட பல மாதங்கள் கடக்கின்றது. அப்படி ஒருங்கிணைப்புக் குழுவைக் கூட்டினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் எல்லாம் குப்பைத் தொட்டிக்குள் போடப்படுகின்றன.

தற்போதுள்ள இடைக்கால அறிக்கை தொடர்பாக ஒரு வருடகாலமாக அரசியல் வழி நடத்தல் குழுவில் எங்களுடைய கட்சியின் பிரதிநிதிகள் இருவர் இந்தக் குழுவில் இருக்கின்றனர்.

ஒருவருடத்தில் இடம்பெற்ற இந்தக் கூட்டம் தொடர்பில் 73 தடவைகள் பேசப்பட்டுள்ளன. ஒரு கூட்டத்தையாவது கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சி நான்கினையும் ஒன்று கூட்டி கதைத்துத் தீர்மானம் மேற்கொள்ள எங்களால் ஒரு முடிவுக்கு வர முடியாத நிலை காணப்படுகின்றது.

இறுதியாக நாடாளுமன்ற குழுவைக் கூட்டி அதில் தீர்மானம் எடுக்க முயற்சி செய்தார்கள். கூட்டமைப்பின் தலைவருக்குநான்கடிதம்எழுதினேன்.

இன்றைக்கு இடைக்கால அறிக்கை தொடர்பில் எல்லோருக்கும் தெரியும். இந்த நாடு ஒற்றையாட்சி நாடு, பௌத்த நாடு அதனை யாராவது எதிர்க்கின்றீர்களா? என்று பிரதமர் கேட்டார்.

தெற்கில் இன்று பிரதமராக இருக்கலாம், ஜனாதிபதியாக இருக்கலாம், மஹிந்த ராஜபக்ஷவாக இருக்கலாம் மூவரும் சேர்ந்து ஒரே நிலைப்பாட்டில் தான் இருக்கின்றார்கள்.

இந்த இடைக்கால அறிக்கை தொடர்பில் அவர்களுக்கு எந்த விதமான மாற்றுக் கருத்துக்களும் இல்லாத நிலைதான் இருக்கின்றது.

1972 ஆம் ஆண்டு அரசமைப்பை தந்தை செல்வா தீர்க்க தரிசனமாகக் கூறினார். நாங்கள் இந்த அரசமைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை என்று.

இந்த அரசமைப்புதான் பெரிய அழிவைக் கொண்டு வரப்போகின்றது என்றார். அவர் கூறியமை போல் இன்று 4.5 லட்சம் பேர் அழிந்து போயுள்ளனர்.

ஒன்றுமில்லாத இடைக்கால அறிக்கையை தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். ஒன்றுமில்லாத இடைக்கால அறிக்கைக்கு தமிழ் மக்கள் ஆணை தந்திருக்கின்றார்கள் என்று நாங்களும் சொல்லலாம். அதற்குப் பிறகு அரசமைப்பைப்பற்றி, இடைக்கால அறிக்கையை பற்றி நாங்கள் ஒன்றுமே பேச முடியாது.

இடைக்கால அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் எல்லோருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. ஆனால், எனக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

எனக்கு நாடாளுமன்றத்தில் உரையாற்ற சந்தர்ப்பம் வழங்காத கட்சியின் தலைவர் எப்படி தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுத்து கொடுக்கப் போகின்றார்?

நாங்கள் அங்கு தமிழீழம் கேட்டா பேசப்போகின்றோம். அல்லது மீண்டும் ஆயுதப் போராட்டம் வெடிக்கும் ஆயுதத்தை கையில் எடுங்கள் என்றா பேசப்போகின்றோம்! இல்லை.

இடைக்கால அறிக்கை கூட்டமைப்பிற்கு மக்கள் வழங்கிய ஆணையில் இருந்து தேர்தல் விஞ்ஞாபனத்தில் இருந்து முற்று முழுதாக மாறியிருக்கின்றது.

ஆகவே இந்த இடைக்கால அறிக்கையை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது என்ற விடயத்தையே நான் நாடாளுமன்றத்தில் பேச இருந்தேன்.

எங்களுடைய கட்சிக்குள் எவ்வளவுக்கு ஜனநாயகமும் வெளிப்படைத்தன்மையும் இருக்கின்றது. ஆகவே இப்படி செயற்பட முடியாது. முதலில் கொள்கை ரீதியில் மக்களுக்கு வழங்கிய ஆணையின்படி நாங்கள் தெளிவாக இருக்க வேண்டும்.

கட்சி பதிவு செய்யப்பட வேண்டும். பொதுச்சின்னம் ஒன்றை உருவாக்க வேண்டும். யாப்பு வேண்டும். அதன் அடிப்படையிலே நாங்கள் ஒன்றாகப் பயணிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(க)

# வவு. ப.நோ.கூட்டுறவுச் சங்கம் உடைத்து திருட்டு; 4 பேர் கைது!

வவுனியா, ஈச்சங்குளம் ப.நோ.கூட்டுறவுச் சங்க மகா கணபதி கிளையை உடைத்து திருடிச்சென்ற நான்கு திருடர்களை கைது செய்துள்ளோம் என வவுனியா ஈச்சங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா, ஈச்சங்குளம் ப.நோ.கூட்டுறவுச் சங்க மகாகணபதி கிளையின் கதவின் பூட்டை உடைத்து உட்சென்ற திருடர்கள் அங்கிருந்து உலர் உணவுப் பொருள்கள், மீள்நிரப்பு அட்டை மற்றும் பணத்தை எடுத்துக் கொண்டு ஓட்டோவில் கல்மடு வீதியின் ஊடாக தப்பித்துச்சென்றுள்ளனர்.

இவ்வாறு சென்ற ஓட்டோவை கல்மடு கட்டடையர்குளத்தில் ரோந்து கடமையில் இருந்த ஈச்சங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுபாஸ் ஆரியரத்ன, உப பொலிஸ் அத்தியேட்சகர் விஜயரத்ன, பொலிஸ் கொன்ஸ்டபிள்களான லக்ஸ்மன், சந்திர வம்ச, உப்புல் ஆகியோரால் சந்தேகத்தின் அடிப்படையில் வழிமறித்த போதே ப.நோ.சுட்டுறவுச் சங்கத்தில் இருந்து திருடிச் செல்கின்றமைதெரியவந்ததை அடுத்து, வவுனியா, ஓமந்தை பகுதிகளில் வசிக்கும் ஓட்டோச் சாரதி உட்பட நான்கு பேரை கைது செய்துள்ளனர்.

இதன்போது திருடப்பட்ட ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

(க-100)

# சமஷ்டி ஆட்சி முறை தொடர்பில் அமெ. உதவியுடன் கருத்தரங்கு

கொழும்பு, நவ. 13

சமஷ்டி ஆட்சி முறை தொடர்பில் அமெரிக்காவின் உதவியுடன் நாட்டின் பல பகுதிகளில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன என கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் யூ.எஸ்.எயிட் என்ற நிறுவனம் இந்தக் கருத்தரங்குகளை நடத்துவதற்கு நிதி உதவி வழங்கியுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையத்தின் ஊடாக கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

இரகசியமாக முன்னெடுக்கப்பட்ட இந்தக் கருத்தரங்குகளுக்கு 40 உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளன.

நாட்டில் இனப்பிரச்சினை காணப்படுகின்றது எனவும் சமஷ்டி ஆட்சி முறையே இதற்குத் தீர்வு எனவும் கருத்தரங்கு மூலம் பிரசாரம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் சமஷ்டி ஆட்சி முறைமை உருவாக்கப்பட வேண்டுமென இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசப் தெரிவித்துள்ளார் எனவும், இது தொடர்பில் தூதரகத்தின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்படுகிறது.

(க)

# தமிழர் மத்தியில் புதிய அரசமைப்புத் தொடர்பான கருத்துக் கணிப்பாக உள்ளூராட்சித் தேர்தல்கள்

## தமிழ் மக்கள் பேரவைக் கூட்டத்தின் பின்னர் கஜேந்திரகுமார் தெரிவிப்பு

"தமிழர் மத்தியில் புதிய அரசமைப்புத் தொடர்பான கருத்துக் கணிப்பாகவே தற்போது நடை பெறப்போகும் உள்ளூராட்சித்தேர்தல்களைக் கருத வேண்டும்."

நேற்று தமிழ் மக்கள் பேரவைக் கூட்டத்தின் பின்னர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

நேற்றைய கலந்துரையாடல் தொடர்பாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:–

நாட்டில் புதிய அரசமைப்பு தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பான இடைக்கால அறிக்கையொன்று வெளியாகியுள்ளது. இந்த அறிக்கை தமிழ் தேசிய நலன்களை ஊதாசீனம் செய்யும் வகையிலும், தமிழ் தேசிய அபிலாஷைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலுமே உள்ளது.

இத்தகைய ஓர் வழிகாட்டல் குழுவின் அறிக்கையின் பின்னணியிலேயே தற்போது உள்ளூராட்சி தேர்தலையும் நாம் அணுக வேண்டியுள்ளது. இத்தகைய ஒரு நிலையில் தமிழ் மக்களுக்கு எந்தவகையிலும் பிரயோசனமற்ற இந்த அறிக்கையை முழுமையாக ஆதரித்துத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மக்கள் மட்டத்தில் பிரச்சாரம் செய்து வருகின்றது. இந்த அரசமைப்பை ஏன் தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும்; தெளிவு படுத்த வேண்டிய நிலை உள்ளது.

அந்தவகையில் இந்த உள்ளூராட்சிதேர்தலை அந்த அரசமைப்புக்கு உரிய ஒரு கருத்துக் கணிப்பாக ஏற்றுக்கொண்டு மக்களுக்கு ஆழமான அரசியலை கொண்டு போக வேண்டும். அது மட்டுமல்லாமல் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள்பேரவை நேரடியாக அரசியலில் குதிக்கவில்லை என்றாலும், அவர்களது பங்களிப்போடு புதிய கூட்டணியொன்று போட்டியிட வேண்டும். அக் கூட்டணியில் எமது கட்சியும், ஈ.பி.ஆர்.எல். எவ். கட்சியும் மற்றும் பொது அமைப்புகளும் இடம்பெறும்.

இதேவேளை வடக்கு மாகாண முதலமைச்சர் இக் கலந்துரையாடலில் பேசும் போது, தமிழ் தேசிய கூட்டமைப்பிலுள்ள ஒரு சிலர் தாம் போகின்ற பாதை பிழையானது என உணர்ந்து, திருந்தி, தற்போது அவ்வாறான கருத்துக்களை கூறிவருகிறார்கள் எனவும், எனவே அவர்களையும் எதோ ஒரு வகையில் அரவணைத்துப்போக வேண்டியுள்ளது எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் எமது நிலைப்பாடனது –

தற்போது தமிழ் மக்களின் நிலையானது நடுத்தெருவுக்கு வந்துள்ளது. அதற்கு காரணம் தமிழ் அரசியல் தலைமைகள் தமது பணியினை செய்யாததன் காரணமேயாகும். அத்தகைய தமிழ் தலைமைகள் தாம் செய்து கொண்டிருகின்ற அநியாயங்கள் அம்பலமாகிக் கொண்டிருக்கின்ற நிலையிலும், மக்களுக்குத் தாம் செய்ய நினைத்த துரோகங்களை முழுமையாக செய்ய முடியாத நிலை உருவாகி வருகின்ற நிலையிலும், தாமும் திருந்தி வருகின்றோம் என்று கூறும் விடயத்தை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஏனெனில் நாம் மக்களுக்கு நேர்மையான அரசியலை செய்ய நினைக்கின்றோம். இந்நிலையில் அத்தகையவர்களை இணைத்துக்கொண்டு நாம் நேர்மையான அரசியலைச் செய்ய முடியாது என்பதுவே எமது நிலைப்பாடகும். – என்றார். (உ)

## எம்.பியாகிறார் அருந்தவபாலன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் பதவி விலக, தமிழரசுக் கட்சியின் தென்மராட்சி அமைப்பாளர் வி.அருந்தவபாலனுக்கு அந்த இடத்தை வழங்குவது தொடர்பில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை

யாழ்ப்பாணம்,நவ.13

நாடு முழுவதிலும் உள்ள உள்ளூராட்சிசபைகளைப்பிரதிநித்துப்படுத்தும்பிரதிநிதிகளின் எண்ணிக்கையை உள்ளூராட்சி, மாகாணசபைகள்அமைச்சர் பைசர் முஸ்தபா வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளார்.

சிங்கள மொழி மூல வர்த்தமானியே தற்போது வெளியாகியுள்ளது. அதன்படி யாழ். மாவட்டம் உட்பட சில பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் பற்றி விவரம் 'காலைக்கதிர்' நாளிதழில் நேற்று வெளியாகியிருந்தது. அதில் ஆகவட்டார ரீதியான உறுப்பினர்கள் எண்ணிக்கை மட்டுமே இடம்பெற்றிருந்தது என்றும், விகிதாசார ரீதியில் மேலும் 40வீத உறுப்பினர்கள் பட்டியலின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவது தொடர்பான எண்ணிக்கை சேர்க்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

அதனால் யாழ்.மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளுக்கும் வட்டாரம் மூலமும் மற்றும் விகிதாசார அடிப்படையிலும் தெரிவாகும் உறுப்பினர்கள் எண்ணிக்கை வேட்பாளர் பட்டியலில் பெண்களுக்கு அளிக்கப்பட வேண்டிய இட எண்ணிக்கை வட்டார வாரியாக அல்லாமல் பட்டியல் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை ஆகியவை பற்றிய முழு விவரங்களும் இன்று இங்கு முழுமையாகப் பிர சுரிக்கப்படுகின்றன.

| உள்ளூராட்சி சபை | மொத்த வட்டார வேட்பாளர்கள் | வட்டாரத்தில் மகளிர் வேட்பாளர்கள் | 40 வீத பட்டியல் இடம் | 40 வீத பட்டியலுக்கான வேட்பாளர்கள் | 40 வீத பட்டியலில் மகளிர் | தெரிவாகும் மொத்த உறுப்பினர்கள் |
|---|---|---|---|---|---|---|
| யாழ். மாநகர சபை | 27 | 4 | 18 | 21 | 10 | 45 |
| வல்வெட்டித்துறை நகர சபை | 09 | 1 | 06 | 09 | 04 | 15 |
| பருத்தித்துறை நகர சபை | 09 | 1 | 06 | 09 | 04 | 15 |
| சாவகச்சேரி நகர சபை | 11 | 1 | 07 | 10 | 05 | 18 |
| காரைநகர் பிரதேச சபை | 06 | 1 | 04 | 07 | 03 | 10 |
| ஊர்காவற்றுறை பிரதேச சபை | 08 | 1 | 05 | 08 | 04 | 13 |
| நெடுந்தீவு பிரதேச சபை | 08 | 1 | 05 | 08 | 04 | 13 |
| வேலணை பிரதேச சபை | 12 | 2 | 08 | 11 | 05 | 20 |
| வலிகாமம் மேற்கு பிரதேச சபை | 15 | 2 | 10 | 13 | 06 | 25 |
| வலிகாமம் வடக்கு பிரதேச சபை | 21 | 3 | 14 | 17 | 08 | 35 |
| வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை | 17 | 2 | 11 | 14 | 07 | 28 |
| வலிகாமம் தெற்கு பிரதேச சபை | 18 | 3 | 12 | 15 | 07 | 30 |
| வலிகாமம் கிழக்கு பிரதேச சபை | 22 | 3 | 14 | 17 | 08 | 36 |
| வடமராட்சி பிரதேச சபை | 19 | 3 | 12 | 15 | 07 | 31 |
| பருத்தித்துறை பிரதேச சபை | 12 | 2 | 08 | 11 | 05 | 20 |
| சாவகச்சேரி பிரதேச சபை | 17 | 2 | 11 | 14 | 07 | 28 |
| நல்லூர் பிரதேச சபை | 12 | 2 | 08 | 11 | 05 | 20 |
| மொத்தம் | 243 | 34 | 159 | 210 | 99 | 402 |

## யாழ்.நகரில் வாள்வெட்டு

யாழ்ப்பாண நகரத்தில் வீதியில் நின்றிருந்த இரு குடும்பஸ்தர்கள் மீது இனந்தெரியாதோர் சரமாரியாக வாள்வெட்டை மேற்கொண்டபின்னர் தப்பிச் சென்றுள்ளனர்.

இது குறித்துத் தெரிய வருபவை வருமாறு –

யாழ்ப்பாணம் பிரதான வீதி, பழைய சிறைச்சாலைக்கு அருகில் உள்ள கடை ஒன்றில் நேற்று மாலை குறித்த இருவரும் நின்றுள்ளார்கள். அப்போது அப்பகுதியால் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவர்கள் இருவர் மீதும் சரமாரியாக வாளினால் வெட்டிவிட்டுதப்பிச்சென்றுள்ளனர்.

இதனால் ஒருவரது முகத்தில் படுகாயம் ஏற்பட்டுள்ளது. மற்றவரது வலது கை பெரு விரலும் இடது கைப் பெருவிரலும் துண்டாடப்பட்டுள்ளன.

படுகாயமடைந்த இருவரும் உடனடியாக யாழ் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இந்தச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட இருவரும் குருநகர் பகுதியைச் சேர்ந்தகலைச்செல்வன்(வயது47), கவின்றோ (வயது48) என அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

## யாழ்.பல்கலையில் இன்று கருத்துரை

யாழ்ப்பாணம், நவ.13

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் ஏற்பாட்டில், தமிழ்த்துறைவிரிவுரைமண்டபத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு 'வாய்மொழி மரபுகளை ஆவணப்படுத்தல்' தொடர்பான கருத்துரை இடம்பெறும்.

யாழ். பல்கலைக்கழகதமிழ்த் துறைத்தலைவர் ம.இரகுநாதன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் மனோன்மணியம் சுந்தரநார்பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் நா.ஸ்ரீபன் (தலைவர், மொழிப்புலம்) கருத்துரை வழங்குவார்.

ஆர்வலர்களை அழைக்கின்றனர் தமிழ்த்துறை மாணவர்கள். (இ

## முஸ்லிம்களையும்...

(பதினெட்டாம் பக்கத் தொடர்ச்சி)

யாற்றிய சம்பந்தன் தெரிவித்தவை வருமாறு:–

வடக்கு – கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயக பூமி. வடக்கு – கிழக்கு இணைப்புக்கான சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும்போது முஸ்லிம்களின் நியாயமான கோரிக்கைகளையும் ஏற்று இரு தரப்பினரும் இணைந்து ஓரணியில் நின்று வாக்களிக்கவேண்டும். அஷ்ரப் முன்வைத்த கோரிக்கைகளை நாம் மறந்துவிடமுடியாது.

புதிய அரசமைப்பின் இறுதி வடிவத்தில் தமிழ் பேசும் மக்கள் ஏற்காத எந்தத் தீர்வையும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்போ, தமிழரசுக் கட்சியோ ஏற்கமாட்டா.

இடைக்கால அறிக்கையில் இப்போது சமஷ்டி என்ற விடயம் தொடர்பில் சர்ச்சைகிளப்பப்பட்டு வருகின்றது. அதில் கூறப்பட்டுள்ள ஒருமித்த நாடு என்ற சொற்பதம் ஒற்றையாட்சியல்ல. அது சமஷ்டி தான். நாட்டு மக்களின் நலன் கருதியே அதில் ஒருமித்த நாடு என்ற சொற்பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. குழப்பவாதிகள் சிலர் ஒருமித்த நாடு என்ற சொற்பதத்துக்கு ஒற்றையாட்சி என்ற அர்த்தம் கற்பித்துக் குழப்பத்தை ஏற்படுத்த முனைகின்றனர்.

புதிய அரசமைப்பின் ஊடாக அதிகூடிய அதிகாரப் பகிர்வை எமக்கு வழங்கவேண்டும். அது மத்திய அரசினால் திரும்பப் பெறமுடியாததாக இருக்க வேண்டும் – என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தேர்தலுக்கு வேட்பாளர்கள் தேடும் திருவிழா ஆரம்பம்

வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் சர்ச்சைக்குரிய அரசியல் கருத்துக்களை அடிக்கடி வெளியிடுவார். எனினும், அவற்றுக்குள் அதிக ஆழமும் அர்த்தமும் இருக்கவே செய்யும்.

இப்போது உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நெருங்கி வருகையில் அது குறித்தும் அவர் அதிரடிக் கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார்.

உள்ளூராட்சிச் சபைகளுக்கு தவிசாளர்களை - அல்லது தலைவர்களை - நியமிப்பது பற்றிய அவரது கருத்து நிச்சயம் சர்ச்சைகளை ஏற்படுத்தும்.

தமிழ்க் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் கடந்த தடவை நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில், வேட்பாளர் பட்டியலில் ஆகக்கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றோருக்குத் தவிசாளர் பதவி என்ற விதிமுறையைப் பேணி நியமனங்களை அது கையாண்டது. எனவே, தவிசாளர் நியமனத்தில் கூட்டமைப்புத் தலைமை தறுதலைகளை - அல்லக்கைகளை - நியமித்தது என்று நேரடியாகக் குற்றம்சாட்ட இடமில்லை.

தேர்தலுக்கு முன்னரே தலைவரை அறிவித்தமை வடக்கு மாகாண சபையில்தான் நடந்தது. வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனை நியமித்தமையில் தவறு இருந்ததாக நீதியரசரே குற்றம் சுமத்துவார் என்று கூறமுடியாது.

ஆக, இப்போது தவிசாளர்களாகத் தறுதலைகளை நியமிக்கக் கட்சித் தலைமைகள் முயற்சிக்கின்றன - எத்தனிக்கின்றன - என்ற அவரது குற்றச்சாட்டு இனிவரும் உள்ளூராட்சித் தேர்தல்கள் சம்பந்தமானது என்று கருதலாம்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது உறுப்பினர் தெரிவுக்கான வேட்பாளர் நியமனத்தில் இந்த அல்லக்கைகளுக்கு இடமளிக்கும் போக்குத் தாராளமாகவே இடம்பெற்றது என்பதும் மறுப்பதற்கில்லை.

அதைவிடுத்து, தகுதியான - சரியான - திறமையுள்ள - இளம் சமூகத்தினருக்குத் தேர்வில் வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்பதே முதல்வரின் கோரிக்கை. அது நியாயமானது; கட்டாயம் பின்பற்றப்பட வேண்டியது.

தங்களின் தலைமைப் பதவிகளைத் தக்கவைப்பதற்காகத் தறுதலைகளுக்கு இடம் கொடுக்கும் போக்குப் பற்றிய முதல்வரின் குற்றச்சாட்டை எடுத்த எடுப்பில் தவறானது என்று நாம் ஒதுக்கி விடமுடியாது.

மாற்றாக, திறமையுள்ள - இளைய - சமூகத்தினரைத் தேடி எடுத்து, முன்னுக்குக் கொண்டு வருவதில் நமது அரசியல் தலைமைகள் சிரத்தையோ - சிந்தனையோ - காட்டவேயில்லை என்பதும் உண்மையே.

தேர்தல் நியமனத்துக்கு இன்னும் ஒரு மாதமே உள்ளது. பெரும்பாலும் டிசெம்பர் மாதம் 15, 16 இற்குள் நியமனப்பத்திரம் ஏற்றுக்கொள்வது முடிவடைந்துவிடும்.

ஆனால், கட்சிகள் தமது வேட்பாளர்கள் தெரிவில் இதுவரை நேர்மை, நியாயமான நடவடிக்கைகளை ஆரம்பித்தவை மாதிரித் தெரியவில்லை; நியாயமான சிந்தனையைக் காட்டியவையாகத் தோன்றவில்லை.

அதுவும், புதிய தேர்தல் சட்ட விதிகளின் படி 25 வீத வேட்பாளர் இடங்கள் மகளிருக்கு வழங்கப்பட வேண்டும் என்பது புதிய விதி. ஆனால், அதற்கு கூட்டமைப்பின் எந்தக் கட்சியும் இன்னும் தயாரானதாகத் தெரியவில்லை.

மகளிர் அணியை ஸ்தாபித்து, செயற்படுத்தி, இயக்கி வரும் ஒரேயொரு தமிழ்க் கட்சி இன்றைய நிலையில் ஈ.பி.டி.பியாகவே இருக்க முடியும். மற்றக் கட்சிகள் எல்லாம் இன்னும் இவ்விடயத்தில் நித்திரைவிட்டு எழும்பவில்லை என்றே படுகின்றது.

தேர்தல் அறிவிப்பும், நியமனப் பத்திரம் ஏற்கும் காலமும் இரண்டுவார கால வித்தியாசத்துடன் விரைவில் வரும்போதுதான் நமது தமிழ்க் கட்சிக் கண் விழித்து முழிக்கும்.

வீடு, வீடாக மகளிர் வேட்பாளர்களுக்காக வலை வீசித் தேட வேண்டிய நிலைமை வந்தாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

உள்ளூராட்சி வேட்பாளர் தெரிவு தொடர்பில் முதலமைச்சரும் ஏனையோரும் கிளப்பிவிடும் சந்தேகங்களுக்கு மத்தியில் -

அந்த விடயங்களில் தமிழ்க் கட்சிகள் நேர்மையுடனும், இதய சுத்தியுடனும், சரியாகவும் செயற்பட்டன என்பதைக் காட்டும் விதத்தில் அவ்விடயத்தில் வெளிப்படைத் தன்மை பேணப்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டுகின்றோம்.

இதுவிடயத்தில் தமிழ் மக்கள் பேரவை ஆரம்பித்திருக்கும் தேடல், கலந்துரையாடல் போன்றவை பற்றிய அறிவிப்புகளும் கவனிக்கத்தக்கதே.

உள்ளூராட்சித் தேர்தலில் யாருக்கு இடமளிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவை தனது அறிக்கையில் கூறியிருக்கும் வகைப்படுத்தலும் விளக்கமும் வரவேற்கத்தக்கவையே.

ஆனால், அதற்கான கலந்துரையாடலை இப்போது ஆரம்பித்து அடுத்த நான்கு வாரங்களுக்குள் அதைச் செய்து முடிக்கலாம் என்பது சாத்தியப்பாடுடையதாகத் தோன்றவில்லை.

முதலில் யாருடன் சேர்ந்து இந்தத் தெரிவுகளை தமிழ் மக்கள் பேரவை செய்யப் போகின்றதோ தெரியவில்லை. அதைத் தீர்மானிக்கும் போதே காலம் கடந்து விடும் போல படுகின்றது.

# இலங்கை தொடர்பில் அமெரிக்காவின் கருத்தை நிராகரித்தார் சீனத் தூதுவர்

கொழும்பு, நவ. 13

இலங்கைக்கு சீனா வழங்கும் உதவிகள் குறித்து அமெரிக்க அதிகாரி வெளியிட்ட கருத்தை சீனத் தூதுவர் ஈ சியாங்லிங் நிராகரித்துள்ளார்.

அமெரிக்காவின் உதவிச்செயலாளரான எலிஸ் வெல்ஸ், அமெரிக்க காங்கிரஸில் உரையாற்றும்போது சீனாவின் சலுகையற்ற கடன்கள் காரணமாக இலங்கையில் கடன் சுமை அதிகரித்துள்ளது எனக் குறிப்பிட்டிருந்தார்.

எனினும் இதனை மறுத்துள்ள சீனத் தூதுவர் இலங்கைக்கு சீனா சலுகை அடிப்படை கடன்களையே 2.0 வீதத்தில் வழங்குகின்றது எனத் தெரிவித்துள்ளார். வளர்முக நாடு ஒன்றுக்கு வழங்கும் அதிகபட்ச உதவியாக இது அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை சீனா இலங்கைக்கு 22 ஆயிரம் கோடி ரூபாவை திட்டக்கடன்களாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சைட்டம் பற்றிய நிலைப்பாட்டை உயர்நீதிமன்றுக்கு அறிவிக்க வேண்டும்

*அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு*

சைட்டம் நிறுவனம் தொடர்பான அரசின் நிலைப்பாட்டை ஜனாதிபதி விரைவில் உயர் நீதிமன்றத்தில் தெரியப்படுத்த வேண்டும் என அரசவைத்திய அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளோம் என அரச வைத்திய அதிகாரிகள்சங்கத்தின் உதவிச்செயலாளர் நளின் டி சில்வா தெரிவித்துள்ளார்.

சைட்டம் நிறுவனத்தை இரத்துச் செய்வதாக, அரசு வாக்களித்துள்ள நிலையில், அதை உயர்நீதிமன்றத்திற்கு அறிவிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இது இவ்வாறு இருக்க, எதிர்வரும் இரண்டு வருடங்களுக்குள் மாலபே நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை மற்றும் முல்லேரியா வைத்தியசாலையை இணைத்து போதனா வைத்தியசாலையாக மாற்ற எதிர் பார்த்துள்ளோம் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

## யாழ். பல்கலைக்கழக பாதுகாப்புப் பிரிவினரின் கட்டடத் திறப்பு விழா

யாழ். பல்கலைக்கழக பாதுகாப்புத் திணைக்களத்தின் மீள் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக பாதுகாப்புத் திணைக்களத்தின் தலைவர் ஆர்.பாஸ்கரன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் இ.விக்னேஸ்வரன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக பதிவாளர் வி.காண்டீபன் மற்றும் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், விருந்தினர்களாக பாதுகாப்புத் திணைக்கள துறைத் தலைவர் கே.நாதன் மற்றும் ஓய்வு நிலை பாதுகாப்பு உத்தியோகத்தர் என்.கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

இதேவேளை புதிய பாதுகாப்பு திணைக்கள கட்டடத்தில் இரத்ததான முகாமும் இடம்பெறும். (இ)

## மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு கிளிநொச்சியில் தயார்ப்படுத்தல்

மாவீரர் நாள் நினைவேந்தலுக்காக தாயகத்திலும் புலத்திலும் பல ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெற இருக்கின்ற மாவீரர் நாள் நினைவேந்தலுக்காக கிளிநொச்சியில் உள்ள மூன்று துயிலுமில்லங்களிலும் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் மக்கள், பொது அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அரசியற்கட்சிகள் எனப் பலரும் இணைந்து சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த காலத்தில் பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நினைவேந்தல் ஏற்பாடாகி இருந்த நிலையில் இம்முறையும் மாவீரர் தின நிகழ்விற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளின் காலத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் போல் இம்முறையும் கிளிநொச்சியில் நினைவேந்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் பொதுச் செயலாளருடன் நாமல் சந்திப்பு!



கொழும்பு, நவ. 13

பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் பொதுச்செயலாளர் அக்பர் கானை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு சிறப்பானதாக அமைந்ததென நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இளைஞர்களின் அதிகாரம் மற்றும் அரசியலில் இளைஞர்களின் பிரதிநிதித்துவம் தொடர்பான அவரது ஊக்குவிப்புகளை காண்பதற்கு சிறப்பாக உள்ளதென்றும் அவர் கூறியுள்ளார்.

## வேலணை செயலக கலாசார விழா நாளை

வேலணைப் பிரதேச செயலகத்தின் கலாசார விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு புங்குடுதீவில் உள்ள அம்பலவாணர் ஞாபகார்த்த கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

வேலணை பிரதேச செயலர் அ.சோதிநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த விழாவில் யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் பிரதம விருந்தினராகவும் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி அ.பாலமுரளி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த விழாவில் தீவகத்தின் சிறப்பு அம்சங்களைக் கொண்ட வரலாற்றுச் சிறப்புப் பெற்ற 'தென்தீபம்' இதழ் வெளியீடும் இடம்பெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து கலைஞர்கள் கௌரவிப்பும் பிரதேச மட்ட கலை இலக்கிய போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(இ)

## நாளை

14.11.2017
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம் : உத்தரம் பி.ப. 3.33 வரை
திதி : ஏகாதசி பி.ப. 3.18 வரை
சுபநேரம் : 10.37 – 12.07 வரை
இராகுகாலம்: 3.07 – 4.37 வரை

# அரசாங்க அறிவித்தல்

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் வழங்குநரைப் பதிவு செய்தல் - 2018

யாழ். மாவட்ட செயலகம், யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றுக்கு 2018 ஆம் ஆண்டுக்கு கீழ்க் குறிப்பிடப்படும் பொருள்கள், வேலைகள் மற்றும் சேவைகளை விநியோகிப்பதற்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்ய விரும்புபவர்கள் விண்ணபப்படிவங்களை மாவட்ட செயலக பெறுகை அலகு, பிரதேச செயலகங்கள் என்பவற்றில் 2017.11.15 ஆம் திகதி தொடக்கம் 2017.12.13 ஆம் திகதி வரை அலுவலக நேரத்திலோ அல்லது WWW.jaffna.dist.gov.lk என்ற இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்தோ பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2017.12.15 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் (9"x4") இடது பக்க மேல் மூலையில் "வழங்குநரைப் பதிவு செய்தல் - 2018" எனக் குறிப்பிட்டு "அரசாங்க அதிபர், பெறுகை அலகு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாகக் கையளிப்பதாயின் மாவட்ட செயலகத்தின் பெறுகை அலகில் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கட்டட நிர்மாண வேலைகளுக்கு கீழே உள்ள கட்டண விவரத்துக்கு ஏற்றவாறு, ஏனைய வழங்குநர்கள் ரூபா 500/= இனையும் மீளளிக்கப் படாத வைப்புப் பணமாக "மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம்,யாழ்ப்பாணம்" எனும் பெயரில் உள்ள 7041946 எனும் இலங்கை வங்கிக் கணக்கிலக்கத்தில் பணமாக வைப்பில் இடப்படல் வேண்டும். பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் இந்தப் பதிவுக்கட்டணத்தைச்செலுத்தத்தேவையில்லை. வைப்பிலிடப்பட்ட பணத்துக்கான வைப்புச் சிட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும். அவ்வாறு இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

| ஒப்பந்தத் தொகை | பதிவுக் கட்டணம் |
|---|---|
| ரூபா 2,000,000 இற்குச் சமமான அல்லது அதற்குக் குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 2,000 |
| ரூபா 2,000,000 இற்கு அதிகமானதும் ரூபா 5,000,000 இற்குச் சமமான அல்லது அதற்குக் குறைவான ஒப்பந்தத் தொகை | ரூபா 3,000 |
| ரூபா 5,000,000 இற்கு அதிகமானதும் ரூபா 10,000,000 இற்குச் சமமான அல்லது அதற்குக் குறைவான ஒப்பந்த தொகைக்கு | ரூபா 5,000 |

### வழங்கல்கள், வேலைகள் மற்றும் சேவைகள் விவரம்

1. கட்டட நிர்மாணம், திருத்த வேலைகள் செய்தல், வீதி திருத்த வேலைகள், நீர் இணைப்புக்கள், மின் இணைப்புக்களை நிர்மாணித்தல் திருத்தம் செய்தல், அலுமினியப் பிரிப்பு, பொருத்து, கதவு வேலைகள், கட்டடங்களுக்கு வர்ணம் பூசுதல், கட்டட வேலைகளுக்கான அனைத்துப் பொருள்கள் வழங்குதல்.

2.காகிதாதிகள், எழுது பொருள்கள், நுகர்வுப் பொருள்கள்.

3.இலத்திரனியல், மின்சார, எந்திரவியல் பொருள்களை வழங்கல் (விவசாய, மீன்பிடி, வீட்டு போன்றன), திருத்துதல், பராமரித்தல்.

4.உணவு வகைகள், குடிதண்ணீர் வகைகள், பால் மா வகைகள், உள்ளூர் உற்பத்திப் பொருள்கள்.

5. மரம், உருக்கு, பிளாஸ்ரிக், எம்.டீ.எப், பைபர் கிளாஸ் தளவாடங்கள் வழங்கலும், திருத்துதலும்.

6.திரைச்சீலைகள், சீருடைகள், மேசை விரிப்புக்கள், படுக்கை விரிப்பு, மெத்தை, நில விரிப்புக்கள், பொன்னாடைகள்.

7.தோல் வகை உற்பத்திப் பொருள்களும், விளையாட்டுப் பொருள்களும்.

8.அச்சிடுதல், புத்தகம் கட்டுதல்,இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள், பிளாஸ்ரிக் பெயர் பலகைகள், அலுவலக அடையாள அட்டைகள்.

9.மோட்டார் வாகனங்களை வழங்கல், வாடகைக்கு வழங்கல், திருத்துதல் பராமரிப்புச் செய்தல், ரயர், ரியூப், பற்றறிகள், உதிரிப்பாகங்கள் வழங்கல்.

10.பாதுகாப்புச் சேவை, உள்ளக தொலைபேசி, ஒலிபெருக்கி, ஒலி வாங்கி, புகைப்படப் பிடிப்பு, ஒளிப்படப் பிடிப்பு, வளிபதனாக்கிகள், போட்டோப் பிரதி இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள், மலசல கூடங்கள் மற்றும் அலுவலக சுத்திகரிப்பு சேவை, சுத்திகரிப்புப் பொருள்கள்.

11. விவசாய, மீன்பிடி, சமூகநலன் பொருள்கள் வழங்கல்.

நா.வேதநாயகன், தலைவர்,
கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

# ஆனைக்கோட்டையில் வேரோடு சரிந்தது 300 வருடங்கள் பழைமையான மரம்!





யாழ்ப்பாணம், நவ.13

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டைப் பகுதியில் 300 வருடங்கள் பழைமையான மரம் ஒன்று வேரோடு சரிந்து விழுந்துள்ளது.

ஆனைக்கோட்டை தியாக சீலன் பூங்காவுக்கு அருகில் வீதியோரமாக இருந்த மரமே இவ்வாறு வேராடு சரிந்து விழுந்துள்ளது.

ஏறத்தாழ 300 வருடங்கள் பழைமை வாய்ந்த இந்த மரம் நேற்று முன்தினம் இரவு சரிந்து விழுந்துள்ளது.

நேற்றுக் காலை இந்த மரத்தை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளில் பிரதேச மக்கள் மற்றும் இராணுவத்தினர் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

## காணாமற்போன சிறுவன் சடலமாக மீட்கப்பட்டான்!

கொழும்பு, நவ. 13

திம்புல போகஹவத்த பிரதேசத்தைச் சேர்ந்த காணாமற்போயிருந்த சிறுவன் நேற்று போவத்தைக் கைத்தொழிற்சாலைக்கு அருகில் சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

மகாவலி கங்கைக்கு நீர் வடிந்து செல்லும் ஓடை ஓரத்தில் வைத்தே சிறுவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

நேற்று முன்தினம் மாலை முதல் இந்த சிறுவன் காணாமற்போயிருந்தான் என தெரிவிக்கப்படுகின்றது.

## தபால் கட்டணங்கள் உயரும் சாத்தியம்!

கொழும்பு, நவ. 13

மக்களுக்குச் சுமை தராத வகையில் தபால் கட்டணங்கள் உயர்த்தப்படவுள்ளன என தபால் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர் ஏ.எச்.எம்.ஹலீம் கூறியுள்ளார்.

நீண்ட காலமாக தபால் கட்டணங்கள் திருத்தப்படாமல் இருக்கின்றன.

அரசின் கொள்கைகளுக்கு ஏற்பவே இந்தக் கட்டண உயர்வு விதிக்கப்படவிருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கொரிய வாரம் பிரகடனம்!

கொழும்பு, நவ. 13

கொரியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான இராஜ தந்திர தொடர்புகளுக்கு 40 வருடங்கள் நிறைவடைந்தமையை முன்னிட்டு கொரிய வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் இந்த வாரத்துக்கான நிகழ்ச்சி நிரல் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

கொரிய சர்வதேச புரிந்துணர்வு முகவர் நிலையத்தின் இலங்கை அலுவலகம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

இதன் ஊடாக இலங்கை இளைஞர் சமூகத்தினர் கொரிய நாட்டுக் கலாசாரம் மற்றும் மொழி தொடர்பிலான அறிவை பெற்றுக் கொள்வதற்கு வசதியாக இவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

விசேட கலாசார நிகழ்ச்சிகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமையும், புதன்கிழமையும் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன. கொரிய நாட்டின் திரைப்பட வைபவமும் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையில் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன வளவில் நடைபெறவுள்ளது.

கொரிய பேச்சுப்போட்டியொன்றும் எதிர்வரும் 18 ஆம் திகதி கொழும்புப் பல்கலைக்கழகத்தின் புதிய கலையரங்கில் நடத்தப்படவுள்ளது.

## முப்படையில் உயிரிழந்தோரின் நினைவு தினம்!



கொழும்பு, நவ.13

முப்படையில் சேவையில் ஈடுபட்டிருந்த போது உயிரிழந்தவர்களின் நினைவு தினம் மற்றும் பொப்பிமலர் நினைவு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கொழும்பு விகாரமாஹா தேவி பூங்காவில் உள்ள நினைவு ஸ்தூபி அருகில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சபா நாயகர் கருஜயசூரிய, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (க)

காலைக்கதிர் Kalaikkathir



# மண்முனை வடக்கு இலக்கிய விழா







மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலகம் கலாசார அதிகார சபை மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடத்தும் 2017 பிரதேச இலக்கிய விழாவும் , 'புதிய மழை' சிறப்பு மலர் வெளியீடும் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

இந்த நிகழ்வு மண்முனை வடக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் ஒழுங்கமைப்பில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் கே .குணநாதன் தலைமையில் பிரதேச செயலக டேபா மண்டபத்தில் நடைபெற்றது .

நர்த்தன பவனம் நாட்டியாலய மாணவர்களின் நாட்டியமும் ,கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கலாசார இலக்கிய போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்ற மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கலாசார உத்தியோகத்தர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக தத்துவக் கவிஞர் தேனகச் சுடர் கலாபூஷணம் பொன்னுசாமி தவநாயகம் , சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் என் . மணிவண்ணன் , தலைக்கோல் எம் .கே . கணபதிப்பிள்ளை , கிழக்கு மாகாண நிர்மாணிப்பு அபிவிருத்தி ஒன்றியத் தலைவர் வி. ரஞ்சிதமூர்த்தி, மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# படையெடுக்கும் யானைகள் பெரும் அச்சத்தில் மக்கள்!

மட்டக்களப்பு, நவ.13

அண்மைக் காலமாக காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ள நிலையில், பெரும் அச்சத்துடனேயே வாழ வேண்டியுள்ளது என மட்டக்களப்பு மாவட்டத்தின் பின்தங்கிய கிராம மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள, அதிகளவாக வாகனங்களும் பயணிக்கும் கொழும்பு வீதியில் காட்டு யானைகள் கூட்டம் கூட்டமாக வந்து செல்கின்றன எனப் பொது மக்கள் கூறிகின்றனர்.

யானைகள் எங்கிருந்து வருகின்றன என்று தெரியாமல் இருக்கின்றது எனவும் அப்பகுதி மக்கள் கூறியுனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் காட்டு யானைகளின் தாக்குதல் சம்பவங்கள் கடந்த காலங்களில் அதிகளவில் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், இது போன்று காட்டு யானைகள் கூட்டம் கூட்டமாகப் படையெடுக்கின்றமை மேலும் பல உயிரிழப்புகளை ஏற்படுத்தக் கூடும் என அந்த பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

# மதுவரி உத்தியோகத்தர் கஞ்சாவுடன் கைது!

மட்டக்களப்பு - கல்லடியில் உள்ள மதுவரித் திணைக்களத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர், கஞ்சா வைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் காத்தான்குடி நகரில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என, மட்டக்களப்பு குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதுவரித் திணைக்கள உத்தியோகத்தரிடமிருந்து, விற்பனைக்காகக் கொண்டு சென்ற 500 கிராமுக்கும் கூடுதலான கஞ்சா மீட்கப்பட்டது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர், கஞ்சா விற்பனையில் ஈடுபடுகின்றார் எனக் கிடைத்த ரகசியத் தகவலையடுத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட மதுவரித் திணைக்கள உத்தியோகத்தரை, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# 28 வருடங்களின் பின் சிக்கிய அரிய வகை மீன்!



திருகோணமலை, நவ.13

திருகோணமலை - மூதூர் கடற்பரப்பில் அரிய வகை இன மீனொன்று 28 வருடங்களின் பின் வலையில் சிக்கியுள்ளது என அப்பகுதியைச் சேர்ந்த மீனவரொருவர் தெரிவித்துள்ளார்.

வேலா என்ற இனத்தைச் சேர்ந்த இந்த மீன் ஐந்தடி நீளத்தையும், மூன்றடி அகலத்தையும் கொண்டது. 190 கிலோ கிராமைக் கொண்ட 'வேலா' மீன் அதிக பெறுமதியுடையது எனவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இரண்டு மீனவர்கள் நேற்றுமுன்தினம் மாலை சிறு தோணியில் கடலுக்குச் சென்ற வேளையிலே இந்த அரிய வகை 'வேலா' மீன்பிடிபட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# 'முன்பள்ளி மாணவர்களை சிறந்த கல்விமான்களாக மாற்ற வேண்டும்'





முன்பள்ளிச் சிறார்களை சிறந்த கல்விமான்களாக்கக் கூடியவாறு திறன்களை விருத்தி செய்கின்ற களமாக பாலர் பாடசாலைகள் விளங்குகின்றன என இராசமாணிக்கம் மக்கள் அமைப்பின் தவிசாளர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார். களுவாஞ்சிக்குடி நியூ ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தின்51ஆவதுநிறைவை முன்னிட்டு பாலர் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். இவர் மேலும் கூறுகையில்-

சின்னஞ்சிறார்களைச் சமூகத்திற்கு சிறந்த ஒழுக்கசீலர்களாகவும் கல்விமான்களாகவும் மாற்றக் கூடிய திறன்களை பாலர் பாடசாலைகளிலே வளர்த்தெடுக்க வேண்டும். அவர்களைப் பெற்றோர்கள் களிமண்களாகவே இந்தப் பாடசாலையில் சேர்க்கின்றனர். அந்தக் களிமண்ணை உருவமாக்குவது பாலர் பாடசாலை ஆசிரியர்களிலே தங்கியுள்ளது. பல பாடசாலைகள் வளங்களின்றிய நிலையில் கற்றல் உபகரணங்கள் இல்லாமல் இயங்கி வருகின்றன. அவ்வாறான பாடசாலைகளைத் தொண்டு நிறுவனங்கள் தங்கள் கவனத்தில் கொண்டு எமது சிறார்களின் எதிர்காலத்தை வளப்படுத்த முன்வர வேண்டும் எனத் தெரிவித்தார்.

(ப)

# சித்திரவதைக் குற்றச்சாட்டுகளினால் அழுத்தம் எதிர்கொள்ளும் இலங்கை!

கொழும்பு, நவ. 13

அண்மைக் காலங்களில் இலங்கையில் 50 இற்கும் அதிகமான தமிழர்கள் சித்திரவதை செய்யப்படுகின்றமை மற்றும் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டமை தொடர்பான அசோசியேட்டட் பிரஸ் (ஏ.பி) செய்தி நிறுவனத்தின் விசாரணை அறிக்கை கடந்த வாரம் வெளியிடப்பட்டது.

இதனையடுத்து, இலங்கை அரசுக்கு அழுத்தங்கள் அதிகரித்துள்ளன.

இது தொடர்பாக, ஏ.பி. செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த புதன்கிழமை, அசோசியேட்டட் பிரஸ் வெளியிட்டுள்ள புதிய குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று மருத்துவர்கள், உளவியல் நிபுணர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமை அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



## ஏபி செய்தி நிறுவனத்தின் விசாரணை அறிக்கையின் எதிரொலி

இதுதொடர்பாகக் கருத்து வெளியிட்ட, அமெரிக்க செனட்டின் ஜனநாயகக் கட்சி உறுப்பினரும், வெளிநாடுகளுக்கான அமெரிக்க உதவிகள் குறித்த உபகுழுவில் இடம்பெற்றிருப்பவருமான, பற்றிக் லெஹி, கைதுகள் தடுப்புகள் சர்வதேச தரநியமங்களுக்கு ஏற்பவே இடம்பெற வேண்டும்.

போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையிலேயே, அமெரிக்க செனட் ஒதுக்கீட்டுக் குழு இலங்கைக்கு உதவிகளை வழங்கியுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டில் இருந்து இலங்கை 76 மில்லியன் டொலரை அமெரிக்காவின் வெளிவிவகார உதவியாகப் பெற்றுள்ளது.

இந்தச் சித்திரவதைகள் கொடூரமானவை என்பதுடன், நல்லிணக்கம் மற்றும் நீதிக்கான இலங்கை அரசின் வாக்குறுதிகளுக்கு முரணானது.

இதற்குப் பொறுப்பானவர்களைத் தண்டிப்பதற்காக, சித்திரவதைகளுக்கான நம்பகமான ஆதாரங்களை தேடிக் கொண்டிருக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்தச் சித்திரவதைகள் தொடர்பாக சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று மருத்துவர்கள் பலர், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தடயவியல் நிபுணர்கள் என்ற வகையில் நாங்கள், இலங்கையில் சித்திரவதைகள் செய்யப்பட்டமையை அடுத்து, நாட்டை விட்டு வெளியேறிய நூற்றுக்கணக்கான இலங்கையர்களை பார்த்திருக்கிறோம்.

ஆட்சி மாற்றத்துக்குப் பின்னரும், இலங்கையில் இருந்து கவலை தரும் எண்ணிக்கையில் இத்தகைய வழக்குகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன என்று ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கு மருத்துவர்கள் தரப்பில் எழுதப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, அமெரிக்காவின் நாடாளுமன்ற வெளிவிவகாரக் குழுவில் இடம்பெற்றுள்ள ஜனநாயகக் கட்சியின் உயர்மட்டப் பிரதிநிதிகள் சபை உறுப்பினரான, எலியட் ஏஞ்சல், வொஷிங்டனில் உள்ள கொள்கை வகுப்பாளர்கள் இந்த சித்திரவதை அறிக்கைகளை உதாசீனப்படுத்த முடியாது என்று கூறியுள்ளார்.

இந்த அறிக்கைகளின் தீவிரத்தன்மையைக் கருத்தில் கொண்டு, இது தொடர்பாக முழுமையாகப் பொறுப்புக் கூறல் நடக்கும் வரை, இலங்கையுடனான, அமெரிக்காவின் மேலதிக இராணுவ உறவுகள் விடயத்தில் அமெரிக்கா கவனமாக இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜெனிவாவில் உள்ள இலங்கை தூதரகத்துக்குத் திரும்பத் திரும்ப அழைப்பை ஏற்படுத்திய போதும், பதிலளிக்கப்படவில்லை. வெள்ளிக்கிழமை அனுப்பப்பட்டமின்னஞ்சலுக்கும் பதில் இல்லை என்றும் ஏபி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (க)

# திடீரென சிங்கப்பூர் சென்றார் பிரதமர்!

கொழும்பு, நவ. 13

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, திடீரென சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். கடந்த வியாழக்கிழமை இரவு அவர், சிங்கப்பூருக்குத் தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன், சர்வதேச வர்த்தக மற்றும் அபிவிருத்தி மூலோபாய அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவும், சிங்கப்பூருக்குச் சென்றுள்ளார்.

எனினும், இந்தப் பயணத்தின் நோக்கம் வெளியிடப்படவில்லை. நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத்திட்ட விவாதம் நடந்து கொண்டிருக்கும் நிலையில், பிரதமர் திடீரென சிங்கப்பூர் சென்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை, நான்கு நாள்கள் பயணமாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 21 ஆம் திகதி புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்ளவிருக்கிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# உள்ளூராட்சிச் சபைகளுக்கு தெரிவாகும் 2,000 பெண்கள்

கொழும்பு, நவ. 13

புதிதாகத் தெரிவு செய்யப்படும் உள்ளூராட்சிச்சபைகளுக்கு 2 ஆயிரத்துக்கும் அதிகமான பெண் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர் என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிதாக அறிமுகப்படுத்தப்படும், கலப்பு தேர்தல் முறையின் கீழ், 25 வீதமான பெண்கள் உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட வேண்டும்.

இம்முறை, உள்ளூராட்சிச் சபைகளுக்கு 8 ஆயிரத்து 356 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.



நேரடியான- வட்டார முறைத் தெரிவில், பெண்களின் பிரதிநிதித்துவம் குறைந்து போனாலும், விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ், 25 வீத பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படும்.

இதன் மூலம், இம்முறை 2 ஆயிரத்துக்கும் அதிகமான பெண் பிரதிநிதிகள் உள்ளூராட்சிச் சபைகளுக்குத் தெரிவு செய்யப்படுவார்கள்.

கடந்த முறை உள்ளூராட்சிச் சபைகளில் 82 பெண்பிரதிநிதிகளே இடம் பெற்றிருந்தனர்.

அதேவேளை, இம்முறை வேட்பாளர் பட்டியலில் இடம்பெறவேண்டிய பெண்களுக்கான குறைந்தபட்ச ஒதுக்கீடுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, வட்டார முறை வேட்புமனுவில் 25 வீதமும், விகிதாசாரப் பிரதிநிதித்துவ வேட்புமனுவில் 50 வீதமும் பெண் வேட்பாளர்கள் இடம்பெற்றிருக்க வேண்டும்.

மேற்குறித்த வகையில் தேவையான பெண் வேட்பாளர்களை உள்ளடக்காத வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மருத்துவபீட மற்றும் கல்வி பயிற்சி நடவடிக்கைகள் இன்று ஆரம்பம்!

கொழும்பு, நவ. 13

அனைத்துப் பல்கலைக்கழக மருத்துவ பீட மற்றும் கல்வி பயிற்சி நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

இதற்கான அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன எனப் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக, களனிப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் திருமதி நிலந்தி டி சில்வா தெரிவிக்கையில்-

கல்வி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக கல்விசார் ஊழியர்களுடன் பேச்சு நடத்தி கால அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது எனக் கூறியுள்ளார்.

கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கின்றது என ருஹுணு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் சமன் விமலசுந்தரவும் குறிப்பிட்டுள்ளார்.

ஹர்ஷ டி சில்வா குழுவின் அறிக்கைக்கு அமைய மருத்துவ பீட மாணவர்கள் கல்வி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை ஆரம்பிக்க இணக்கம் தெரிவித்துள்ளனர்.

# சாரணர்களுக்கான சின்னம் சூட்டும் விழா

கொடிகாமம், நவ.13

மிருசுவில் விடத்தற்பளை கமலாசினி வித்தியாலய சாரணர்களுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலய கல்வி நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் கலந்து கொள்வார். (இ)

காலைக்கதிர் Kalaikkathir


# பெய்து வரும் தொடர் மழையினால் யாழில் வெள்ளப்பெருக்கு அபாயம்!

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ். மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் தொடர் மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடிய அபாயநிலை ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டில் ஏற்படும் வெள்ளப்பெருக்கை குறைப்பதற்கு வசதியாக தொண்டைமானாறு, அராலி, அரியாலை நாவற்குழி பகுதிகளில் உள்ள வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

மழை வெள்ளம் சமுத்திரத்துக்கு வெளியேற்றப்படுகின்றது என தடுப்பு அணைகளுக்குப் பொறுப்பான உயர் அதிகாரி அறிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் கடல் நீர் ஏரியின் உவர்ப்புத்தன்மையை நீக்கி நன்னீர் ஏரியாக மாற்றுவதற்கும், ஏரியுடன் சேர்ந்த கரையோரப்பகுதியை மேய்ச்சல் நிலங்களாகவும் பயிர்ச்செய்கைக்கு ஏற்ற நிலங்களாகவும் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கு வசதியாகவும் சமுத்திரத்தின் உப்புநீர் குடாக்கடல் நீர் ஏரியில் உட்புகாமல் தடுப்பதற்கும் வசதியாக தடுப்பு அணைகள் அமைக்கப்பட்டு, தடுப்பு அணையில் குடாநாட்டின் மேலதிகமான மழை வெள்ளத்தை சமுத்திரத்துக்கு வெளியேற்றுவதற்கு வான் கதவுகள் போடப்பட்டுள்ளன.

தொண்டைமானாறு 34 வான் கதவுகளும் அராலி 10 வான் கதவுகளும் அரியாலை 42 வான் கதவுகளும் நாவற்குழியில் 42 வான் கதவுகளும் இணைப்புச் செய்யப்பட்டிருக்கின்றமையோடு நீண்டகால நோக்கோடும் கூடிய வேலைத் திட்டமாக குடாக்கடல் நீரேரி வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தத் தடுப்பு அணையில் தொண்டைமானாறு தடுப்பு அணையோடு தொடர்பான அபிவிருத்தி வேலைகள் தற்போது 60 கோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



மழை தொடர்ந்து பெய்து வருவதால் வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவு மற்றும் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவு, அரியாலைப் பகுதி, அராலிப் பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடிய அபாயநிலை இருப்பதாக அச்சம் தெரிவிக்கப்பட்டது.

குடாக்கடல் நீரேரி தடுப்பணை வேலைத்திட்டம் மற்றும் பராமரிப்பு வேலைகள் வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தடுப்பு அணை மற்றும் அதனால் ஏற்படக்கூடிய வெள்ளப்பெருக்கு தொடர்பாக தடுப்பணைக்குப் பொறுப்பான உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தவை வருமாறு:-

தடுப்பணைகளுக்கு மழை வெள்ள நீர் மட்டம் தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட அளவுத் திட்டங்கள் உள்ளன.

இந்த அளவுத்திட்டத்தை கருத்தில் கொண்டும் யாழ். மாவட்டத்தின் தொடர்மழை மற்றும் காலநிலையை கருத்தில் கொண்டும் கடந்த எட்டு தினங்களுக்கு முன்னரே நான்கு தடுப்பணைகளில் இருந்தும் மழை வெள்ளநீரை சமுத்திரத்திற்கு வெளியேற்றுவதற்கு வசதியாக வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

எதிர்பார்த்த அளவு மழை வெள்ளம் சமுத்திரத்துக்கு வெளியேறிக் கொண்டிருக்கிறது.

குடாநாட்டில் நீரேரி கரையோரக் கிராமங்களுக்கு வெள்ளம் ஏற்படலாம் என எதிர்வு கூறப்பட்ட வெள்ளப்பெருக்கு அபாயம் தவிர்க்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

## தினசரி ராசி பலன் 13.11.2017

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஐப்பசித் திங்கள் 28 ஆம் நாள் திங்கட்கிழமை தசமித் திதி பகல் 12.25 மணிவரை. பின்னர் ஏகாதசி. நட்சத்திரம் பூரம் பகல் 11.50 மணிவரை. பின்னர் உத்தரம். சித்தம் பகல் 12.25 மணிவரை. அசுபயோகம்.*

**ராகுகாலம்** - காலை 7.32 மணிமுதல் 8.59 மணிவரை.

**சுபநேரம்** - பகல் 12.11 மணிமுதல் 1.41 மணிவரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி**- ஐப்பசி மாத தேய்பிறை ஏகாதசி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** பூரம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்:** இன்பமான நாள். வேலை தேடுவோருக்குத் திறமைக்குத் தகுந்த வேலை கிடைக்கும். திருமண வாய்ப்புகள் கனிந்து வரும். விட்டுப் பிரிந்த உறவுகள் மீண்டும் இணையும் வாய்ப்பு உண்டாகும்.

**ரிஷபம்:** கவலையான நாள். வரவேண்டிய பணம் வரத் தாமதமாகும். வியாபாரத்தில் பொருள்கள் தேங்கிக் கிடக்கும். சிலருக்குச் செய்யும் தொழிலை இழக்க நேரும். உடலில் ரோகங்கள் உண்டாகும்.

**மிதுனம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளித்து ஓரளவு வருமானம் பெறுவார்கள்.

**கடகம்:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் வளமாக இருக்கும். தொழில், வியாபாரம் ஆக்கபூர்வ முன்னேற்றம் தரும். உத்தியோகத்தர்களின் கோரிக்கைகள் நிறைவேறும்.

**சிம்மம்:** மேன்மையான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். பிள்ளைகளால் பெருமையும், மகிழ்ச்சியும் உண்டாகும். தொழில் மேன்மை உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் திருப்தி உண்டாகும்.

**கன்னி:** சஞ்சலமான நாள். வருமானம் குறைந்து காணப்படும். எதிலும் சரியான முடிவு எடுக்க முடியாமல் திண்டாட்டம் ஏற்படும். தொழிலில் கடின உழைப்பால் உடலும், மனதும் சோர்வடையும்.

**துலாம்:** இனிமையான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். நீண்டநாள கனவுகள் நனவாகும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். சகோதர உறவு வலுவடையும.

**விருச்சிகம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். எதிர்பார்த்த கருமங்கள் சிறு தடங்கலுக்குப்பின் வெற்றியடையும். அயலவருடன் அளவுடன் பேச்சு வைத்துக் கொள்ளவேண்டும்.

**தனுசு:** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். எந்தவொரு செயலையும் திட்டமிட்டு செய்து முடிப்பார்கள். முக்கிய முடிவுகளில் பெரிய மனிதர்களின் ஆதரவு கைகொடுக்கும்.

**மகரம்:** அலைச்சல் மிகுந்த நாள். தொழில் சம்பந்தமான அலைச்சல்கள் அதிகரிக்கும். வேலை தேடிச் சிலர் அலைவார்கள். தொழிலாளர்கள் தொழில் வாய்ப்புகளைத் தேடுவர்.

**கும்பம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். தொழிற்பிரிவினர் ஓரளவு முன்னேற்றம் அடைவார்கள். வியாபாரிகளுக்குச் சுமாரான வியாபாரம் இருந்துவரும்.

**மீனம்:** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். உத்தியோகத்தர்களும், தொழில் பிரிவினரும் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள். மாணவர்கள் உற்சாகமான மனநிலையுடன் கல்வியில் ஈடுபடுவார்கள்.

**சந்திராட்டமநாள்: உத்தரம் 2 ஆம், 3 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் முதலாம், 2 ஆம் பாதங்கள் ஆகிய நட்சத்திரங்களில் தோன்றியோர் இன்று சுபகருமங்கள் ஆரம்பிக்கின்றமையைத் தவிர்க்கவும்.**

# தெல்லிப்பழை வைத்தியசாலையில் இலவச பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை

## இன்றுமுதல் 3 தினங்கள் இடம்பெறும்

தெல்லிப்பழை, நவ. 13

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இன்று திங்கட்கிழமை முதல் புதன் கிழமை வரை - மூன்று நாள்களுக்கு - இலவசமான பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை இடம் பெறும்.

போர் மற்றும் காரணங்கலால் எரிகாயங்கள், தீக்காயங்களுக்கு இலக்காகிப் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த விசேட சிகிச்சை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு கொட்டாஞ்சேனை வட்ட லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்தவரும் லயன்ஸ் கழகத்தின் 2 ஆவது உப மாவட்ட ஆளுநர் தேர்வில் போட்டியிடுபவருமான லயன் கலாநிதி அமுதா கோபாலனின் ஏற்பாட்டிலேயே இந்த சத்திரசிகிச்சை இடம்பெற உள்ளது.

அமெரிக்காவில் இருந்து சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர்கள், தாதியர்கள் மற்றும் அவர்களுக்கான உதவியாளர்கள் கொண்ட 35 பேர் நேற்று முன்தினம் கட்டுநாயக்காவை வந்தடைந்து, நேற்று நீர் கொழும்பில் இருந்து புறப்பட்டு மாலை தெல்லிப்பழை வந்தடைந்தனர்.

நேற்று மாலையே இந்த வைத்திய நிபுணர்கள், சிகிச்சை பெற வருகை தந்த நோயாளர்களின் சிகிச்சையின் தரம் பற்றி ஆய்வு செய்தனர்.

இன்று காலை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு மாநாட்டு மண்டபத்தில் சம்பிரதாயபூர்வமாக நிகழ்வு ஆரம்பமாகும்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர், லயன் கலாநிதி அமுதா கோபாலன் ஆகியோர் இணைத் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன் கமிலஸ் பெர்னாண்டோ தம்பதிகள் கலந்துகொள்வர்.

கடந்த வருடமும் இதே போன்று லயன் அமுதா கோபாலனால் ஒழுங்கமைக்கப்பட்ட பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையின் போது 45 நோயாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, சிகிச்சை பெற்றனர். வடக்கு மாகாணத்துக்கு வெளியே இருந்தும் நோயாளர்கள் கடந்த வருடம் வந்து சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

# மின் தடை அறிவித்தல்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை-

**கிளிநொச்சிப் பிரதேசத்தில்** - கௌதாரிமுனைப்பிரதேசம், ஓலுமடு, சேனைப்புலவு, ஒதியாமலை, பட்டிக்குடியிருப்பு, மருதோடை, கற்குளம், கோவில் புளியங்குளம், நெடுங்கேணி மொபிற்றல் கோபுரம், நெடுங்கேணி நீர்ப்பாசன சபை, கனகராயன்குளம், குறிசுட்டகுளம், பரசன்குளம், புதுக்குளம், புத்தூர், புளியங்குளம் -

**வவுனியா பிரதேசத்தில்** குருக்கள்புதுக்குளம், குருக்களூர், பறையனாலங்குளம், நீலியாமோட்டை, நேரியகுளம், சின்னசிற்பிக்குளம், இலுப்பைக்குளம், அழகாபுரி, துட்டுவாகை, முதலியார்குளம், கப்பாச்சி, முகத்தாங்குளம், கந்தசாமி நகர், நித்திக்குளம், சண்முகபுரம், கங்கன்குளம், செட்டிகுளம், புளியாளங்குளம், காந்திநகர், அரசடிகுளம், கஜசிங்கபுர முகாம், செட்டிகுளம் தொலைத்தொடர்பு நிலையம், வலயம் 06, செட்டிகுளம் வைத்தியசாலை, பறையனாலங்குளத்திலிருந்து முகத்தான்குளம் வரை, மெனிக் பாம் -

ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக் கும் என்று மின்பொறியியலாளர் எம்.துவாரகன் அறிவித்துள்ளார். (இ)

# புதிய முறையின் கீழ்

# உள்ளூராட்சி தேர்தல்

## தெரிவு முறை குறித்து விரிவான விளக்கம்

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலுக்குரிய நாள்கள் விரைவில் அறிவிக்கப்படவுள்ளன. அரசியல் கட்சிகள் தேர்தலுக்கு மும்முரமாகத் தயாராகி வருகின்றன. இம்முறை தேர்தல் புதிய முறையில்– வட்டார மற்றும் விகிதாசார முறை என கலப்பு முறையில் – நடைபெறவுள்ளமையே சிறப்பு அம்சமாகும்.

இந்தத் தேர்தல் எவ்வாறு நடக்கும்? இரண்டு முறைகளிலும் எவ்வாறு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவார்கள்? வாக்காளர்கள் எவ்வாறு வாக்களிப்பது? இதுபோன்ற கேள்விகளுக்கு மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் மொஹமட் விளக்கங்களை அளித்துள்ளார்.

**கட்டுப்பணம்**

வேட்புமனுத் தாக்கலுக்கான காலப்பகுதியின் இறுதி நாளுக்கு முதல்நாள் 12 மணிக்கு முதல் அரசியல் கட்சிகளும் சுயேச் சைக் குழுக்களும் தங்களது கட்டுப் பணத்தைச் செலுத்த வேண்டும். இம்முறை ஒரு புதிய ஏற்பாடு அமுலுக்கு வருகிறது. அதாவது, 2017 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க உள்ளூராட்சித் தேர்தல் திருத்த சட்டமூலத்தின் பிரகாரம் சுயேச்சைக் குழுக்கள் மட்டுமன்றி அரசியல் கட்சிகளும் தமது வேட்பாளர்களுக்காகக் கட்டுப்பணத்தைச் செலுத்தவேண்டும்.

சுயேச்சைக்குழு சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஒருவர் 5000 ரூபா வீதம் கட்டுப்பணம் செலுத்த வேண்டும். அரசியல் கட்சிகளின் வேட்பாளர் ஒருவருக்கு 1500 ரூபா வீதம் கட்டுப்பணம் செலுத்த வேண்டும். இம்முறை இது கலப்பு தேர்தல் முறை என்பதால் வட்டாரமுறையில் போட்டியிடுவர்களும் பிரதேச வாரி பட்டியல் முறையில் போட்டியிடும் வேட்பாளர்களும் கட்டுப்பணத்தைச் செலுத்த வேண்டியது அவசியமானது.

சிறிலங்காவில் செல்லுபடியாகும் நாணயம் ஊடாக இந்தக் கட்டுப்பணம் செலுத்தப்பட வேண்டும். அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில் கட்சியின் செயலாளர் அல்லது அவரால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட முகவரால் கட்டுப்பணம் செலுத்தப்பட வேண்டும்.

சுயேச்சைக்குழுவாயின் சுயேச்சைக் குழுவின் தலைவர் அல்லது அவரால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட முகவரால் கட்டுப்பணம் செலுத்த முடியும்.

கட்டுப்பணம் செலுத்திய அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்கள் தேர்தலில் ஓர் ஆசனத்தையேனும் பெற்றுக்கொண்டால் அவர்களின் கட்டுப்பணம் மீளச் செலுத்தப்படும். வேட்பு மனு நிராகரிக்கப்பட்டாலும் கட்டுப்பணம் மீளச் செலுத்தப்படும்.

**வேட்பு மனுத்தாக்கல்**

இம்முறை வேட்புமனுக்கள் ஒரே வேட்புமனுப் பத்திரத்தில் இரண்டு பகுதிகளாகத் தாக்கல் செய்யப்பட வேண்டும். அதாவது, ஒரே பத்திரத்தில் இரண்டு வேட்புமனு பகுதிகள் இருக்கும். வேட்பு மனுப்பத்திரத்தின் முதலாவது பகுதி வட்டாரங்களில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்குரியதாகும்.

வேட்புமனு செயற்பாடு தொடர்பில் கொழும்பு மாநகரசபையை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

அதாவது, புதிய தேர்தல் முறைமையின்படி உள்ளூராட்சி மன்றங்களுக்கான வட்டார எல்லை நிர்ணயங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்த வட்டாரங்களுக்கு வேட்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

**கொழும்பு மாநகரசபை**

கொழும்பு மாநகரசபையில் தனி அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படும் வட்டாரங்கள் 31ஆக உருவாக்கப்பட்டுள்ளன. அந்தவகையில், அந்த 31 வட்டாரங்களுக்கும் கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்கள் சார்பில் 31 வேட்பாளர்கள் நியமிக்கப்படவேண்டும்.

அடுத்ததாக கொழும்பு மாநகர சபையில் 13 வட்டாரங்களுக்கு இருவர் வீதம் தெரிவு செய்யப்படவேண்டியுள்ளது. அதாவது, இந்த 13 வட்டாரங்களிலிருந்து இரண்டு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவார்கள். அதற்கும் இந்த 13 வட்டாரங்களுக்கும் இருவர் வீதம் 26 பேரை அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் வேட்பாளர்களாகக் களமிறக்க வேண்டும். அதேபோன்று கொழும்பு மாநகரசபையில் ஒரு வட்டாரத்தில் மூவர் தெரிவு செய்யப்படக் கூடிய வகையில் மூன்று வட்டாரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு ஒருவட்டாரத்துக்கு மூவர் வீதம் ஒன்பது வேட்பாளர்களை அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் நியமிக்க வேண்டும்.

அந்தவகையில், ஓர் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழு கொழும்பு மாநகரசபையின் வட்டாரங்களுக்கு 31 + 26 + 9 என்ற வகையில் 66 வேட்பாளர்களைக் களமிறக்க வேண்டும். இந்த 66 பேரும் வேட்பு மனுப்பட்டியலில் முதல் பகுதியில் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களால் நியமிக்கப்பட வேண்டும். ஒன்று கூட குறையக் கூடாது.

இந்த 66 வேட்பாளர்களை 60 வீதமானவர்கள்என எடுத்துக்கொண்டால் மீதம் 40 வீதமே விகிதாசார முறையில் தெரிவு செய்யப்படுவார்கள். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் 60 வீத வட்டார




முறைமையிலும் 40 வீதம் விகிதாசார முறையிலும் நடைபெறவுள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

அது ஒரு முறைமையின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்படும். அதாவது ஓர் உள்ளூராட்சி மன்றத்தில் 60 வீதமான வட்டார முறைமையில் எத்தனை பேர் தெரிவு செய்யப்படுவார்கள்? விகிதாசார முறைமையில் எத்தனைபேர் தெரிவு செய்யப்படுவார்கள் என்பது ஒவ்வோர் உள்ளூராட்சி மன்றம் தொடர்பாகவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதனை அண்மையில் அமைச்சர் பைஸர் முஸ்தபா வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட்டிருந்தார்.

அந்தச் சட்டத்தின்படி கொழும்பு மாநகரசபைக்கு விகிதாசார மூலமாக 44 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். எனவே, இந்த 44 பேருடன் இன்னும் மூன்று பேரைக் கூடுதலாகக் சேர்த்து கொழும்பு மாநகரசபைக்கு ஒவ்வொரு கட்சி மற்றும் சுயேச்சைக்குழு சார்பில் 47 பேர் வேட்பாளர்களாகத் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

அந்த வகையில், கொழும்பு மாநகர சபைக்கு வட்டார முறைமையில் 66 மற்றும் விகிதாசார முறைமையில் 47 பேருமாக 113 வேட்பாளர்கள் கட்சி மற்றும் சுயேச்சைக் குழுக்கள் சார்பில் நியமிக்கப்படவேண்டும். அதன்படி, வட்டார முறைமையில் 66 பேரும் விகிதாசர முறைமையில் 44 பேருமாக 110 பேர் கொழும்பு மாநகரசபைக்குத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

அரசியல் கட்சியொன்று கொழும்பு மாநகரசபைக்கு வேட்பு மனுத்தாக்கல் செய்யப்படும்போது ஒரு வேட்பாளருக்கு 1500 ரூபா வீதம் ஒரு லட்சத்து 69 ஆயிரத்து 500 ரூபாவை கட்டுப்பணமாகச் செலுத்த வேண்டும். சுயேச்சைக் குழுவைப் பொறுத்தவரையில் ஒரு வேட்பாளருக்கு 5000 ரூபா வீதம் 5 லட்சத்து 65 ஆயிரம் ரூபா கட்டுப்பணமாகச் செலுத்த வேண்டும்.

**பெண் வேட்பாளர்கள்**

இதற்கிடையே புதிய சட்டமூலத்திற்கு அமைவாக ஒரு கட்சியின் சார்பில் அல்லது சுயேச்சைக்குழுவின் சார்பில் இரண்டு பகுதிகளைக் கொண்ட இந்த வேட்புமனுப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை வரையறை செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையை எடுத்துக் கொண்டோம் எனில் வட்டார முறை மூலம் 66 பேர் தெரிவு செய்யப்படவுள்ள நிலையில் அதில் 11 பேர் கட்டாயம் பெண் வேட்பாளர்களாகக் களமிறக்கப்பட



வேண்டும்.

அதேபோன்று விகிதாசார முறைமையில் களமிறக்கப்படும் வேட்பாளர்களில் 50 வீதமானவர்கள் பெண்களாக இருக்க வேண்டும். அதாவது, கொழும்பு மாநகரசபைக்கு விகிதாசாரம் மூலம் 47 வேட்பாளர்கள் களமிறக்க வேண்டிய நிலையில் அதில் 23 பேர் பெண்களாக இருக்க வேண்டியது சட்டமாகும்.

அப்படியாயின் மொத்தமாக கொழும்பு மாநகரசபைக்கு 66+47 என்ற வகையில் 113 வேட்பாளர்கள் களமிறக்கப்பட வேண்டியுள்ள நிலையில் அதில் 34 பேர் பெண்களாக இருக்க வேண்டும் என்பது சட்டம். இந்த விகிதம் மாறியமைந்தால் வேட்புமனு நிராகரிக்கப்பட்டு விடும் என்பதை மிகவும் தெளிவாகக் குறிப்பிடுகின்றோம்.

**வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்படல்**

இங்கு நாம் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படும் சந்தர்ப்பங்களையும் மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டியுள்ளது. புதிய சட்டத்தின்படி இரண்டு முறைகளில் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படும். அதாவது முழுமையான வேட்புமனு நிராகரிக்கப்படுகின்றமை ஒரு சந்தர்ப்பமாகவும் ஒரு வேட்புமனுவில் ஒரு வேட்பாளர் மட்டும் நிராகரிக்கப்படுகின்றமை மற்றுமொரு சந்தர்ப்பமாகவும் சட்டத்தால் வரையறுக்கப்பட்டுள்ளது.

**முழு வேட்பு மனுவும் நிராகரிக் கப்படுதல்**

வேட்புமனு முழுமையாக நிராகரிக்கப்படும் சந்தர்ப்பங்களை முதலில் பார்ப்போம்.

கொழும்பு மாநகரசபையை உதாரணமாக எடுத்தோமானால் 113 வேட்பாளர்கள் மொத்தமாக வேட்பு மனுவின் இரண்டு பகுதிகளிலும் உள்ளடக்கப்படாவிடின் அந்த வேட்பு மனு முழுமையாக நிராகரிக்கப்படும்.

தேவையான பெண் பிரதிநிதித்துவங்கள் குறிப்பிட்ட வீதத்தில் இடம்பெறாவிடின் வேட்புமனு முழுமையாக நிராகரிக்கப்படும். அதாவது கொழும்பு மாநகர சபைக்கு வட்டாரமுறையில் 11 பெண் வேட்பாளர்களும் விகிதாசார முறையில் 23 பெண் வேட்பாளர்களும் நியமிக்கப்படாவிடின் வேட்புமனு முழுமையாக நிராகரிக்கப்படும்.

கட்டுப்பணம் உரிய முறையில் செலுத்தப்படாவிடின் அப்போதும் முழுமையான வேட்புமனுவும் நிராகரிக்கப்படும்.

அடுத்ததாக அரசியல் கட்சியாக இருப்பின் செயலாளரும் சுயேச்சைக் குழுவாக இருப்பின் அதன் தலைவரும் கைச்சாத்திட வேண்டும். இல்லாவிடின் முழுமையாக வேட்புமனு நிராகரிக்கப்படும். இவர்களின் கையொப்பத்தை ஒரு சமாதான நீதிவான் முறையாக அத்தாட்சிப்படுத்த வேண்டும். இல்லாவிடின் அப்போதும் வேட்புமனு முழுமையாக நிராகரிக்கப்படும்.

வேட்புமனுவை கட்சியென்றால் செயலாளரும், அல்லது அவரால் அதிகாரம் அளிப்பட்ட முகவரும், சுயேச்சைக் குழுவென்றால் அதன் தலைவரும் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கையளிக்க வேண்டும். இவர்களைத் தவிர்த்து வேறு யாராவது கையளித்தால் அந்த வேட்பு மனு முழுமையாக நிராகரிக்கப்படும்.

**வேட்பு மனுவில் ஒருவர் மட்டும் நிராகரிக்கப்படுதல்**

தற்போது தனிப்பட்ட ரீதியில் வேட்பாளர்களின் வேட்புமனு நிராகரிக்கும் சந்தர்ப்பத்தை பார்ப்போம். 113 வேட்பாளர்களும் வேட்புமனுவில் கையொப்பமிடவேண்டும். அதில் ஒருவர் கையெழுத்திடாவிடின் அவருடைய பெயர் மட்டும் வேட்புமனுவிலிருந்து நிராகரிக்கப்படும். ஏனையவர்களுக்கு அதில் பாதிப்பு ஏற்படாது.

அதேபோன்று இந்த நாடு இரண்டாக பிளவுபடுவதற்கு எதிராக வேட்பாளர் ஓர் உறுதியுரை செய்ய வேண்டும். அதனை வழங்கத் தவறினால் அந்த வேட்பாளர் மட்டும் நிராகரிக்கப்படுவார்.

அந்த உறுதியுரையை வழங்கி அதில் அவர்கையொப்பமிடாவிடின்அவருடைய பெயர் மட்டும் நிராகரிக்கப்படும். அதேபோன்று கடந்த தேர்தல் முறையில் இளைஞர்கள் 40 வீதம் உள்ளீர்க்கப்பட வேண்டும் என்ற சட்டம் இருந்தது. இம்முறை அது 30 வீதமாக மாறியுள்ளது. ஆனால் அது கட்டாயமாக்கப்படவில்லை.

எனினும், ஒரு கட்சி தான் ஓர் இளைஞரைக் களமிறக்குவதாகக் குறிப்பிட்டால் அந்த வேட்புமனுவில் பிறப்புச்சான்றிதழில் அவர் இளைஞராக இருக்காவிடின் (வயது மட்டம் சட்டத்தில் உள்ளது) அவர் மட்டும் வேட்புமனுவிலிருந்து நிராகரிக்கப்படுவார். இதனுடன் வேட்புமனு விவகாரம் முடிவுக்கு வருகிறது.

(மிகுதி நாளை...)

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




**சீனாவின் பொருளாதார மூலோபாய நலன்களை நடப்பு உலக ஒழுங்கமைப்புக்குள் உள்ளடக்க முடியாது என் பதை ஜி இன் உரை சமிக்ஞை செய்கிறது. தனக்காக நிமிர்ந்து நிற்க வேண்டுமென்ற சீனாவின் விருப்பத்தை பிற நாடுகள் குறைமதிப்பீடு செய்துவிட வேண்டாமென அவர் எச்சரித்தார். அதன் நலன் களைப் பலவீனப்படுத்தும் எதையொன்றையும் சீனா ஏற்றுக் கொள்ளுமென யாரும் எதிர்பார்க்க வேண்டாம் என்று ஜி மாநாட்டு பிரதிநிதிகள் இடையே தெரிவித்தார்.**



தென் சீனக் கடல் மீதான சீன கடல் எல்லை உரிமைகோரல்களில் இருந்து பின்வாங்காமல், ஜி அவரது அறிக்கையின் அண்மித்து தொடக் கத்திலேயே அறிவிக்கையில், சர்ச் சைக்குரிய கடல்களில் உள்ள தீவு திட்டுக்கள் மீதான சீன கட்டுப்பாட்டை



ஸ்திரப்படுத்துவதே அவர் பதவிக் காலத்தின் முதல் ஐந்தாண்டின் குறிப் பிடத்தக்க நடவடிக்கை என்றார்.


யுரேஷிய பெருநிலத்தை சாலை, ரயில் மற்றும் கடல் மார்க்கமாக ஒருங் கிணைத்து, அவ்விதத்தில் சீனாவை ஐரோப்பாவுடன் இணைத்து, நேரடி யாக அமெரிக்க சுற்றிவளைப்புக்குக் குழிபறிக்கும் அவரது பெரும் உள்கட் டமைப்பு திட்டமான ‘ஒரே இணைப்பு, ஒரே பாதை’ திட்டத்தையும் அவர் பெருமையுடன் எடுத்துரைத்தார்.

ஆசியாவில் அமெரிக்க இராணுவ ஆயத்தப்படுத்தல் மற்றும் அச்சுறுத் தல்களுக்கு பதிலளிக்கையில், ஜி, 2050 வாக்கில் ஓர் ‘உலக தரம் வாய்ந்த’ சீன இராணுவத்தை ஏற்ப டுத்துவதற்கான பிரத்யேக இலக்கு களை அமைத்து, இன்னும் அதிக தீவிர ஆயுதப் போட்டி வரவிருப்பதை முன்அறிவித்தார். ‘ஓர் இராணுவம், போருக்காக தயாரிப்புச் செய்யப்படுகி றது. அனைத்து இராணுவ பணிகளும் ஒரு போரில் சண்டையிடுவதற்கும், போரில் ஜெயிப்பதற்கும் வல்லமை கொண்ட தரநிலைகளுக்கு ஏற்ப அமைக்கப்படும்’ என்று அவர் பட்ட வர்த்தனமாக அறிவித்தார்.

ஜி இன் உரையில் தொடக்கம் முதல் முடிவு வரை தேசியவாதத்தின் துர்நாற்றம் வீசியது. ‘சீன தேசம் ஒரு மகத்தான தேசம்; அது கடுமையான மற்றும் பாதகமான நிலைமைகளி னூடாக வந்திருந்தாலும், தோற்கடிக்க முடியாததாக நிற்கிறது. சீன மக்கள் மகத்தானவர்கள் அவர்கள் உழைப்பு மிக்கவர்கள், தைரியமானவர்கள், அவர்கள் முன்நோக்கி நகர்கின்ற மையை ஒருபோதும் நிறுத்தியது இல்லை’ என்றார்.

**அமெரிக்காவில் ட்ரம்ப் செய்கின்றமையைப் போன்றே, ஜி, சீன ஆளும் வர்க்கத்தின் நலன்களை ஆக்ரோஷமாக ஊக்குவிப்பதற்கு நாட்டுப் பற்றை மட்டும் தூண்டிவிட வில்லை, மாறாக பல மில்லி யன் கணக்கான தொழிலாள வர்க்கத்தை அதே நலன் களுக்கு அடிபணியச் செய்ய வும் முயல்கிறார். மிகப்பெரும் செல்வந்தர்களின் ஒரு சிறிய அடுக்கிற்கும் மக்களின் பெரும்பான்மையினருக்கும் இடையிலான ஆழ்ந்த பிளவையும், முதலாளித்துவ மீட்சியையும் உருவாக்கி உள்ள சமூக பதற்றங்கள் குறித்து ஜி க்கு மிகத் துல்லி யமாகத் தெரியும். மேற் கொண்டு விரிவடையக்கூடிய இந்த சமூக பிளவு, போர் முனைவு தீவிரமடைகையில், அதிகரித்த சமூக அமைதியின்மைக்கு மட்டுமே இட்டுச் செல்லும். இதனால் தான் ஜி ஒடுக்குமுறை அரசு எந்திரத்தைப் பலப்படுத் துவதற்கும் அழைப்பு விடுக்கிறார்.**





வட கொரியா விவகாரத்தில் ஆகட்டும், தென் சீனக் கடல் அல்லது ஆசியாவிலும் சர்வதேச அளவிலும் நிலவும் எண்ணற்ற ஏனைய வெடிப்பு புள்ளிகளில் ஆகட்டும், தொழிலாள வர்க்கம் தலையிடாமல், மோதலைத் தவிர்க்கவியலாது. அமெரிக்க ஏகா திபத்தியம் அதன் உலக மேலாதிக் கத்துக்குச் சீனாவை அதன் முக்கிய சவாலாகக் கருதுகிறது. சீன முதலாளித் துவமோ வொஷிங்டனின் மேலாதிக் கத்தில் நிறுவப்பட்ட நடப்பு உலக ஒழுங்கமைப்பின் கட்டுப்பாடு களுக்கு எதிராகப் போராடிக் கொண்டி ருக்கிறது.

சீனா மற்றும் அமெரிக்காவிலும், ஆசியாவிலும், உலகெங்கிலுமான தொழிலாளர்கள் மற்றும் இளைஞர் களுக்கு, பெரும் செல்வந்தர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான ஒரு போரில் தாங்கள் போர்கள பலிப் படைகளாக பயன்படுத்தப்படுவதில் எந்த ஆர்வமும் கிடையாது.

உண்மையான சோசலிசத்தின் அடிப்படையில், அதாவது ஒருசில ரின் பாரிய இலாபங்களுக்காக அல்ல, பெரும்பான்மையினரின் அத்தியாவ சிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற் காக சமூகத்தை மறுஒழுங்கமைக் கும் அடிப்படையில், ஒரு சர்வதேச இயக்கத்தில் ஒன்றுபடு வதன் மூல மாக மட்டுமே போர் முனைவைத் தடுத்து நிறுத்த முடியும். இந்த முன் னோக்கிற்காகவே நான்காம் அகிலத் தின் அனைத்துலக குழுவும் உலகெங் கிலுமான அதன் பிரிவுகளும் போராடி வருகின்றன.

(கேள்வி தொடரும்)

# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 04

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. ‘உன்னைச் சரணடைந்தேன்’ என்ற அவரது தொகுப்பில் ‘யாழில் கம்பன்’ பற்றிய தொடர் பதிவு இது.



## யாழ். இந்துவில் எனது முதல் பேச்சு

### ஊரில் எனது இலக்கிய முயற்சிகள்

இலக்கிய ஆர்வத்தால் என் தாயாரின் ஊரான சண்டிலிப்பாயில், முதன்முதலாக ஓர் இலக்கிய விழாவை நடத்தினேன். அதுதான் ஊரில் எனது முதல் இலக்கிய முயற்சி. எங்கள் ஐயனார் கோயில் வீதியில் அந்தவிழா நடந்தது. பின்தங்கிய கிராமம் அது. எங்கள் ஊர்க்காரர்கள் அதிக இலக்கியப் பயிற்சி இல்லாதவர்கள். ஒன்றுவிட்ட, ஒன்றுவிட்ட, ஒன்றுவிட்ட என உறவு சூழ்ந்த கிராமம் அது. அண்ணன், தம்பி, மாமன், மச்சான், அயல் இளைஞர்கள் என, இலக்கியத்தோடு, எந்தச் சம்பந்தமும் இல்லாதவர்களையெல்லாம் ஒன்றுதிரட்டி, அந்த விழாவை நடத்தினேன். அந்த விழாவிலும் பட்டிமண்டபம், கருத்தரங்கம், கவியரங்கம் ஆகிய நிகழ்ச்சிகளே நடந்தன. அப்போது யாழ். பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்களாய் இருந்த, பேராசிரியர் சண்முகதாஸ், ஞானா குலேந்திரன் போன்றோரும், மனோன்மணி சண்முகதாஸ், மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் ஆகியோரும், எங்கள் ஆசிரியர்களான சிவராமலிங்கம், தேவன், வித்துவான் வேலன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

### ஊரில் பகை

அங்கும் பட்டிமண்டபத்தில் எனக்கெதிராக என்னுடைய மச்சான், உருத்திரகுமார் ஓர் அணியில் பேசினான். ஓரளவு அந்த நிகழ்ச்சி வெற்றியாய் அமைந்தது. அந்த வெற்றி தந்த உற்சாகத்தில் அடுத்த ஆண்டும் விழா எடுத்தோம். அந்த விழாவுக்கு நிதி சேகரிக்க, சங்கானை தியேட்டரில், ‘மதுரை வீரன்’ படம் ஓட்டினோம். ஊரெல்லாம் திட்டு வாங்கி, இரண்டு ரூபா ‘ரிக்கெற்’ விற்று எழுநூற்றி ஐம்பது ரூபா பணம் சேர்த்தோம். இந்த விழாவின் போது குமாரதாசன் எனக்கு முழு ஆதரவையும் வழங்கினான். விழாவில் கலந்த அறிஞர்கள் என்னைப் பாராட்ட, உறவுக்குள் பொறாமைத் தீ மெல்ல எழும்பத் தொடங்கியது. அந்தத் தீ பகையாய் வெடிக்க, அத்தோடு ஊரில் தொடங்கிய என் இலக்கிய முயற்சிகள் நின்றுபோயின.

## கழகம் பிறந்த கதை

22.05.1980

‘ஏ.எல்.’ பரீட்சையில் தோற்றமையால், பல்கலைக்கழகம் புக முடியாமற்போக, இலக்கிய ஆர்வத்தால் ஒன்றிணைந்திருந்த நண்பர்கள், எமக்கென ஓர் இலக்கிய அமைப்பைத் தொடக்க முடிவு செய்தோம். நாங்கள் அனைவரும் விஞ்ஞான மாணவர்கள் ‘ஏ.எல்.’ பரீட்சையின் மூன்றாவது முயற்சிக்காக, இரசாயனம் பயிலவென ஒரு தனியார் வகுப்புக்குச் சென்று வந்தோம். அந்த வகுப்பை நடத்தியவர் ஓர் ஆசிரியை. கமலாசினி என்பது அவர் பெயர். எங்கள்மேல் நிறைந்த அன்பு கொண்டவர். ஒருநாள், வகுப்புக்காக அவர் வீட்டில் கூடியிருந்தபோது, கழகம் அமைக்கும் எங்கள் முயற்சி ஆரம்பமானது. திகதி 22.05.1980. இரசாயனப் பாடக் கொப்பியின் பின்பக்கத்தில், ‘இலங்கைக் கம்பன் கழகம்’ எனப் பெயரிட்டு, எங்கள் கழகத்தை ஆரம்பித்தோம். ‘‘நான் ஏன் தலைவனாய் இருக்கக்கூடாது?’’ என்று திருநந்தகுமார் கேட்க, அந்தப் பதவி அவனுக்கு வழங்கப்பட்டது. உயிர் நட்பின் காரணமாகக் குமாரதாசன் செயலாளர் பதவி ஏற்றான். வியாபாரக் குடும்பப் பின்னணியோடு இருந்த, சுருவில் மாணிக்கவாசகர் பொருளாளரானான். நான் அமைப்பாளரானேன். தேவதைகள் வாழ்த்திய ஒரு தருணத்தில், அன்று இட்ட பிள்ளையார் சுழிதான் இன்றைய கம்பன் கழகம். இதுதான் எங்கள் கழகம் பிறந்த கதை.



### இலங்கைக் கம்பன் கழகம், அகில இலங்கைக் கம்பன் கழகமாயிற்று

கழகம் அமைத்த பிறகுதான், இலங்கைக் கம்பன் கழகம் என்ற பெயரில், ஏற்கனவே ஒரு கழகம் இருந்த உண்மை தெரியவந்தது. ஆசிரியர் சொக்கன் அதன் செயலாளராய் இருந்திருந்தார். நீதிபதி எச்.டபிள்யூ.தம்பையா அதற்குப் பெருந்தலைவராய் இருந்தாராம். பின்னாளில் கொழும்பு சென்று, மாணிக்கவாசகரின் தமையன் கந்தசாமியுடன் நானும் குமாரதாசனும், அவரை ஒருதரம் சந்தித்திருக்கிறோம். அவர்களின் கழகம், **கம்பன்** என்ற பெயரில் ஒரு சஞ்சிகையைக் கூட நடத்தியிருக்கிறது. அவர்கள் விழா ஒன்றையும் எடுத்ததாகக் கேள்வி. அந்த விழாச் செலவுத் தகராறில், அந்தக் கழகச் செயற்பாடுகள் நின்றுபோனதாகப் பின்னர் தெரியவந்தது. ஏற்கனவே இருந்த பெயரில் கம்பன் கழகம் அமைத்தால், குழப்பம் வரும் என்பதால், எங்கள் கழகத்தின் பெயரை, ‘**அகில இலங்கைக் கம்பன் கழகம்**’ எனப் பின்னர் மாற்றினோம்.

### எங்கள் கழக நிர்வாகம்

இவ்விடத்தில் எங்கள் கழகத்தை வளர்த்தெடுத்த, ஆரம்பகால உறுப்பினர்கள் பற்றி அறிமுகம் செய்ய மனம் விரும்புகிறது. நாங்கள் ஓர் இலக்கிய அமைப்பின் உறுப்பினர்களாய், சம்பிரதாயபூர்வமாக என்றும் செயற்பட்டமை கிடையாது. ஒரு குடும்பமாகவே செயற்பட்டோம். ஒருநாள் கூட கம்பன் கழகத்தின் நிர்வாகக் கூட்டம் என்று நாம் தனியாக ஒன்றுகூடியதில்லை. சென்ற கூட்ட அறிக்கை, ஆமோதித்தல், ஆட்சேபித்தல் என்பதெல்லாம், எங்கள் அமைப்பில் இருந்ததேயில்லை. நாம் சந்திக்கும் நாள்கள் எல்லாம் நிர்வாகக் கூட்டம் தான். புதிதாக ஒரு முயற்சி செய்வதென்று நான் முடிவுசெய்தால், அது பற்றி மற்றவர்களோடு கலந்து கொள்வேன். சூடாக விவாதம் நடக்கும். ஆனால், முடிவை நான்தான் எடுப்பேன். நான் முடிவெடுத்த பின்பு ஆட்சேபித்தவர்களும், அதைத் தங்கள் முடிவாகவே கருதிச் செயற்படுவார்கள். ஒருவேளை என் முடிவுகள் தோற்றால் ‘‘நான் முன்னரே சொன்னேன் பார்த்தாயா?’’ என்று, கைகொட்டிக் கொண்டாடமாட்டார்கள். அதைத் தங்கள் தோல்வியாகக் கருதி, வெற்றியாக்க என்னைவிட அதிகம் முயல்வார்கள். அதுதான் எங்கள் நிர்வாகத்தின் சிறப்பு. மூன்று தலைமுறையினரோடு இன்றுவரை வாழ்ந்துவிட்டேன். அன்று என்ன நிலையோ அதுதான் இன்றும். வளர்ந்த ஒன்றைப் பராமரிப்பதைவிட, புதிதாய் ஒன்றை வளர்ப்பதற்குத் தியாகம் அதிகம் வேண்டுமல்லவா? அந்தத் தியாகத்தைச் செய்தவர்கள் பற்றிக் கீழே சொல்லுகிறேன்.


### குமாரதாசன்

யாழ். இந்துக் கல்லூரியில் ‘ஏ.எல்.’ வகுப்பில் படித்தபோது, எனக்கு வரமாகக் கிடைத்த நண்பன் இவன். இவனது சொந்த ஊர் நெடுந்தீவு. தந்தையார் ஒரு பண்டிதர். கல்வியங்காட்டில் இவர்களின் குடும்பம் இருந்தது. முற்பிறவித் தொடர்பால் அமைந்த நட்பு இது. எனக்காக இவன் செய்த தியாகங்களுக்கு ஓர் அளவில்லை. கம்பன் கழகம் தொடங்குவதற்கு முன்னரே எங்கள் நட்புத் தொடங்கிவிட்டது. நான் ஆரம்பகாலப் பேச்சாளனாக இருந்த நேரமது. அப்போதெல்லாம் சைக்கிளில்தான் போய்ப் பேசவேண்டும். ஒரு பேச்சுக்கு, பத்து ரூபா சன்மானம் தருவார்கள். வெளியூர்ப் பேச்சுகளுக்கெல்லாம் குமாரதாசன் தன் உடல்நோ பாராமல், என்னைச் சைக்கிளில் அழைத்துச் செல்வான். இவனே, எமது கம்பன் கழகத்தின் முதற் செயலாளன். கம்பன் கழகத்துக்காக உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணம் செய்யத் தயாராகி இருந்தவன். படிக்கக்கூடியவனாக இருந்தும், கம்பன் கழக ஈடுபாட்டால் மேற்படிப்பைத் தொலைத்தவன். அழகப்பா பல்கலைக்கழகத்தில், கம்பனடிப்பொடி பெற்றுத்தந்த பட்டப்படிப்பு ‘அட்மிஷன்’ ஐயும், எனக்காக விட்டெறிந்து விட்டு, கம்பன் பணியாற்ற வந்தவன். தன்மேல் எல்லையில்லா அன்பு கொண்டிருந்த பெற்றோரையும் சகோதரர்களையும், சிலகாலம் எனக்காகப் பகைத்துப் பிரிந்தவன். கம்பன் கழகத்தின் வளர்ச்சிப்படி ஒவ்வொன்றிலும், இவனது உண்மை உழைப்பு ஆழப்பதிந்துள்ளது. வெளி



நாட்டுக் கல்வி, வெளிநாட்டுப் பயணம் என்று, தன்னைத் தேடி வந்த அத்தனை வாய்ப்புகளையும், கம்பன் கழகத்துக்காகப் புறந்தள்ளியவன். என் குருநாதர் இலங்கை வந்திருந்தபோது, அவருக்குப் பரிசு கொடுக்க வழியில்லாமல் நான் தவிக்கையில், தன் ஒரே சகோதரியின் திருமணத்தில் பரிசாகக் கிடைத்த மோதிரத்தை, பதைப்பின்றிக் கழற்றிக் கொடுத்தவன். முடிவில் என்மேல் கொண்ட அன்பால், எந்தவிதப் பயனும் பெறாமல் என் தங்கையைத் திருமணம் செய்தான். இவனது மென்மை இயல்பால் இவனை விரும்பாதார் எவருமிலர். யாழ். பல்கலைக்கழக நூலகத்திலும், பின்னர் இரசாயனவியல் ஆய்வு கூடத்திலும் பணியாற்றினான். 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தை விட்டு இடம்பெயர்ந்த பின்பு, இனி, கழகம் பிழைக்குமா? என்ற சூழ்நிலையில், மனவருத்தத்தோடு கழகத்தையும் என்னையும் பிரிந்து, அவுஸ்திரேலிய நாடு சென்றான். தேசங்கடந்தாலும் கழகத்திலும் என்னிலும், நேசம் கடக்காமல் இன்றும் வாழ்கிறான். சுயநலமே அறியாத விநோதப்பிறவி. அவன் மனைவியும், மகனும், ‘கழகத்துக்காய் பாடுபட்டு வாழ்க்கையைத் தொலைத்த ஏமாளி’ என அவனைத் திட்டிக் கொண்டேயிருந்தார்கள். இன்று மனைவியை இழந்து தனித்த பின்பும், கம்பன் பணியாற்ற விரும்பி நிற்கிறான்.

(தொடரும்...)




# இலவம் பஞ்சு மரம்

**தாவரவியல் பாகுபாடு**

தமிழ்ப்பெயர் - இலவு அல்லது இலவம்
பொதுப்பெயர் - ஜாவா பஞ்சு (Java cotton),
ஆங்கிலப்பெயர் - Kapok silk cotton, Java kapok silk cotton, java white cotton
குடும்பம் - மல்வேசியே
போனம் - சீபா
இனம் - பெண்டண்ட்ரா Ceibapentandra

**அறிமுகம்**

இலவம் பஞ்சில் துயில் எனும் ஔவையாரின் கூற்றும் தொன்று தொட்டேயுள்ள மரபாகும். எனினும் பஞ்சு மரம் வளர்த்தால் நெற்று வெடித்து காற்றில் பஞ்சு பறப்பதுபோல் குடும்பமும் பஞ்சாய் பறந்து விடும் என்ற மூடநம்பிக்கையும் அநேக மக்களிடையே நிலவிவருகிறது.

பச்சைகாய்கள் முற்றிபழும் உண்ணலாம் என இலவுகாத்த கிளி ஏமாந்து போயிருக்கலாம். ஆனால், இலவு பயிர்ச் செய்கையில் குறைந்த செலவில் கூடிய இலாபம் பெறமுடியும் என்பதில் மாற்றுக் கருத்தே இல்லை.

**தோற்றம் மற்றும் பரம்பல்**

இலவ மரம் என்னும் மல்வேசிய குடும்பத்தைச் சார்ந்த மரம்வெப்ப வலயத் திற்குரிய மரமாகும். இலவம் பஞ்சு மர மானது அமேசன் நதிக்கரையில் தோற்றம் பெற்று மெக்ஸிகோ, மத்திய அமெரிக்கா மற்றும் கரீபியன் தீவுகளிலிருந்து ஆசியாக் கண்டம் வரை பரவியதாக அறியப்படுகிறது.

**பண்புகள்**

இலவ மரம் 70 -77 மீற்றர் வரை வளரக்கூடியது. மிக நீளமான கிளைகளையும் உடையது. இலவம் .உற்பத்தி செய்யும் காய்களில் பெறப்படும் நார் பொருள் இலவம் பஞ்சு ஆகும். இதன் பஞ்சை பட்டுப்பஞ்சு என்றும் அழைப்பர். இதற்குக் காரணம் பஞ்சில் உள்ள மினுமினுப்பும் இதன் தோற்றமும் பட்டைப்போல இருப்பது தான். நீர் உறிஞ்சும் தன்மையற்றது. அதிகப்படியான மிதக்கும் தன்மையுள் ளது. 30 மடங்கு எடையை தாங்கக்கூடியதும் நீரில் மிதக்கும் தக்கையைவிட ஏழுமடங்கு மிதக்கும்தன்மையுடையது. எளிதில் தீப்பற்றக்கூடியது. பஞ்சு மென்மையானதாகவும் உறுதியற்றும் இருப்பதால் நூல்நூற்கப் பயன்படுவதில்லை.

**பயன்பாடு**

இது மெத்தை தலையணை உயிர் காக்கும் உறைபோன்றவற்றை செய்யப் பயன்படுகிறது. காய்த்து ஓய்ந்த மரங்களை பலகையாக்கி கட்டட உள்ளக அலங்காரத்திற்குப் பயன்படுத்தலாம். பிளைவூட் ஒட்டுப்பலகைக்கும் தீப்பெட்டி செய்யவும் இதன் பலகை பயன்படுகிறது.

பயிராக்கவியல் - இலவு மரங்களில் இரண்டு ரகங்கள் உண்டு.

1. சிங்கப்பூர் ரகம்
2. உள்ளூர் ரகம்

**இனப்பெருக்கமுறை**

1. விதை
2. போத்து அல்லது வேர்க்கட்டை

1. விதைமூலம் இனப்பெருக்கம் செய்யலாம். தரமான தாய்த் தாவரத்திலிருந்து பெறப்பட்ட விதைகளை உறங்கு நிலைகாலம் முடிந்ததும் கொதிக்கும் நீரில் போட்டு10 நிமிடம் கழித்து நீரை வடித்து விட்டு குளிர்ந்த நீரில்போட்டு ஒரு இரவு முழுவதும் ஊறவைத்து மறுநாள் நாற்று மேடையில் நடவேண்டும். 8 மாத காலத்தில் நாற்றுகள் நடுகைக்கு தயாராகிவிடும். விதை மூலம் நடுகை செய்யப்படும் நாற்றுகள் 5 ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கும்.

2. போத்து மூலமும் இனப்பெருக்கம் செய்யலாம். போத்து என்பது விதைகள் மூலம் பெறப்படுவது. 1.5 அடி உயரமுள்ள மேட்டுப் பாத்தியில் 30 x 15 cm இடைவெளியில் விதைக்கப்பட்ட விதையில் முளைக்கும் நாற்றை 10-12 அடி உயரம்வரை வளர்க்க வேண்டும். இவ்வாறு வளர 2 ஆண்டுகள் ஆகும். நடுகைக்குத் தயாரான நாற்றுகளை தரையில் இருந்து 1அடி ஆழத்தில் அதன் வேர்ப்பகுதியை வெட்டி கிழங்கு போன்ற அமைப்புடன் செடியைத் தனியாக எடுக்க வேண்டும். 6 அடி உயரம்வரை மேற்பகுதியை வெட்டி கழிக்கவேண்டும். விட்டம் 1.5 - 2 அங்குலமுள்ள கழி போன்ற நாற்று நடுகைக்குத் தயாராகும். இதுவே போத்து எனப்படும்இம்முறையில் நடுகை செய்யப்படும் நாற்று விரைவில் துளிர்த்து மரமாகி 2 ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கும்.

**நடுகை முறை**

நடுகை இடைவெளி

உள்ளூர் ரகம் - 12 X 15 அடி சிங்கப்பூர் ரகம் - 15 X 20 அடி

ஓர் அடி நீள, அகல, ஆழத்தில் குழி வெட்டி வேர்க்கட்டையை (போத்து) நட வேண்டும். நடுகை செய்த போத்து காயாமல் இருப்பதற்கு போத்தின் மேல் சாண உருண்டையை வைக்கவேண்டும். போத்திலிருந்து வரும் துளிர்களில் இரண்டை மட்டும் வளரவிடவேண்டும். விதைமூலமும் 08 மாத நாற்றுகளை நடலாம்.

**பயன்தரும் காலம்**

சிங்கப்பூர் ரகம் - நடுகை செய்து 3 வருடத்திலிருந்து பயன்தரத் தொடங்கும். நீளமான காய்களும் அதிக காய்ப்பு தன்மையும் அதிகளவு பஞ்சு உடையதுமாகும். . ஒரு மரத்திற்கு 16000 - 18000 காய்கள்வரை காய்க்கும். ஆயுட்காலம் 30 - 40 ஆண்டுகள்வரை இருக்கும்.

உள்ளூர் ரகம் - இலவு 5 அல்லது 6 ஆண்டுகளில் பயன்தரத் தொடங்கும். குட்டையான காய்களும் குறைந்தளவு காய்ப்பு தன்மையும் குறைவான பஞ்சு உடையதுமாகும் . ஒரு மரத்திற்கு 3000 - 5000 காய்கள்வரை காய்க்கும். ஆயுட்காலம் 100 ஆண்டுகள் வரை இருக்கும். ஏப்ரல், மே,ஜூன் மாதங்கள் அறுவடை காலமாகும்

**வருமானம்**

சிங்கப்பூர் ரகம் ஏக்கருக்கு 20 - 25 மரங்கள் நடலாம். 25 மரங்களிலிருந்து 400,000 - 500,000 காய்கள் பெறலாம். ஒரு சாக்கில் 5kg பஞ்சுகள் அடைக்கலாம். ஒரு காய் சுமார் 100 - 120 கிராம் அளவும் 20 - 30 கிராம் பஞ்சு நிறையும் கொண்டது. 50 - 60 காய்களிலிருந்து 1kg பஞ்சு பெறலாம்.

ஒரு மரத்திலிருந்து 320 - 400 (16000 -18000 காய்கள்) kg பஞ்சும் ஒரு ஏக்கரிலிருந்து (4 - 5 இலட்சம் காய்கள்) 8000 -8500kg பஞ்சும் பெறலாம்.

ஒரு கிலோ இலவம் பஞ்சின் தற்போதைய சந்தை நிலவரம் ரூபா 500 - 650 வரையாகும். எனவே ஒரு மரத்திலிருந்து ரூபா 160,000 - 200,000 மொத்த இலாபமும் ஒரு ஏக்கரிலிருந்து 4000,000 - 42,50,000 மொத்த இலாபமும் பெறலாம்.

> ஒவ்வொரு மரம் நடப்படும்போதும் சமாதானத்துக்கான விதை ஊன்றப்படுகின்றது

த.நிறஞ்ஷினி
அபிவிருத்தி உத்தியோகத்தர்.





## முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம்

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இணைத்தலைவரும் வைத்தியர்.சி.சிவமோகன் எம்.பி.தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, வட மாகாண விவசாய அமைச்சர் க. சிவநேசன், சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன், மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் மற்றும் வடமாகாண சபை பிரதி அவைத்தலைவர் வ கமலேஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், ஆ.புவனேஸ்வரன் ஜெனோபர் மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (இ-81)

# நான் இந்த அரசில் இருந்து கொண்டு மக்களின் உரிமைகளுக்காக போராடுவேன்!






## கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

கண்டி, நவ. 13

நான் இந் நாட்டு மக்களுக்குச் சேவை செய்யவேண்டும் . அரசில் இருந்து கொண்டு மக்களின் உரிமைகளுக்காக போராடுவேன் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கண்டி இந்து கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஷெரின்பிரைடல் நிறுவனத்தில் மணப்பெண் அலங்காரம் மற்றும் மனையியல் கல்வி தொடர்பான டிப்ளோமா பயிற்சி நெறியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த அரசை ஆட்சியில் அமர்த்த நாங்கள் முக்கிய பங்காற்றியுள்ளோம். அவ்வாறு எங்கள் முயற்சியில் அமைந்த அரசு எங்களுக்கு இராஜாங்க அமைச்சுப் பதவியையும் வழங்கி அதன் மூலம் மக்களுக்குச் சேவை செய்யமுடியாத ஒரு நிலை காணப்பட்டால் அதனால் எதுவித பயனுமில்லை.

அமைச்சிக்குச் சென்று ஓர் இலிகிதராக பணி புரிய என்னால் முடியாது. எனக்கு கொள்கை ஒன்று உள்ளது. நான் இந் நாட்டு மக்களுக்கு சேவை செய்ய வேண்டும்.

அந்த சந்தர்ப்பத்தை எங்களுக்கு தருமாறு தான் நான் கூறினேன். நல்லாட்சி அரசில் அவ்வாறான கருத்துகளையும் கூற இடமுண்டு. கடந்த அரசு காலத்தில் இவ்வாறு கூறியிருந்தால் நான் இருந்த இடம் தெரியாது போகலாம்.

எனக்கு மட்டுமல்ல மற்றைய இராஜாங்க அமைச்சர்களுக்கும் இவ்வாறான பிரச்சினைகள் இருக்கின்றன. நாங்கள் இது தொடர்பாக ஜனாதிபதி பிரதமர் ஆகியோருக்கு அறிவித்துள்ளோம். தீர்வை பெற்றுத் தருவோம் என்று கூறியபோதும் இன்னும் அத்தீர்வு கிடைக்கவில்லை.

சில ஊடகங்களில் நான் அரசை விட்டு வெளியேறப் போகின்றேன் எனச் செய்தி வெளிவந்துள்ளது. அது தவறான செய்தியாகும்' நான் ஏன் அரசைவிட்டு வெளியேற வேண்டும்.

நாங்கள் ஆட்சியில் அமர்த்திய அரசில் எமது பதவியை பாதுகாத்துக் கொண்டு மக்களின் உரிமைகளுக்காக போராடுதே எங்கள் கொள்கையாகும்.

என்னை அரசில் இருந்து வெளியேற்ற முயற்சிக்கும் சிலர் இவ்வாறு கூறுகின்றமை தவறாகும். எங்களுக்கு கட்சி ஒன்று உள்ளது. அக் கட்சியில் இருந்து கொண்டு தான் பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடவேண்டும்.

இந்த அரசை கொண்டு வருவதற்கு தமிழ் கட்சிகளில் இருந்து முதலில் வெளியே றியவன் நான். மற்றவர்கள் அதன் பின்னர்தான் வெளியேறினார்கள். எனவே எனக்கு அரசை விட்டு வெளியேற எவ்விதத் தேவையும் இல்லை. மக்களுக்குச் சேவை செய்வதே எனது எதிர்பார்ப்பாகும்.

எதிர்வரும் தேர்தலில் நாங்கள் வேறு கட்சியுடன் இணைவதா அல்லது தனித்துபோட்டியிடுவதா என்பது பற்றி இன்னும் தீர்மானிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## சுதந்திரக் கட்சியுடன் இணைகிறது மஹிந்த அணி?

### மகா சங்கம் தீவிர முயற்சி!

கொழும்பு, நவ. 13

தேசிய அரசின் பிரதான கட்சிகளில் ஒன்றான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்மானம் மிக்க செயற்குழுக் கூட்டம் ஒன்று அடுத்துவரும் இரு வாரங்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெறவுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

கடந்த 03 ஆம் திகதி நடைபெற்ற கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திற்கு, ஒன்றிணைந்த கூட்டு எதிரணிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், கூட்டு எதிர்க் கட்சியில் எவரும் அக்கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. அக்கட்சி நிபந்தனையிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தாம் கட்சியில் கலந்துகொள்வதாயின் சில வரையறைகளைக் கட்சி அறிவிக்க வேண்டும் என அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வரையறைகளில் இணைந்து செயற் படுவதற்கு முடியுமான விட்டுக் கொடுப்புக் கள் குறித்து இறுதித் தீர்மானம் எடுப்பதற்கே இந்தக் கூட்டம் இன்னும் இருவாரங்களில் இடம்பெறவுள்ளது எனக்கட்சிவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் கடந்த அரசின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்க் கட்சியுடன் இணைய வேண்டும் என மகா சங்கத்தினர் பெரும் பிரயத்தனம் எடுத்துச் செயற்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## நல்லாட்சி அரசு நானூறு வாக்குறுதிகளில் 26 வாக்குறுதிகளையே நிறைவேற்றியுள்ளது!

### கெஹலியவின் கணக்கு இது

கொழும்பு, நவ. 13

நல்லாட்சி அரசு வழங்கிய 400 வாக்குறுதிகளில் 26 வாக்குறுதிகளை மட்டுமே நிறைவேற்றியுள்ளது என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

வரவு - செலவுத்திட்டம் தொடர்பில் கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அண்மையில் நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமர வீரவினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டம் தேவதை கதைகள் உள்ளடங்கிய ஓர் கற்பனையான வரவு - செலவுத் திட்டமாகும்.

2015 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதன் பின்னர் இந்த அரசு 400 இற்கும் மேற்பட்ட வாக்குறுதிகளை மக்களுக்கு அளித்துள்ளது.

எனினும், இவற்றில் வெறும் 26 வாக்குறுதிகளே நிறைவேற்றப்பட்டுள்ளன.

கடந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்க ஆட்சிக் காலத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதி களில் அநேகமானவை நிறை வேற்றப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஆண்டில் நான்கு புதிய மருத்துவ பீடங்களை ஆரம்பிப்பதாக அரசு வாக்குறுதி அளித்துள்ளது.

எனினும், இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி மஹிந்த



ஆட்சிக் காலத்தில், மஹிந்தோதய ஆய்வு கூடம் அமைப்பதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிக்கு நிகரானது.

எனவே, இந்தநிதியைக் கொண்டு மருத்துவ பீடங் களை அமைப்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ராஜகிரியவில் விபத்தில் சிக்கி றோயல் கல்லூரி மாணவன் பலி !

ராஜகிரிய பகுதியில்நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் கொழும்பு றோயல் கல்லூரி மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அத்துடன், 7 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் ராஜ கிரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ராஜகிரியவிலிருந்து மாதின்னா கொட நோக்கிச் செல்லும்போதே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது என கூறப்படுகின்றது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் நிலைமை மோசமானதாக காணப்படுகிறது எனவைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விபத்திற்கான காரணம் தொடர்பில் ராஜகிரிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# சசிகலா குடும்பத்தினர் 1,000 கோடி வரி ஏய்ப்பு!



## 8 பேர் மீது குற்ற நடவடிக்கை



சென்னை,நவ.13

சசிகலாவும் அவரது குடும்பத்தினரும் ஆயிரம் கோடி ரூபா அளவுக்கு வரி ஏய்ப்புப் செய்துள்ளனர் என வருமான வரித்துறையினர் தெரிவித்துள்ளனர்.

சசிகலா குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் வருமான வரித்துறை அதிகாரிகள் கடந்த 9ஆம் திகதி முதல் அதிரடிச் சோதனையை நடத்தி வருகின்றார்கள். அதிகாரிகள், பாதுகாப்புப் படையினர், பொலிஸார் என ஆயிரத்து 800 பேர் தனித்தனிக் குழுக்களாகப் பிரிந்து தமிழ் நாடு, புதுவை, ஆந்திரா, கர்நாடகம் ஆகிய 4 மாநிலங்களில் 187 இடங்களில் சோதனை மேற்கொண்டார்கள்.

இந்த அளவுக்கு அதிகாரிகள் முற்றுகையிட்டு வருமான வரித்துறை சோதனை நடத்தியது நாட்டிலேயே இதுதான் முதல் முறையாகும்.இது, நாடு முழுவதும் அரசியல் வட்டாரத்தில் கலக்கத்தை ஏற்படுத்தியது. இது கறுப்புப் பண ஒழிப்பு வேட்டை என வருமானவரித்துறை விளக்கம் அளித்துள்ளது. 4 நாள்கள் வேட்டையில் மன்னார்குடி அருகே சுந்தரகோட்டையில் உள்ள சசிகலாவின் சகோதரர் திவாகரன் வீடு, அவர் நடத்தும் பெண்கள் கல்லூரி விடுதியின் பூட்டப்பட்ட அறைகள் ஆகியவற்றில் தான் மிகப் பெரிய அளவில் சோதனை நடந்தது.

100இற்கும் மேற்பட்ட பொலிஸார் குவிக்கப்பட்டு பலத்த பாதுகாப்புடன் 50 அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர். இங்கு பறிமுதல் செய்யப்பட்ட ஆவணங்கள், ரொக்கம், தங்கம்-வைர நகைகள் ஆகியவற்றை வருமான வரித்துறையினர் 14 கார்களில் ஏற்றிக் கொண்டு சென்றனர். திவாகரனை அதிகாரிகள் கல்லூரிக்கு வரவழைத்து அவர் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களைப் பட்டியலிட்டு அதில் கையெழுத்தும் பெற்றுள்ளனர்.

இதேபோல் சென்னையில் தி.நகரில் சசிகலாவின் அண்ணி இளவரசியின் மகள் கிருஷ்ணபிரியா வீடு, மகன் விவேக்கின் வீடு, அவர் நிர்வாகியாகப் பொறுப்பு வகிக்கும் ஜெயா டி.வி., நமது எம்.ஜி.ஆர். நாளிதழ், ஜாஸ் சினிமாஸ் அலுவலகங்கள், டி.டி.வி.தினகரனின் சகோதரர் பாஸ்கரன் வீடு ஆகிய இடங்களில் நடந்த சோதனையும் குறிப்பிடத்தக்கவை.

இந்த இடங்களில் எல்லாம் பெருமளவில் நகை, கறுப்புப் பணம் சிக்கியுள்ளன. போலி நிறுவனங்களுக்கான ஆவணங்கள், போலி நிறுவனங்கள் பெயரில் வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டு அதில் பல கோடி பணம் போடப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.இங்கு சிக்கியவைகளைக் கணக்கெடுக்கும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். சோதனை தொடர்பாக முதல் கட்ட அறிக்கை மத்திய வரி விதிப்பு ஆணையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. அதில் பெரிய அளவில் வரி ஏய்ப்பு நடைபெற்றுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சசிகலாவும் அவரது குடும்பத்தினரும் 1000 கோடி ரூபா அளவுக்கு வரி ஏய்ப்புச் செய்துள்ளனர் என வருமான வரித்துறையினர் தகவல் அனுப்பியுள்ளனர். அதன் அடிப்படையில் சசிகலா, திவாகரன், கிருஷ்ணபிரியா, விவேக் உட்பட 8 பேர் மீது குற்ற நடவடிக்கை மேற்கொள்ளவும் அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

வரி ஏய்ப்பு மட்டும் அல்லாது, போலி நிறுவனங்களின் பெயரில் நிலம் வாங்கிக் குவித்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பாக நில அபகரிப்புக் குற்றச்சாட்டுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## ஜெயலலிதாவை ஏமாற்றிய சசிகலா குடும்பத்தினர் சொத்து குவித்துள்ளனர்: கே.பி. முனுசாமி

ஜெயலலிதாவை ஏமாற்றிச் சசிகலா குடும்பத்தினர் சொத்துக்களைக் குவித்துள்ளனர் என முன்னாள் அமைச்சர் கே.பி. முனுசாமி செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

ஜெயலலிதாவை ஏமாற்றி சசிகலா குடும்பத்தினர் சொத்துக்களை குவித்துள்ளனர் என முன்னாள் அமைச்சர் கே.பி. முனுசாமி செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

சசிகலா உறவினர்களுக்குச் சொந்தமான ஜெயா டி.வி. உள்ளிட்ட பல நிறுவனங்களும், உறவினர்களின் வீடுகளிலும் நான்கு நாள்களாக வருமான வரித்துறையினர் சோதனை நடத்தி வருகின்றனர். இந்தச் சோதனையில் பல முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனக் கூறிய அதிகாரிகள், விவேக்கின் 100 வங்கிக்கணக்குகளை முடக்கியுள்ளனர்.

இந்த நிலையில், கிருஷ்ணகிரியில் இது தொடர்பாக செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த முன்னாள் அமைச்சர் கே.பி. முனுசாமி, 'வருமான வரிச் சோதனைக்கும் மத்திய, மாநில அரசுகளுக்கும் தொடர்பு இல்லை, ஜெயலலிதாவை ஏமாற்றிச் சசிகலா குடும்பத்தினர் சொத்துக்களைக் குவித்துள்ளனர்' என்று தெரிவித்துள்ளார்.

## கமல் கட்சியில் சேரமாட்டேன் பிரகாஷ்ராஜ் அதிரடி



நடிகர் கமலஹாசன் தொடங்கும் கட்சியில் நான் ஒருபோதும் சேரப்போவதில்லை என்று தெரிவித்த நடிகர் பிரகாஷ்ராஜ், நடிகர்கள் தலைவராகின்றமையால் நாட்டுக்கு மிகப் பெரும் பேரழிவு என்றும் விமர்சனம் செய்துள்ளார்.

பெங்களூரில் நேற்று செய்தியாளர்களிடம் பிரகாஷ்ராஜ் பேசியவை வருமாறு:

திரைப்பட நடிகர்கள் அரசியலுக்கு வருகின்றமையை நான் விரும்பவில்லை. அவர்கள் (திரைப்பட நடிகர்கள்) கட்சித் தலைவர்களானால் நாட்டுக்கு மிகப் பெரிய பேரழிவு ஏற்படும்.

நடிகர்கள் தங்களது பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும். நடிகர்கள் என்ற ஒரே காரணத்துக்காக அரசியலுக்கு வரக்கூடாது. கமலஹாசன் தொடங்கும் கட்சி உட்பட எந்த அரசியல் கட்சியிலும் ஒருபோதும் நான் சேரப் போவதில்லை என்று பிரகாஷ்ராஜ் கூறியுள்ளார்.

நடிகர் பிரகாஷ்ராஜ் விவசாயிகள் பிரச்சினை, பெங்களூர் பத்திரிகையாளர் கவுரி லங்கேஷ் கொலை வழக்கு, தாஜ்மகால் புராதன சின்னங்களிலிருந்து நீக்கம், தற்போதைய அரசியல் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் அதிரடியாகத் தனது கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜார்க்கண்டில் 10 சிறுவர்களை கடத்திய மாவோயிஸ்டுகள்



தேடுதல் வேட்டையைத் தடுக்க ஜார்க்கண்ட் மாநிலத்தில் 10 சிறுவர்களை மாவோயிஸ்ட்டு தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர்.

சத்தீஷ்கர், ஜார்க்கண்ட், பீகார், ஒடிசா போன்ற மாநிலங்களில் மாவோயிஸ்டு தீவிரவாதிகள் மிகப் பெரிய சவாலாக இருந்து வருகிறார்கள். இதனால் மாவோயிஸ்டுகளைக் கண்டுபிடித்து வேட்டையாடும் பணியில் மத்திய ரிசர்வ் பொலிஸ் படையினர் (சி.ஆர்.பி.எப்) ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் தேடுதல் வேட்டையைத் தடுக்கும் திட்டமாக ஜார்க்கண்ட் மாநிலத்தில் 10 சிறுவர்களை மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர்.

கார்வா மாவட்டம் பாண்டிபாரிய பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட கிராமத்திலேயே இளம் சிறுவர்களை மாவோயிட்கள் கடத்திச் சென்றுள்ளனர்.

இதனால் அந்தக் கிராம மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இந்தச் சம்ப வம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றார்கள். 10 சிறுவர்களையும் மீட்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர்.

# தென் சீனக்கடல் பிரச்சினை : மத்தியஸ்தம் செய்யத் தயார்: ட்ரம்ப்



ஹனோய்,நவ.13

சீனா, தைவான், வியட்நாம் உள்ளிட்ட பிராந்திய நாடுகளின் முக்கிய பிரச்சினையாக இருந்து வரும் தென் சீனக்கடல் விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்யத் தயாராக உள்ளோம் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறியுள்ளார்.

தென் சீனக்கடல் பகுதி வழியாக ஆண்டுதோறும் கோடிக்கணக்கான டொலர் மதிப்பிலான வர்த்தகப் போக்குவரத்து நடைபெறுகின்றது. இந்தப் பகுதி முழுவதையும் சொந்தம் கொண்டாடும் சீனா, அங்கு செயற்கைத் தீவுக் கூட்டங்களை உருவாக்கி இராணுவ நிலைகளை ஏற்படுத்தி வருகின்றது. இந்தக் கடல் எல்லையில் அமைந்துள்ள வியட்நாம், பிலிப்பைன்ஸ், மலேசியா, தைவான் உள்ளிட்ட நாடுகளும் தென் சீனக்கடல் பகுதிக்கு உரிமை கொண்டாடுகின்றன.

பல ஆண்டுகளாகச் சர்ச்சையாகத் தொடர்ந்து வரும் இந்த விவகாரத்தை, ஹேக்கில் உள்ள சர்வதேச நடுவர் மன்றத்துக்குப் பிலிப்பைன்ஸ் எடுத்துச் சென்றது.

இந்த விவகாரத்தை விசாரித்த நடுவர் மன்றம், தென் சீனக்கடல் பகுதியில் சீனாவுக்கு சட்டப்பூர்வ உரிமை இல்லை எனக் கடந்த ஜூலை மாதம் தீர்ப்பு அளித்தது. ஆனால், இந்த தீர்ப்பை நிராகரித்த சீனா, தொடர்ந்து அந்தப் பகுதியில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. ஆனால், இந்தத் தீர்ப்பை சீனா ஏற்றுக்கொள்ள வேண்டும் என அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

இந்த நிலையில், வியட்நாம் நாட்டின் தனாங் நகரில் நடைபெற்ற ஆசியப் பொருளாதார ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்ற ட்ரம்ப், அந்நாட்டின் அதிபர் ட்ரான் தாய் குவாங்-ஐ சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதனையடுத்து, செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், 'தென் சீனக் கடல் விவகாரத்தில் எனக்குத் தெரிந்த வரை மத்தியஸ்தம் செய்து உதவத் தயாராக உள்ளேன்' என்று கூறினார்.

## சிரிய உள்நாட்டுப் போருக்கு இராணுவத் தீர்வு சரிவராது

### ட்ரம்ப், புடின் கூட்டாக அறிக்கை

ஹனோய்,நவ.13

சிரியாவில் நடக்கும் உள்நாட்டுப் போருக்கு இராணுவம் மூலம் தீர்வு காணமுடியாது என அமெரிக்காவும் ரஷ்யாவும் கூட்டு முடிவு எடுத்துள்ளன.

ஆசிய-பசுபிக் பொருளாதாரக் கூட்டமைப்பின் இரண்டு நாள்கள் மாநாடு வியட்நாமில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் கலந்துகொண்ட ட்ரம்பும், புடினும் சிரியாவில் நடக்கும் உள்நாட்டுப் போருக்கு இராணுவம் மூலம் தீர்வு காண முடியாது எனக் கூட்டறிக்கை வெளியிட்டுள்ளனர்.

சிரியாவில் உள்நாட்டு போர் நடைபெற்று வருகின்றது. அதிபர் பஷர் அல் அசாத்தின் ஆட்சியைக் கவிழ்க்க கிளர்ச்சியாளர்கள் கடந்த 6 ஆண்டுளாக ஆயுதம் ஏந்திப் போராடி வருகின்றனர். இதனால், சிரியாவில் நடக்கும் சண்டையில் ஏராளமானோர் கொல்லப்பட்டு வருகின்றனர். கிளர்ச்சிப் படைகளுக்கு ஆதரவாக அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்றவை உள்ளன. அதே நேரம், அதிபர் அசாத்துக்கு ரஷ்யா, ஈரான் போன்றன ஆதரவளித்து வருகின்றன.

இந்த நிலையில், வியட்நாமில் உள்ள தனாங் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆசியப் பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு மாநாட்டில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பும், ரஷ்ய அதிபர் புடினும் கலந்து கொண்டனர். அப்போது, சிரியா பற்றி இரு தலைவர்களும் சந்தித்துப் பேசி, கூட்டறிக்கை வெளியிட்டனர்.

அதில், 'சிரியப் பிரச்சினைக்கு இராணுவம் மூலம் தீர்வு காணமுடியாது என்று இரு அதிபர்களும் முடிவு செய்துள்ளனர். சிரியாவின் இறையாண்மை, சுதந்திரம், ஒற்றுமை, ஒருமைப்பாடு, போன்றவைக்கு மதிப்பளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், அங்குள்ள ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தைக் கூட்டாக இணைந்து ஒழிக்கவும் முடிவு செய்துள்ளனர். சிரியாவில் மோதலில் ஈடுபட்டுள்ள இருதரப்பும் ஜெனிவாவில் நடக்கும் ஐ.நா. அமைதி பேச்சில் பங்கேற்கவும் வலியுறுத்தப்பட்டது' என்று கூறப்பட்டுள்ளது.

## சிரியாவில் ரஷ்யா வான் தாக்குதல்; 9 குழந்தைகள் உட்பட 26 பேர் பலி







பெய்ரூட்,நவ.13

சிரியாவில் ரஷ்ய இராணுவத்தினர் நடத்திய வான்வழி மற்றும் பீரங்கித் தாக்குதலில் 9 குழந்தைகள் உட்பட 26 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

சிரியாவில் சில முக்கிய நகரங்களை ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்கள் கட்டுப்பாடுக்குள் வைத்துள்ளனர். அந்தத் தீவிரவாதிகளை ஒடுக்க ரஷ்யாவுடன் இணைந்து சிரிய இராணுவம் அதிரடித் தாக்குதல் நடத்தி வருகின்றது. இந்தத் தாக்குதல்களில் சில நேரங்களில் பொதுமக்களும் தாக்கப்பட்டு கொல்லப்படுகின்றனர். அவ்வாறு நடத்தப்படும் தாக்குதல்கள் மூலம் ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் இடங்களைச் சிரிய இராணுவம் கைப்பற்றி வருகின்றது.

கிழக்கு சிரியாவில் ஈராக் எல்லையில் அமைந்துள்ள அபு கமல் என்ற நகரம் ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வருகிறது. கடந்த 9ஆம் திகதி சிரிய ராணுவத்தினர் இந்தப் பகுதியில் நடத்திய அதிரடித் தாக்குதலையடுத்து 40 வீத இடங்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. இதையடுத்து சிரிய இராணுவத்தினர் தொடர் தாக்குதல் நடத்தி அந்த நகரை நேற்றுமுன்தினம் மீண்டும் முழுமையாகக் கைப்பற்றினர்.

இந்த நிலையில், அந்நகரை மீண்டும் கைப்பற்றும் நோக்கத்தில் ரஷ்ய இராணுவத்தினர் அப்பகுதியில் வான்வழி மற்றும் பீரங்கித் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதல்கள் மக்கள் முகாம்கள் மீது நடத்தப்பட்டன எனக் கூறப்படுகிறது. இரண்டு முகாம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் 9 குழந்தைகள் உட்பட 26 பொது மக்கள் பரிதாபமாக உயிரிழந்தனர் என பிரிட்டனைச் சேர்ந்த கண்காணிப்பு அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

சிரியாவில் நடந்துவரும் போரால் இதுவரை சுமார் 3 லட்சத்து 30 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் பல லட்சம் மக்கள் உயிருக்குப் பயந்து நாட்டைவிட்டுத் தப்பியோடி உள்ளனர்.

## ஸ்பெயினால் கட்டலோனியாத் தலைவர்கள் கைது:

## விடுவிக்கக் கோரி பார்சிலோனாவில் நடந்த பிரம்மாண்ட பேரணி



பார்சிலோனா,நவ.13

ஸ்பெயின் அரசால் கைது செய்யப்பட்ட கட்டலோனியாத் தலைவர்களை விடுவிக்கக்கோரி பார்சிலோனாவில் நடைபெற்ற பிரம்மாண்ட பேரணியில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

பிரிவினைவாத நடவடிக்கையில் ஈடுபட்டார்கள் எனக் கட்டலோனியாத் தலைவர் கார்லஸ் பூட்ஜியமோண்ட் உள்ளிட்ட 5 பேர் மீது ஸ்பெயின் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. விசாரணைக்கு முன்னிலையாகாத பூட்ஜியமோண்ட் உட்பட 5 பேருக்கு பிடியாணை பிறப்பித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும் சில கட்டலோனியா ஆதரவுத் தலைவர்களை ஸ்பெயின் அரசு கைது செய்தது.

இந்த நிலையில், ஸ்பெயின் அரசால் கைது செய்யப்பட்டு இன்னும் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் கட்டலோனியாத் தலைவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி பார்சிலோனாவில் பிரம்மாண்ட பேரணி நடைபெற்றது. கட்டலோனியா நாடாளுமன்றக் கட்டடத்திற்கு அருகில் ஆயிரக்கணக்கானோர் கூடிப் பேரணியில் ஈடுபட்டனர்.

## மீன்களிடம் பேசும் ரோபோ

சுவிற்ஸர்லாந்தை சேர்ந்த நிறுவனம் மீன்களிடம் பேசும் ரோபோவைக்கண்டு பிடித்துள்ளது. ஜெனிவாவில் இயங்கும் அந்த நிறுவனம் பல வருட ஆராய்ச்சிக்குபின் இதை நிகழ்த்தியுள்ளது.

இந்த 'ரோபோ' மிகவும் சிறிய மீன் வடிவத்திலேயே உள்ளது. மீன்களை எளிதில் ஏமாற்றும் வகையில் அது வடிவமைக்கப்பட்டுள்ளது. அதில் சூரிய ஒளி (சோலார்) மூலம் இயங்கும் மோட்டார்கள் உள்ளன.

அவை மீன்களை போன்று அவற்றை நீந்த செய்யும் திறன் படைத்தவை. மேலும் அதில் உள்ள டிரான்ஸ்மீற்றர் தகவல்களை அனுப்பிக் கொண்டே இருக்கும்.

இந்த 'ரோபோ' கடலுக்குள் சென்று நாம் தெரிவிக்கும் தகவல்களை மீன்களுக்கு புரியும்படி பேசும் திறன் படைத்தவை. அதன் மூலம் மீன்களை அதன் வழியில் இருந்து மாற்றவும், தேவையான இடங்களில் நிறைய மீன்களை ஒன்றாகச் சேர்க்கவும் முடியும் எனக் கருதப்படுகிறது.

# தறுதலைகளையே தவிசாளர்களாக நியமிக்க கட்சித் தலைவர்கள் முயற்சி



(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊழல்கள் ஏற்படவும், முரண்பாடுகள் பிரதேச சபைகளில் உருவாகவும் காரணகர்த்தாக்கள் கட்சித் தலைமைகளே என்றால் அது பிழையாகாது. அந்தப் பதவிகளில் சிறக்கப் பணிபுரிவோரை ஏற்க முன்வராது கையாள்களையும் கட்சி ஆதரவாளர்களையுமே இணைத்து விடப்பார்க்கிறார்கள்."

– இவ்வாறு விசனத்துடன் கூறியிருக்கின்றார் வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

தமிழ் மக்கள் பேரவையின் விசேட கூட்டம் நேற்றுக் காலை யாழ். நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது அங்கு இணைத் தலைவர் உரையை ஆற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ் மக்கள் பேரவை தொடங்கி 2 வது ஆண்டு விரைவில் பூர்த்தியடைய இருக்கின்றது. இந்த நேரத்தில் அரசியல் ரீதியாக நாடளாவிய ரீதியில் சில முக்கியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. உதாரணத்திற்கு இடைக்கால அறிக்கை வெளிவந்துள்ளது. மேலும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் விரைவில் நடைபெற ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ் மக்கள் பேரவை ஒரு மக்கள் இயக்கமாகப் பரிணமித்திருக்கும் இந்தத் தறுவாயில், தேர்தல்கள் பற்றிய சிந்தனைகள் எம்மிடையே எழக் காரணம் என்ன என்று நீங்கள் வினவக் கூடும். கட்சி அரசியல் வேறு, அரசியல் ஈடுபாடு வேறு. தமிழ் மக்கள் பேரவை அரசியல் ஈடுபாட்டுடன் செயலாற்ற வேண்டிய கடப்பாட்டைக் கொண்டது. மக்கள் இயக்கம் என்று கூறும் போது சகல தமிழ் பேசும் மக்களையும் வேற்றுமை பாராது, பிரதேசங்கள் பாராது, மாகாணங்கள் பாராது, ஏன் நாடுகள் கூடப் பாராது, அனைவரையும் உள்ளடக்கிய ஒரு சிந்தனையை மேற்கொண்டு எமது அரசியலை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

கட்சி அரசியல் எனும் போது குறுகிய ஒரு வட்டத்தினுள் கட்சியின் நலன் கருதி உரிய நடவடிக்கைகளை முக்கியமாகத் தேர்தலின் போது எடுப்பதையே அது குறிக்கும். நாம் கட்சி அரசியலுக்கு எதிரானவர்கள் அல்லர். எம் மத்தியில்கூட ஒரு சில கட்சிகளின் தலைவர்கள் மிக முக்கிய உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். அவர்களின் கட்சியின் வலையமைப்பு எமது கூட்டங்களைக் கூட்டுவதில் மிக முக்கிய பாகங்களை வகித்தன என்பதை நாம் மறக்கக் கூடாது. ஆனால், கட்சிகளின் எதிர்பார்ப்புக்களும் நடவடிக்கைகளும் குறுகிய வட்டத்தினுள் அடங்குவன என்பதைத்தான் நான் இங்கு கூறவருகின்றேன்.எம்மோடு இயைந்து நடந்து வரும் இந்தக் கட்சிகளுடன் எதிர் காலத்தில் மற்றைய கட்சிகளையும் எமது இயக்கமானது உள்ளடக்கலாம் என்ற எதிர்பார்ப்பு எம்மத்தியில் உண்டு. கட்சிகள் பொதுவாகவே கட்சிச் சிந்தனைகளின் நிமித்தம், தமது தனித்துவத்தைப் பேண வேண்டிய தன் நிமித்தம், மற்றைய கட்சிகளுடன் முரண்படக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதை நாம் மறக்க முடியாது. என்றாலும், தமிழ் மக்களின் விடிவு காலத்தை எதிர்நோக்கிச் செல்லும் போது கட்சிகளானவை தற்காலிகமாகவேனும் கட்சி முரண்பாடுகளை ஒதுக்கி வைக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம்.

### இரண்டு வருட சாதனை

இந்த இரண்டு வருட காலத்தினுள் எமது இயக்கம் சிலகட்சிகளின் சிந்தனைகளில் வரவேற்கத்தக்க சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது என்று கூறினால் அது மிகையாகாது.

அரசாங்கம் தருவதைத் தரட்டும், எம் மக்கள் அவற்றை ஏற்றுக் கொள்வார்கள் என்றிருந்த அரசியல் நிலை போய், எவ்வெவற்றை எம் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள், அவற்றிற்கு இசைவாகவே நாங்கள் அரசியல் நடவடிக்கைகளை எடுத்துப் போக வேண்டும் என்ற ஒரு சிந்தனை மாற்றத்தைத் தமிழ் மக்கள் பேரவை ஏற்படுத்தியுள்ளது.

அரசு தர முன்வருவதற்கும் எமது எதிர்பார்ப்புக்களுக்கும் இடையில் பெரிய இடைவெளி இருப்பதைப் பலர் சுட்டிக்காட்டி அரசாங்கம் குறைத்துத் தருவதை நாங்கள் ஏற்றுக்கொண்டால் எமது இலக்குகளை நாம் அடைய முடியாமல் போய்விடும் என்று ஒரு கருத்தை முன் வைத்துள்ளார்கள். இது சம்பந்தமாக நாங்கள் சில விடயங்களை மனதில் நிலை நிறுத்த வேண்டும்.

தமிழ் மக்களினுடைய தனித்துவ சுய உரித்தை மழுங்கச் செய்து, பெரும்பான்மையினத்தவர் சுமார் 100 வருடங்களுக்கு முன்னர் இந் நாட்டின் முழுமையான ஆட்சி உரித்தையுந் தம்வசம் கையேற்றுக் கொண்டனர். அதன் காரணமாகவே தமிழ் மக்களுக்கு எதிரான அரசியல், பொருளாதார, சமூக நடவடிக்கைகளை இது வரை காலமும் தமது பெரும்பான்மைப் பலத்தை உபயோகித்து அவர்கள் நடைமுறைப்படுத்தி வந்துள்ளனர்.

### உறுதியுடன் எடுத்துரைப்போம்

எனினும், பேச்சுகளின் போது நாம் எமது கோரிக்கைகளை வலுவுடனும் திடமுடனும் எடுத்துக் கூற வேண்டிய கடப்பாடு எமக்குள்ளது. எம் உரிமைகள், உரித்துக்களைப் பறித்துக்கொண்ட பெரும்பான்மையினர், தாம் நினைத்தவாறு மாற்றங்களை ஏற்படுத்தி எமக்கு சலுகைகளை, உரிமைகளை, உரித்துக்களைத் திருப்பித் தருவதாக இருந்தால் அதற்கு நாம் ஆட்சேபனை தெரிவிக்கத் தேவையில்லை, அவற்றை ஏற்கின்றோம் என்று கூறவேண்டிய அவசியமும் எமக்கில்லை. அரசு தனது பெரும்பான்மைப் பலத்தை உபயோகித்துத் தாம் இதுவரை காலமும் செய்த அரசியல் பிழைகளை மனத்தில் வைத்து சில மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்று நினைத்தால்அதற்கு நாம் எதிர்ப்புமில்லை; ஏற்புமில்லை. எனினும், குறைவாகத் தருவனவற்றை நாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளோம் என்ற அடிப்படையில் மேலும் எதுவுந் தரவேண்டிய அவசியம் தமக்கில்லை என்று அரசு நினைத்து விடக்கூடாது. இதைத்தான் நான் உயர் நீதிமன்ற அமர்வொன்றில் கூறியிருந்தேன்.

நாம் இளம் மாணவர்களாக இருந்த போது கல்லூரி சிரேஷ்டர்கள், நாம் விளையாடிக்கொண்டிருக்கும் 25 மாபிள்களையுந் தம்வசப்படுத்துவர். நாங்கள் அழுது முரண்டட்டு எமது மாபிள்களைத் திருப்பித் தாருங்கள் என்றால் இந்தா 6 மாபிள் , 8 மாபிள் என்று பேரம் பேசுவர்கள். நாங்கள் தருவதை ஏற்றுக்கொண்டு மிகுதியையுந் தருமாறு அழுது முரண்டு பிடிப்போம். அவ்வாறே வருவதை ஏற்றுக் கொண்டு மிகுதியையுந் திரும்பப் பெற வேண்டிய நிலை இப்பொழுது எமக்கு வந்துள்ளது.

சிங்கள மக்கள் தலைவர்கள் அரசியல் அதிகாரங்கள் அனைத்தையும் பிரதேசவாரியான தேர்தல்கள் மூலம் பெரும்பான்மையினர்களுக்குப்பெற்றுத் தம்வசம்அதிகாரங்களைக் கையகப் படுத்தியமையாலேயே எமது அரசியல் பிரச்சினை உருவானது. தொடர்ந்தும் சர்வாதிகாரங்களும் தம்வசம் இருக்க வேண்டும் என்றும் அவற்றிலிருந்து எமக்குச் சில அதிகாரங்களைப் பங்கிட்டுக் கொள்ள முன்வருகின்றமையுமாகவே அவர்களின் நடவடிக்கைகள் இன்று அமைந்துள்ளன. தொடக்கத்தில் இருந்தே தமிழ் மக்கள் சுயநிர்ணய உரித்தைப் பெற்றிருந்தவர்கள் என்ற அடிப்படை உண்மையை அவர்கள் தட்டிக் கழிக்கப் பார்க்கின் றார்கள். ஆகவே அதிகாரப் பரவலாக்கம் என்பது பல்லினங்களின் ஒப்புதலோடு நடைபெற வேண்டுமே ஒழிய, பெரும்பான்மையினரிடமிருந்து எமக்குத்தரப்படும் அவர்களின் கொடைச் சிந்தனையின் வெளிப்பாடாக இருக்கக் கூடாது. அவ்வாறு கொடைச் சிந்தனையின் வெளிப்பாடாகத் தருவனவற்றை நாங்கள் எதிர்க்கவுங்கூடாது; ஏற்கவும் கூடாது. அதாவது, நடைமுறைச் சட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்த அரசு முன்வந்தால் அவற்றுக்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டோம். ஆனால், நாங்கள் எங்களுடைய அடிப்படைக் கோரிக்கைகளில் இருந்தும் சற்றேனும் இறங்கிவரவும் மாட்டோம்.

உதாரணத்திற்கு, ஆளுநரின் அதிகாரங்களைக் கத்திரிக்க அரசாங்கம் முன்வருகின்றது என்று வைத்துக் கொள்வோம் அதற்கு நாம் எதிர்ப்பானவர்கள் அல்லர். ஆனால், ஆளுநர் பதவியை வெறும் சம்பிரதாயத்திற்கு மட்டும் ஏற்றுக் கொள்ளலாம் என்ற எமது கோரிக்கையில் மாற்றம் இருக்காது. சிங்களப் பெரும்பான்மையினர் தர முன்வரும் அரசியல் சலுகைகள் எம்மிடமிருந்து அவர்கள் ஏற்கனவே பறித்துக் கொண்டவையே தவிர, அவர்களுக்குரிய உரித்துக்கள் அல்ல அவை. இந்த அடிப்படையிலேயே நாம் அரசு தர இருக்கும் எந்த அரசியல் சலுகை களையும் எதிர்நோக்க வேண்டும். குற்றத்தால் குறு குறுக்கும் உங்கள் நெஞ்சங்கள் முன் வந்து எமக்குத் தருவனவற்றை நாம் எதிர்க்கவும் மாட்டோம்; ஏற்கவும் மாட்டோம். தொடர்ந்து எமது அடிப்படைக் கோரிக்கைகளை அவை கிடைக்கும் வரையில் நாங்கள் முன்வைத்துக் கொண்டே இருப்போம். அவற்றிற்காகப் போராடவும் தயங்க மாட்டோம் என்ற அடிப்படையில் தான் எமது சிந்தனை அமைய வேண்டும்.

### நாம் செய்ய வேண்டியது'

எமது தலைவர்கள் அரசு தருவதை முறையான தீர்வு அல்லது முற்றுமுழுதான தீர்வு என்று ஏற்றுக் கொண்டார்களானால் பின்னர்; எம்மை அரசாங்கம் குறை கூறுவார்கள்.

நீங்கள் ஏற்றுக் கொண்டதைத் தான் நாம் ஏற்கனவே தந்துவிட்டோமே. பின் எதற்காக மேலும் உரித்துக்கள், உரிமைகளைக் கோருகின்றீர்கள் என்று எம்மிடம் கேட்பார்கள். இந்த நிலை வர இடமளிக்கக் கூடாது. எமது அரசியல் விஞ்ஞாபனங்களில் இருக்கும் அடிப்படை அரசியல் கோரிக்கைளில் இருந்து நாம் எப்போதுமே மாறப்போவதில்லை என்பதை வலுவாக அரசுக்கு எடுத்துக்கூற வேண்டிய கடப்பாடு எமது தலைவர்களுக்குண்டு. இதை எமது தலைவர்கள் செய்வார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

அடுத்து, உள்ளூராட்சித் தேர்தல்கள் சம்பந்தமான அறிவித்தல்கள் வெளிவந்துள்ளன. இப்பொழுதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைப்புக் கட்சிகளாக இருக்கும் சில கட்சிகள் தம்மிடையே போட்டிபோடக் கங்கணம் கட்டிக்கொண்டு இருக்கின்றன. ஒரு பக்கத்தில் சகல கட்சிகளையும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கீழ் ஒன்றுபடுத்த பிரயத்தனங்கள் எடுக்கப்பட்டு வரும் நிலையில், சில கட்சிகளின் தனித்துவமான கட்சி எதிர்பார்ப்புக்கள் அல்லது கட்சியின் நல உரித்துக்கள் பற்றிய அவர்கள் சிந்தனைகள் அக் கட்சிகளைத் தனித்துப் போட்டியிட உந் துகின்றன போலத் தெரிகின்றது. இவற் றுள் எமக்கு அனுசரணை வழங்கும் கட்சிகள் சிலவும் உள்ளடங்குவன.

### சுயநலத்துக்கு இடமளித்து அழிவுப் பாதைக்கு வழி செய்கிறோம்

ஆரம்பத்திலிருந்தே ஐந்து கட்சிகள் சேர்ந்தே என்னை முதலமைச்சர் பதவிக்கு சிபார்சு செய்ததன் அடிப்படையில் கட்சி ரீதியாக முரண்பட நான் முன்வரவில்லை, இசைவில்லை. எம்மைப் பொறுத்த வரையில் தமிழ் மக்களின் வருங்காலம் பற்றிய சிந்தனைகளே பூதாகரமாக எம் முன் நிற்கின்றன. பலவித பாரதூரமான பிரச்சினைகளைத் தமிழ் மக்கள் எதிர் நோக்கிக் கொண்டு இருக்கின்றார்கள். அரசாங்கமும், சிங்கள மக்கள் தலைவர்களும், முஸ்லிம் மக்கள் தலைவர்களும் எதைச் செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும், எவ்வாறு வழிநடத்த வேண்டும் என்றெல்லாம் திடமான கொள்கைளை வகுத்து அவற்றின் அடிப்படையில் நகர்ந்து கொண்டிருக்கும் வேளையில், தமிழ் மக்கட் தலைவர்கள் உட்பூசல்களுக்கு இடங்கொடுத்து, தன்நல சிந்தனைகளுக்கு இடங்கொடுத்து, தம்முள் போட்டி மனப்பான்மையுடன் நடக்கவே எத்தனித்துள்ளார்கள். இது ஒட்டுமொத்தத் தமிழ் இனத்தையும் அழிவுப் பாதையில் செல்ல வழிவகுக்கும் என்பது எமது கருத்து. பொது நலங் கருதி, எமது சுய நலங்களையும் முரண்பாடுகளையும் ஒதுக்கிவைக்க வேண்டிய ஒரு காலகட்டத்தில் நாங்கள் இருக்கின்றோம். இவ்வாறான ஒரு முரண் நிலையை ஆயுதங்கள் ஏந்தியவர்கள் காலத்தில் ஆயுதங்களே தடுத்து நிறுத்தின. இன்று ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட நிலையில் நாங்கள் ஒவ்வொருவருமே எம்முடைய கடமை யாது என்று ஆராய்ந்து அறிந்து உணர்ந்து செயற்பட வேண்டிய நிலையில் உள்ளோம்.

தமிழ் மக்கள் பேரவை எல்லாக் கட்சிகளிடமும் வலியுறுத்திக் கோருவது யாதெனில் எங்களுடைய தனிப்பட்ட கட்சி பேதங்களும், அதிகாரப் பேராசையும், தனிப்பட்ட விரோதங்களும் ஏகோபித்த தமிழ் மக்களுடைய அரசியல் நல உரித்துக்களைப் பாதிக்க நாம் அனுமதிக்கக் கூடாது.

### பேரவையின் கோரிக்கை

இந்த நிலையிலேயே, எமது பேரவை உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை எதிர் நோக்கும் கட்சிகளிடம் ஒரு சில கோரிக்கைகளை முன்வைக்க விரும்புகின்றது. 1987 ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் அப்போதைய அமைச்சரினால் ஆக்கப்பட்ட விதிகளின்படி சில விடயங்கள் தெட்டெனத் தெரிகின்றன. உதாரணத்திற்கு பிரதேச சபையொன்றின் தவிசாளரானவர் அச் சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகக் கணிக்கப்படுவார். எனவே, அவர் பின்வருவனவற்றிற்குப் பொறுப்புடையவராவார் –

(தொடர்ச்சி 19 ஆம் பக்கத்தில்...)



# வேல்ஸ் அணியை வீழ்த்திய பிரான்ஸ்

உலகக்கோப்பை உதைபந்துத் தொடருக்கான முன்னோட்டமாகக் கருதப்படும் நட்பு ரீதியிலான ஆட்டத்தில் வேல்ஸ் அணியை 2:0 எனப் பிரான்ஸ் அணி வீழ்த்தியது.

ரஷ்யாவில் அடுத்த ஆண்டு உலகக்கிண்ண உதைபந்துத் தொடர் நடைபெற இருக்கின்றது. இதற்கு முன்னோட்டமாகப் பிரபல நாடுகளுக்கு இடையே நட்பு ரீதியிலான ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஒரு போட்டியில் பிரான்ஸ் - வேல்ஸ் அணிகள் மோதின.

இதில் பிரான்ஸ் 2:0 என வெற்றி பெற்றது. அட்லெடிக்கோ மாட்ரிட் அணியின் முன்னணி வீரரான கிரிஸ்மான் ஒரு கோலும், அர்செனல் அணியின் அலிவியர் ஜிராட்டு ஒரு கோலும் அடித்தனர்.

இருவரும் அந்தந்த சொந்த அணிக்காக விளையாடும்போது கோல் அடிக்காமல் திணறி வந்தார்கள். தற்போதைய இந்த ஆட்டம் அவர்களுக்குத் தன்னம்பிக்கையைக் கொடுத்துள்ளது.

# பண்டையாவுக்கு ஓய்வு ஏன்?

இலங்கைக்குஎதிரான முதல் இரண்டு டெஸ்ட் தொடரில் இருந்து இந்தியக் கிரிக்கெட் அணியின் சகலதுறை ஆட்டக்காரர் பண்டையாவுக்குஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

இதற்கான காரணம் பற்றி இந்தியக் கிரிக்கெட் சபை கூறியுள்ளவை வருமாறு:

ஜூன் மாதம் தொடங்கிய சம்பியன்ஸ் கிரிக்கெட் போட்டியில் இருந்து பண்டையா தொடர்ச்சியாக விளையாடி வருகின்றார்.

அவருக்குப் பெரிய அளவில் காயப் பிரச்சினைகள் வந்துவிடக் கூடாது என்பதற்காக ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஸ்ரீசாந்துக்கு அசாருதீன் அறிவுரை

இந்திய அணியின் கதவு அடைக்கப்படவில்லை எனவும் தான் நிரபராதி என்பதை நிரூபித்து விட்டுப் பொறுமை காக்க வேண்டும் எனவும் ஸ்ரீசாந்துக்கு அசாருதீன் அறிவுரை கூறியுள்ளார்.

2013ஆம் ஆண்டு ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியில் இடம் பிடித்து ஆடிய இந்திய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த் சூதாட்டத்தில் ஈடுபட்டார் என டில்லி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவருக்கு இந்தியக் கிரிக்கெட் சபையும் ஆயுட்காலத் தடை விதித்தது. அதனை எதிர்த்து ஸ்ரீசாந்த் கேரள நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் அவருக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார். இதனைஎதிர்த்து இந்தியக் கிரிக்கெட் சபை சார்பில் செய்த மேன்முறையீடு காரணமாக, இந்திய கிரிக்கெட் சபை ஸ்ரீசாந்துக்கு விதித்த ஆயுட்காலத் தடை தொடரும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இந்த நிலையில் இந்திய அணியின் முன்னாள் தலைவர் அசாருதீன் அளித்த ஒரு பேட்டியில், ஸ்ரீசாந்த் திறமை வாய்ந்த இந்திய வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவர் ஆவார். இந்திய அணியின் கதவு அவருக்கு அடைக்கப்படவில்லை. அவர் தான் நிரபராதி என்பதை நிரூபித்து விட்டுப் பொறுமை காக்க வேண்டும். அவர் நம்பிக்கையை இழந்து விடக் கூடாது என்பது முக்கியமானது என்று தெரிவித்துள்ளார்.

# 2019 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் டோனி



டோனி 2019ஆம் ஆண்டு உலகக் கோப்பை வரை விளையாடுவார் என இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அசாருதீன் கூறியுள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணி முன்னாள் தலைவர் முகமது அசாருதீன் அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு:-

ஓய்வு பற்றி டோனி மனதில் என்ன இருக்கிறது என்பது பற்றி எனக்குத் தெரியவில்லை. அநேகமாக அவர் 2019ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் விளையாடுவார் என்று கருதுகிறேன்.

அந்தப் போட்டித் தொடரோடு ஓய்வு பெறுவார் என்று நினைக்கின்றேன். அவரது எதிர்காலம் பற்றி அவரே முடிவு செய்ய வேண்டும்.

வருங்காலத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் இடையே போட்டித் தொடர் நடக்கும் என்று கருதுகின்றேன். ஆனால், தற்போதைய எல்லைப் பிரச்சினைச் சூழ் நிலைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (ப)

# டுவிட்டர் நிறுவனத்துக்கு நன்றி - ஐ.சி.சி.

டுவிட்டரின் 280 எழுத்துக்கள் நீடிப்பால் இலங்கை வீரர்களின் பெயரை முழுமையாக வெளியிட்ட ஐ.சி.சி., டுவிட்டர் நிறுவனத்திற்கு நன்றியும் தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் தங்களது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்காக சமூக இணையத் தளமான பேஸ்புக், டுவிட்டர், இன்ஸ்டகிராம் போன்றவற்றை அதிக அளவில பயன்படுத்தி வருகின்றனர். இதில் பேஸ்புக்கில் எவ்வளவு எழுத்துக்களையும் பதிவுசெய்யலாம். டுவிட்டரில் 140 எழுத்துக்கள் மட்டுமே பதிவு செய்ய முடியும்.

இதனால் நாம் சொல்ல வந்த கருத்துக்களைச் சுருக்கமாகத்தான் கூற இயலும்.

இதனால், விரிவான கருத்துக்களை இரண்டு அல்லது மூன்று முறை டுவிட் செய்ய வேண்டும். இதனால் 140 எழுத்துக்கள் என்ற கட்டுப்பாட்டை நீடிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதைக்கவனத்தில்கொண்ட டுவிட்டர்நிறுவனம், 140 எழுத்துக்கள் என்பதை 280 ஆக நீடித்துள்ளது. இதன்மூலம் தற்போது டுவிட் செய்பவர்கள் விரிவாக தங்கள் கருத்தைத் தெரிவித்து வருகிறார்கள்.

இலங்கை கிரிக்கெட் வீரர்களின் பெயர்கள் பொதுவாகவே மிகவும் நீளமாக இருக்கும். இதனால் ஐ.சி.சி. தனது அதிகார பூர்வ டுவிட்டர் பக்கத்தில் அவர்கள் பெயர்களைச் சுருக்கித்தான் எழுதும்.

தற்போது 280 எழுத்துக்கள் என்பதால் முழுப் பெயரையும் பதிவிட்டுள்ளது. இதற்காக டுவிட்டர் நிறுவனத்திற்கும் நன்றியும் தெரிவித்துள்ளது. (ப)



## திறன்மிக்க...

மேலும் கூறப்பட்டவை வருமாறு:–

தமிழ்ச்சமூகத்தின் அரசியல், நிர்வாக அடிப்படை கட்டமைப்பை பலப்படுத்துவதன் மூலம் தமிழ்த் தேசியப் பற்றுறுதி கொண்ட, திறன்மிக்க ஆளுமைகளை மக்கள் பிரதிநிதிகளாக உருவாக்குவதற்கான வழிமுறைகளையும் கலந்துரையாடல்களையும் தமிழ்மக்கள் பேரவை ஆரம்பித்துள்ளது.

இன்றைய சூழலில் மக்களுக்குச் சேவையாற்றக்கூடிய அர்ப்பணிப்பும் சேவை மனப்பான்மையும் கொண்ட இளைய சமுதாயத்தின் பங்கேற்புடன் கூடிய அரசியற் களத்தின் தேவைபெரிதும் உணரப்படுகின்றது. அது காலத்தின் தேவையாகவும் உள்ளது. நாளைய தலைவர்களாக மிளிரக்கூடிய எமது இளைய சமுதாயம், சமூகத்தோடு இணைந்து செயற்படவும் சமூகத்தின் அடிப்படைக்கட்டுமானங்களில் தேர்ச்சி பெறவும், வெளிப்படைத்தன்மை கொண்ட நிர்வாக அமைப்புக்களைக் கட்டியமைக்கவும் தமக்கான ஓர் வாய்ப்பைத் தேடிக் காத்திருக்கிறது.

நிர்வாகஅனுபவமும் வினைத்திறன்மிக்க ஆளுமைப்பண்பும் பொருந்திய – குறிப்பிடத் தகுந்த – எண்ணிக்கையிலான ஓய்வு பெற்ற அரசாங்க மற்றும் தனியார் துறைஅதிகாரிகள், ஊழியர்கள் தமதுஅனுபவ அறிவை மக்களுக்கான சேவையின் பால் தொடரவும்ஆர்வமுள்ளவர்களாக இருக்கின்றமை அவதானிக்கப்பட்டு வருகின்றது.

தத்தமது பிரதேசங்களில் இருக்கக்கூடிய முன்னேற்றகரமான வாய்ப்புக்களையும் அவற்றை சமூகப்பயன் கொண்டவையாக எய்துவதில் இருக்கக் கூடிய சவால்களையும் தமது வாழ்வில் அல்லும் பகலும் சந்தித்து வரும் மக்கள்சேவையாளர்கள் பலர், இயலுமான வகைகளில் தமது திறன்களை ஆக்க பூர்வமாக மடை திறந்து விட விருப்புக் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

ஆண்களுக்குநிகராக, பல சமயங்களில் மேனிலையில் நிர்வாகத்திறன் கொண்டும், அன்பும் அரவணைப்பும் மிக்க தமது கரிசனைகளை தத்தமது குடும்பங்கள் கடந்தும் தாம் வாழும் சமூகத்தின் மீதும் அக்கறையுடன் பகிர்ந்தகொள்ளும் பெண்கள் எம் சமூகத்தின் முன்னோடிகளாக, முன்னுதாரணங்களாக, இருந்து வருகின்றனர்.

வாழ்வியல் விழுமியங்களும் முன்னுதாரணவாழ்வும் நிறைந்த பெருந்தகைகளை நாம் எமது ஊர்களில் இன்றும் காண்கிறோம்.

இனத்தின் விடுதலையின் பால் நாட்டம் கொண்டு, விசுவாசமும் நேர்மையும் ஒழுக்கமும் மிக்க உதாரண மனிதர்களாகத் திகழும், மக்களுக்காகத் தம்மையே அர்ப்பணித்துப் போராடிய முன்னாள் போராளிகள் பலரும் எம்முள் உள்ளனர்.

ஓய்வறியா உடலுழைப்பும் நேர்மைத்திறனும் நிரம்பப்பெற்ற தொழிலாளர்கள் தமது பயனுறு சக்தியைத் தாம்சார்ந்த சமூகங்கள் பலன் பெறவும் மானுட விடுதலையின் பால் தமது உழைப்பைப் பகிர்ந்தகொள்ளவும் வேகங்கொண்டுள்ளனர்.

இத்தகைய ஒட்டுமொத்த சமூகப் பங்களிப்பை ஆக்க பூர்வமான, ஆரோக்கியமான வழியில் எடுத்துச் செல்லும் ஒரு வாய்ப்பாக–எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலைப் பயன்படுத்திக் கொள்வது தமிழ்ப் பிரதேசங்களில் பொது மக்களின் பங்கேற்புக் கொண்ட ஜனநாயகக் கட்டமைப்புக்களை மக்கள் தளத்திலிருந்து கட்டியெழுப்புவதற்கு உதவும் எனத் தமிழர் தரப்பின் பல தளங்களிலிருந்தும் எழுந்த கோரிக்கையை தமிழ் மக்கள் பேரவை கவனத்தில் கொள்கிறது.

உயரியநோக்கங்கள்கொண்ட அரசியல் போராட்ட வழிமுறையில், சமூகத்தின் அடித்தள அமைப்பிலிருந்து அதற்கான பயிற்சிக்களங்களைத்திறப்பதும், அரசியலிலும் நிர்வாகக் கட்டமைப்புக்களிலும் பொதுமக்களின் பங்கேற்பை அதிகரிக்க கூடிய வழிமுறை களைப் பயன்படுத்திக்கொள்வதும், காலத்தின்தேவை அறிந்த உத்தியென்ற புத்திஜீவிகளின் ஆலோசனையைத் தமிழ் மக் கள் பேரவையேற்றுக் கொள்கின்றது.

பகிரங்கத்தன்மையான, திறந்த, திறன்மிக்க அதிகாரப் பொறிமுறையை அடித்தள அமைப்புக்களில் உறுதிப்படுத்திக் கொள்ளவும், ஊழலற்ற, அதிகாரப் போட்டிகளற்ற, மக் கள் சேவை என்ற மகுடத்திற்குள் நின்று நிலை பெறக்கூடிய நிர்வாகங்களை ஊரக அளவில் உருவாக்கிக் கொள்ளவுமான ஒரு வாய்ப்பை மிகச் சரியான தெரிவுகளின் அடிப்படையிலான பிரதிநிதித்துவத்தின் மூலம் பெற முடியுமானால், அதற்கான வழிகாட்டுதல்களை வழங்குவதற்கும், ஒத்த சிந்தனைகளுடன் பயணிப்பவர்களுடன் அதற்காகக் கை கோத்துக் கொள்ளவும் தமிழ் மக்கள் பேரவை தயாராக உள்ளது.

இத்தகைய முன்னெடுப்புக்களைமேற்கொள்வதற்கான கலந்துரையாடல்களும் கருத்துப் பகிர்வுகளும் தமிழ் மக்கள் பேரவையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. – என்றுள்ளது.

## பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரவை வட்டாரங்கள் நேற்றிரவு கூடி ஆராய்ந்தன எனத் தெரிய வரு கின்றது.

'மகரயாழ்' சின்னத்தைப் பொருத்தமானதா எனப் பரிசீலிப்பதற்குத்தீர்மானிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

மகரயாழ் சின்னத்தில் யாழுடன் மீன் வடிவமும் பொருந்தியிருப்பதால் அது வடக்கு, கிழக்கைப் பிரதிபலிப்பதாக இருக்கும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.

புதிய கூட்டணியின் பெயரில் 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு' என்ற சொற்பதமும் இடம்பெற வேண்டும் என சில தரப்புகள் அங்கு வலியுறுத்தின என்றும் அறிய வந்தது.

இதேசமயம், இந்தக் கூட்டமைப்பில் சேர்வதற்கு தமிழர் விடுதலைக்கூட்டணியைஅழைப்பதில்லை என்று ஒரு முடிவு எடுக்கப்பட்டதாகவும் அறிய வந்தது. (உ)

## உச்சக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் இவ்வாறு உறுதிப்படக் கூறினார்.

வவுனியாவில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

'ஜனநாயகத்தமிழரசுக்கட்சி' என்ற பெயரில் ஓர் அமைப்புத் தோன்றவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றமை குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

"இலங்கையில் எல்லோருக்கும் ஜனநாயக உரிமைகள் இருக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சியில்தான்ஜனநாயகம்உச்சமாக உள்ளது. அதில் உள்ள ஜனநாயகஉரிமைகளைப்பயன்படுத்தி பலபேர் இப்படி பல்வேறு கட்சிகளைத்தொடங்கலாம். தேர்தலில் நிற்கலாம். ஆனால் மக்கள் சரியானவிடையை–பதிலை–அளிப்பார்கள் – என்றார் சிறிதரன் எம்.பி. (உ –100)

## கூட்டமைப்பாகவே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று வவுனியாவில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டுஉரையாற்றும்போதே சம்பந்தன் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்பாகவே போட்டியிடும். அதில் எந்தவித மாற்றமும் இல்லை.

கூட்டமைப்பில் இருந்து யாரையும் தமிழரசுக் கட்சி விலக்கவில்லை. அவ்வாறு யாரும் விலகுவதை நாம் விரும்பவும் இல்லை.

தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவில் கூட்டமைப்பின் 4 பங்காளிக் கட்சிகளும் இணைந்தே முடிவெடுக்கும். – என்றார்.

## பேரவையின் போக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுப் பேரவைக் கூட்டத்திலிருந்து வெளியே வந்த முதல்வரிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

"உள்ளூராட்சித் தேர்தலை எப்படிஎதிர்கொள்வது என்றுதீர்மானித்தீர்களா? குறிப்பாகப் பேரவையில் உள்ள கட்சிகளை வைத்துக் கொண்டு...?" – என்ற சாரப்படக் கேள்வி எழுப்பப்பட்டது.

"நான் அது குறித்து எந்த விதமான கருத்துக்களும் தெரிவிக்கவில்லை. ஆனாலும் எந்தக்கட்சித் தேர்தலில் நின்றாலும் தகுதியுடைய – தகைமையுள்ளவர்களை (வேட்பாளர்களாக) ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஒரு கருத்தைத்தான் நான் குறிப்பிட்டேன். மற்றவற்றை நீங்கள் அவர்களிடம் கேட்டுக் கொள்ளுங்கள்." – என்றார் முதல்வர் விக்னேஸ்வரன்.

"தமிழ் மக்கள் பேரவை புதுக் கட்சி (கூட்டமைப்பு) அமைத்தால் நீங்கள் அதற்கு ஆதரவு கொடுப்பீர்களா?" – என்று கேட்கப்பட்ட போது –

"நீங்கள் அவர்களிடம் (பேரவைத் தரப்பினரிடம்) கதைத்துக் கொள்ளுங்கள். நாங்கள் கட்சி ரீதியாக எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கப் போவதில்லை. இது ஒரு மக்கள் இயக்கம். ஆகவே கட்சிச் செயற்பாடுகளுக்கு இங்கு இடமேயில்லை." – என்று 'வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப்' பதில் கூறிவிட்டுப் புறப்பட்டார் முதலமைச்சர் விக்னேஸ்வரன். (உ)

## பேரவையின் ஏற்பாட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரவையின் கூட்டம் நேற்று யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது இத்தகைய தீர்மானம் எடுக்கப்பட்டதாகப் பேரவை உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ்மக்கள்பேரவையின்பங்காளிப்புடன்தமிழ்த்தேசியமக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்..எல்.எவ். ஆகிய கட்சிகளுடன் பொது அமைப்புகளும்இணைந்துபுதிய கூட்டணியாகஎதிர்வரும்உள்ளூராட்சித்தேர்தலைஎதிர்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் –

இந்தத் தீர்மானம் தொடர்பில், தமிழ் மக்கள் பேரவையின் ஏனைய அமைப்புக்களும் கருத்துக்களைத் தெரிவித்துள்ள நிலையில், புதிய கூட்டணியின் உருவாக்கம்தொடர்பில்தமிழ்மக்கள் பேரவை உத்தியோகபூர்வமான முடிவை ஓரிரு நாள்களில் அறிக்கையாக வெளியிடும் எனவும் – அவர் குறிப்பிட்டார்.

## சுயநல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரைத்திருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகிப் புதிய கூட்டணியில் உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்ளப் போவதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் அதன் தலைவர்சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

இந்த நிலையிலேயே ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் பங்கேற்ற தமிழ் மக்கள் பேரவைக் கூட்டத்தில் முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

'முதலமைச்சரின் எழுதி வாசித்த உரை தனியான வெய்தியாகபிரசுரமாகியுள்ளது.'

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:–

உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பான அறிவித்தல்கள் வெளிவந்துள்ளன. இப்பொழுதேதமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் இணைப்புக் கட்சிகளாக இருக்கும் சில கட்சிகள் தம்மிடையே போட்டி போடக் கங்கணம் கட்டிக் கொண்டு இருக்கின்றன. ஒரு பக்கத்தில் சகல கட்சிகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் ஒன்றுபடுத்தப் பிரயத்தனங்கள் எடுக்கப்பட்டு வரும் நிலையில், சிலகட்சிகளின் தனித்துவமான கட்சி எதிர்பார்ப்புக்கள் அல்லது கட்சியின் நல உரித்துக்கள் பற்றிய அவர்கள் சிந்தனைகள் அக் கட்சிகளைத் தனித்துப் போட்டியிட உந்துகின்றன போலத்தெரிகின்றது. இவற்றுள் எமக்கு அனுசரணை வழங்கும் கட்சிகள் சிலவும் உள்ளடங்குவன.

ஆரம்பத்திலிருந்தே ஐந்து கட்சிகள் சேர்ந்தே என்னை முதலமைச்சர் பதவிக்குச் சிபாரிசு செய்ததன் அடிப்படையில் கட்சி ரீதியாக முரண்பட நான் முன்வரவில்லை.

எம்மைப் பொறுத்த வரையில் தமிழ் மக்களின் வருங்காலம் பற்றிய சிந்தனைகளே பூதாகரமாக எம்முன் நிற்கின்றன. பலவித பாரதூரமான பிரச்சினைகளைத்தமிழ்மக்கள் எதிர் நோக்கிக் கொண்டு இருக்கின்றார்கள்.

அரசும், சிங்களத் தலைவர்களும், முஸ்லிம்தலைவர்களும் எதைச் செய்யவேண்டும், எப்படிச் செய்யவேண்டும், எவ்வாறு வழி நடத்த வேண்டும் என்றெல்லாம் திடமான கொள்கைளை வகுத்து அவற்றின் அடிப்படையில் நகர்ந்து கொண்டிருக்கும் வேளையில், தமிழ்த் தலைவர்கள் உட்பூசல்களுக்கு இடங்கொடுத்து, தன்நல சிந்தனைகளுக்கு இடங்கொடுத்து, தம்முள்போட்டி மனப்பான்மையுடன்நடக்கவே எத்தனித்துள்ளார்கள்.

இது, ஒட்டுமொத்தத் தமிழ் இனத்தையும் அழிவுப் பாதையில் செல்ல வழிவகுக்கும் என்பது எமது கருத்து. பொது நலங்கருதி, எமது சுயநலங்களையும்முரண்பாடுகளையும் ஒதுக்கி வைக்க வேண்டிய ஒரு காலகட்டத்தில் நாங்கள் இருக்கின்றோம். இவ்வாறான ஒரு முரண் நிலையை ஆயுதங்கள் ஏந்தியவர்கள் காலத்தில் ஆயுதங்களே தடுத்து நிறுத்தின. இன்று ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட நிலையில் நாங்கள் ஒவ்வொருவருமே எம்முடைய கடமை யாது என்று ஆய்ந்து அறிந்து உணர்ந்து செயற்பட வேண்டிய நிலையில் உள்ளோம்.

தமிழ் மக்கள் பேரவை எல்லாக் கட்சிகளிடமும் வலியுறுத்திக் கோருவது யாதெனில் எங்களுடைய தனிப்பட்ட கட்சி பேதங்களும், அதிகாரப் பேராசையும், தனிப்பட்ட விரோதங்களும் ஏகோபித்த தமிழ் மக்களுடைய அரசியல் நல உரித்துக்களைப் பாதிக்க நாம் அனுமதிக்கக்கூடாது – என்றார்.

இந்த உரை முடிந்ததும் அங்கு கருத்து வெளியிட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் முதலமைச்சரின் உரை தங்களுக்குக் கவலையும் ஏமாற்றமும் அளிக்கின்றது என்று கூறினார்.

இதுவிடயத்தில், அண்ணன் சுரேஷ் பிரேமச்சந்திரனின் நிலைப்பாடே தன்னுடையது என்றும் முதல்வரின் கருத்துத் தனக்கும் ஏமாற்றம் அளிக்கின்றது என்றும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கூறினார்.

இந்த இருவரின் உரையையும்செவிமடுத்த முதலமைச்சர் விக்னேஸ்வரன் தமக்கு வேறு வேலைஇருப்பதாகக்கூறிவிட்டு பேரவைக் கூட்டத்திலிருந்து வெளியேறினார். (உ)

## கூட்டமைப்பிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிலிருந்து ஒரு கட்சி வெளியேறுகின்றதே? அதுபற்றிஉங்கள் கருத்துஎன்னஎன்றுகேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

"கூட்டமைப்பை நாங்கள் இன்னும் வலுப்படுத்த முயற்சிக்கின்ற வேளையில் அதிலிருந்து ஒரு கட்சி வெளியே போக முயற்சிக்கின்றதே என நீங்கள் இன்றைய பேச்சில் கவலை தெரிவித்துள்ளீர்களே?" – என்றே கேள்வி எழுப்பப்பட்டது.

" அவ்வாறு (வெளியே)செல்வது சரியானதல்ல என்பதையும், ஒன்றுசேர்ந்துசெயற்படவேண்டிய அவசியம் எங்களுக்கு உள்ளது என்பதையும் இன்று பேரவைக் கூட்டத்தில் குறிப்பிட்டிருந்தேன்." – எனப் பதிலளித்தார் முதல்வர் விக்னேஸ்வரன்.

## ஜனநாயகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மும்முரமாக நடந்து வருகின்றன. நேற்று யாழ்ப்பாணத்தில் இது தொடர்பான கூட்டம் ஒன்றும் நடைபெற்றுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்களுள் ஒருவரும் நீண்ட காலம் தமிழர் விடுதலைப் போராட்டத்துடன் தம்மை இணைத்து இயங்கி வந்தவருமான மறவன்புலோ சச்சிதானந்தன் ('காந்தளகம் சச்சி') இந்தக் கூட்டமைப்புக்குத் தலைமை தாங்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கட்சி அமைப்புக்கான முன் முயற்சிகளை மன்னார் பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சிவகரன் மேற்கொண்டு வருகின்றார் என்றும் கூறப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் பேராசிரியர் ஒருவர், மாகாண அமைச்சர் ஒருவர், மாகாண முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் எனப் பலர் இந்த அணியில் இணையக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தமிழர் பிரதேசம் எங்கும் இருந்தும் பலநூற்றுக்கணக்கானோரை ஒன்று திரட்டி முதலாவது தேசிய மாநாட்டை அடுத்த வாரங்களில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்றும் –

அந்த மாநாட்டில் அங்கீகாரிப்பதற்கான கட்சியாப்புத்தயாரிப் பணிகள் மும்முரமாக நடக்கின்றன என்றும் – மேலும் கூறப்பட்டது. (உ)

## முஸ்லிம்களையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

10 மணியளவில் ஆரம்பமான இந்தக் கூட்டம்மாலை 6 மணி வரை நீடித்தது.

தமிழரசுக்கட்சியின்தலைவர் மாவைசேனாதிராசாதலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் உரை

பக்கம் 03 ❯❯

காலைக்கதிர்
Kalaikkathir



# இ.போ.ச. பஸ் விபத்து; ஒன்பது பேர் படுகாயம்!

## வெலிகந்தை அருகே சம்பவம்





கொழும்பு, நவ. 13

கண்டியிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணிகளுடன் புறப்பட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பயணிகள் பஸ் வெலிக்கந்தை - நாமல்கம பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை குடைசாய்ந்ததால் 9 பேர் படுகாயமடைந்துள்ளனர் என வெலிக்கந்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் இருவர் கவலைக் கிடமான நிலையில் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

கண்டியிலிருந்து நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு மட்டக்களப்பு நோக்கிப் புறப்பட்ட இந்த பஸ், கொழும்பு - மட்டக்களப்பு நெடுஞ்சாலை வழியாக வெலிக்கந்தையூடாகச் சென்று கொண்டிருந்த போது மாலை 6.20 மணி அளவில் வீதியிலிருந்து விலகி குடைசாய்ந்துள்ளது.

இந்த வேளையில், பிரதேச வாசிகளால் சாரதி, நடத்துநர் உட்பட பயணிகள் மீட்டெடுக்கப்பட்டனர். அத்தோடு, காயமடைந்தவர்கள் அருகிலிருந்த வெலிக்கந்தைப் பிரதேச வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பொலென்னறுவை ஆதார வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பஸ் விபத்துக்குள்ளான அந்த இடத்தில் ஏற்கெனவே வான் ஒன்று சைக்கிளில் சென்றவரை மோதியதில் சைக்கிளில் சென்றவர் சம்பவ இடத்திலேயே பலியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த விபத்துக் குறித்து வெலிக்கந்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(க)

# போதை மாத்திரை விற்பனை: மருந்தகம் சுற்றிவளைப்பு!



கொழும்பு, நவ. 13

போதை மாத்திரை விற்பனை செய்த மருந்தகம் ஒன்று தலவாக்கலையில் சுற்றி வளைக்கப்பட்டது.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து, நேற்று முன்தினம் மாலை தலவாக்கலை அதிரடிப் படையினரும் நுவரெலியா உணவு ஔடத பரிசோதகர்களும் இந்தச் சுற்றி வளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது, விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 150 மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றன.

# பேராசிரியர் சந்தன ஜயரத்னவின் தாயாரின் உடலுக்கு ஜனாதிபதி அஞ்சலி!

கொழும்பு, நவ. 13

மெத்சவிய ஸ்தாபகரும் தலைவருமான பேராசிரியர் சந்தன ஜயரத்னவின் தாயாரான காலஞ்சென்ற திருமதி டீ ஏ ஜயரத்னவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இறுதி அஞ்சலி செலுத்தியுள்ளார்.

பூதவுடல் வைக்கப்பட்டிருக்கும் கிருலப்பனையில் உள்ள வீட்டுக்கு நேற்று முன்தினம் பிற்பகல் சென்ற ஜனாதிபதி, பேராசிரியரின் தாயாருக்கு இறுதி மரியாதை செலுத்தினார். அத்துடன், பேராசிரியர் சந்தன ஜயரத்ன உள்ளிட்ட குடும் பத்தினருக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்.

(க)



# தறுதலைகளையே தவிசாளர்களாக...

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

1.சட்டத்தால் சபையின் மீது பாரிக்கப்பட்டுள்ள கடமைகளையும் பொறுப்புக்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு தேவைப்படுகின்ற தீர்மானங்களை இயற்ற வழியமைத்தல்.


2.அத்தீர்மானங்களை உடனடியாக நடைமுறைப்படுத்தல்.

3.தம் மீது பாரப்படுத்தப்பட்டுள்ள கடமைகளையும் பொறுப்புக்களையும் செய்து முடித்தல்.

4.சபையின் பணியாள் தொகுதியைக் கட்டுப்படுத்தல், அவர்களுக்கு அவர்களின் கடமைகளை ஒதுக்குதல், அக்கடமைகள் உடனடியாகவும் சரியாகவும் நிறைவேறுதலை உறுதிப்படுத்துதல்.

5.சட்ட விரோதமான கொடுப்பனவொன்றைச் செய்கின்ற அல்லது செய்வதற்கு அதிகாரம் அளிக்கின்ற அல்லது சேதத்தை உண்டு பண்ணுகின்ற தவிசாளர் அச்சேதத்தை மேலதிகக் கட்டணமாக சொந்த வகையில் செலுத்தும் பொறுப்புடையவராவார் என்பது.

6.மேலும் தவிசாளர் உள்ளூர் நிதியத்தின் முறையான கட்டுக்கோப்புக்கும் செலவழிப்புக்கும் தனிப்பட்ட முறையிலும் பணரீதியாகவும் பொறுப்புடையவராவார். அத்துடன், சபை உத்தியோகத்தர்களின் நிதிக் கடமைகளின் நிறைவேற்றத்திற்கும் பொறுப்புடையவராவார். எனவே வேண்டும்போது ஒழுக்காற்று நடவடிக்கைகளை அவர் எடுக்க முன்வரவேண்டும்.



7.பிரதேசசபையொன்றின் கணக்கு உத்தியோகத்தரும் தவிசாளரே. நிதி சார் மற்றும் கணக்கிடல் தொழிற்பாடுகள் யாவும் அவருடைய பொது முகாமைத்துவத்தினதும் மேற்பார்வையினதும் கீழேயே இருக்கும்.

### தலைவர்கள் போக்கு

இவ்வாறான பொறுப்புக்களைத் தவிசாளர் மீது சட்டம் சுமத்தியிருக்கும்போது அவ்வாறான செயற்பாடுகளைச் செவ்வனே செய்து முடிக்கக் கூடியவர்களையே கட்சிகள் தவிசாளர்களாக நியமிக்க முன்வர வேண்டும். ஆனால், மாறாகக் கட்சித்தலைமைகள் தம்மைத் தலைமைத்துவத்தில் தக்கவைக்கத் தக்க தறுதலைகள் மீதே கண்ணும் கருத்துமாய் இருக்கின்றனர். ஊழல்கள் ஏற்படவும், முரண்பாடுகள் பிரதேச சபைகளில் உருவாகவும் காரணகர்த்தாக்கள் கட்சித்தலைமைகளே என்றால் அது பிழையாகாது.

அந்தப் பதவிகளில் சிறக்கப் பணிபுரிவோரை ஏற்க முன்வராது கையாள்களையும் கட்சி ஆதரவாளர்களையுமே இணைத்துவிடப் பார்க்கின்றார்கள். இந்த நிலை மாறவேண்டும். தவிசாளர்களின் கடமைகள் யாவை, உறுப்பினர்களின் கடமைகள் யாவை என்றறிந்து அவற்றைத் திறம்படச் செய்யக்கூடியவர்களையே உறுப்பினர்களாக கட்சிகள் நியமிக்க முன்வர வேண்டும். இன்று கணினி அறிவு தேவையாகவுள்ளது. கணக்கியல் அறிவு தேவையாக இருக்கின்றது. முகாமைத்துவ அறிவு தேவையாக இருக்கின்றது. வெறுமனே கட்சியின் விசுவாசத்திற்குப் பாத்திரமானவர்கள் என்ற அடிப்படையில் உறுப்பினர்களைச் சேர்க்காது அவர்களின் தரம் பார்த்து, தகைமை பார்த்து, உரியவர்களை நியமிக்க கட்சிகள் முன்வர வேண்டும். வேலையற்ற பட்டதாரிகள் பலர் நம்மிடையே உள்ளார்கள். சிறந்த அறிவையும் ஆற்றலையுங் கொண்ட இளைஞர், யுவதிகளை நான் சந்தித்திருக்கின்றேன். இவ்வாறான படித்த இளைஞர் சமுதாயம் அடிமட்ட உள்ளூராட்சி சபைகளில் இடம்பெற நாங்கள் வழி அமைக்க வேண்டும்.

பெரும்பாலாக எமது கட்சித் தலைமைகள் 60 வயதைத் தாண்டியவர்கள்.

அடுத்த கட்டத் தலைமை இப்பொழுதிருந்தே அடையாளப்படுத்தப்பட்டு அதிகாரத்தில் இருத்தப்பட்டு, போதிய அரசியல் அறிவை மற்றும் அனுபவத்தைப் பெற நாம் இடமளிக்க வேண்டும். மாறாக நாம் காண்பது தலைமைத்துவங்கள் தம்மைப் பதவிகளில் நீடிக்கப் பல வழிகளிலும் பாடுபடுவதையே.

இந்த விடயமும் எமது தமிழ் மக்களின் வருங்காலம் பற்றியதே. அடுத்த கட்டத் தலைமைத்துவத்தை உருவாக்க நாம் இப்பொழுதிருந்தே நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும். இன்றைய தலைவர்கள் காமராஜர் போல பின்னிருந்து பெரிய தமிழர் அரசியல் இயந்திரத்தை இயக்க முன்வர வேண்டும்.

வருங்காலத்தில் தமிழ்த் தலைமைகள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை சிரத்தையுடன் ஆராய்ந்து செயற்படுகின்றமை இன்றைய தலைமைத் துவங்களின் தலையாய கடன் என்று கூறி வரப்போகும் உள்ளூராட்சித் தேர் தல்களில் தகுந்த தகைமை மிக்க இளைஞர்களையும் யுவதிகளையும் உள்ளடக்க முன்வாருங்கள் என்று உரக்கக் கூறி என் இணைத்தலைவுரையை இத்துடன் முடித்துக் கொள்கின்றேன். - என்றார்.

(உ)

காலைக்கதிர்
Kalaikkathir



## தமிழரசுக் கட்சியின் மத்திய குழு நேற்று வவுனியாவில் கூடிய போது







# ஒற்றுமையை முதல்வர் விரும்பினாலும் இனியும் தமிழரசுடன் இயங்க முடியாது

## நேற்றைய கூட்டத்தின் பின்னர் சுரேஷ் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.13

புதிய அரசமைப்புத் தொடர்பில் தமிழரசுக் கட்சி எடுத்த முடிவானது தமிழ் மக்களின் ஆணையை மீறிய செயலாகும். அதனால் இனியும் அவர்களுடன் சேர்ந்து இயங்க முடியாது. அவர்கள் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடவும் முடியாது என ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

ஒற்றுமையாக இருக்க வேண்டும்என்றவிருப்பம் – ஆதங்கம் – முதல்வர் விக்னேஸ்வரனுக்கு இருக்கலாம். அது தவறு இல்லை.அதுஅவர்விருப்பம். ஆனால் இனியும் நாம் (ஈ.பி.ஆர்.எல்.எவ்). தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்துஇயங்கமுடியாது என்றும் அவர் சொன்னார்.

யாழ்.பொது நூலகத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமைநடைபெற்றதமிழ் மக்கள்பேரவையின்





கூட்டம் நிறைவடைந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்–

தமிழ் அரசுக்கட்சி மக்களின் ஆணையை முழுமையாக உதாசீனம் செய்துவிட்டது. அதனால் புதிய முன்னணியின் அவசியத்தை ஈ.பி.ஆர். எல்.எவ் கடந்த சில வருடங்களாக வலியுறுத்தி வருகின்றது. அதனை இன்று அனைவரும் புரிந்து கொண்டுள்ளனர்.

வடக்கு – கிழக்கு இணைப்பு, சமஷ்டிபோன்ற விடயங்களையேதமிழரசு கைவிட்டு விட்டது. அதனால் தமிழ் மக்களின் உரிமைகளை வென்று எடுக்க புதிய முன்னணியும், புதிய தலைமையும் தேவை எனும் விடயம் இன்று அனைவராலும் உணர்ந்து கொள்ளப் பட்டு உள்ளது.

இந்தகூட்டத்தில்வந்த அனைவரும் அதனை ஏற்றுக்கொண்டு உள்ளனர். தமிழரசுக் கட்சி இன்று நேற்று அல்ல, நீண்டகாலமாகஎதேச்சதிகாரமாக முடிவெடுத்து வருகின்றது.

கூட்டமைப்புடன் இணைந்து முடிவெடுப்பதில்லை. ஒருசிலரே முடிவு எடுத்துவிட்டுஅதனை மற்றவர்கள் மீது திணிக்கின்றார்கள்.

ஒற்றையாட்சியைஏற்றுகொள்ளக்கூடிய சம்பந்தன்மாதிரியானதலைவர் இனி தமிழ் மக்கள் மத்தியில் இருந்து வரமாட்டார் எனச் சிங்கள தலைவர்கள் பாராட்டும் நிலையில் தான்சம்பந்தன்இருக்கின்றார். இந்த அரசமைப்பு இன்னமும் மோசமாகப் பாதிக்கப்பட போகின்றது. தமிழ் மக்களின் உரிமை என்ன ஆக போகின்றது எனத் தெரியவில்லை.

அந்த நிலையில் தமிழ் மக்கள் உரிமைகளை வென்று எடுக்க புதிய கூட்டணி உருவாக உள்ளது. அதுபொதுச்சின்னத்துடன் பொதுப்பெயருடன்காலத்தின் தேவைக்காக உருவாகும். வட மாகாண முதலமைச்சருக்கு எல்லோரும்ஒற்றுமையாகஇருக்க வேண்டும் எனும் விருப்பம் – ஆதங்கம் – இருக்கலாம்.அதுதவறும்இல்லை. அது அவர் விருப்பம். ஈ.பி.ஆர். எல்.எவ். இனியும்சேர்ந்துதமிழரசுக்கட்சியுடன் இயங்க முடியாது. ஏனெனில்தமிழரசுக்கட்சி இடைக்கால அறிக்கை அரசமைப்பு தொடர்பில் அவர்கள் எடுத்த முடிவு தமிழ்மக்கள்ஆணைக்கு எதிரானது. அதனாலேயே அவர்களுடன் சேர்ந்து இயங்கமுடியாது.

இனியும் தமிழரசு கட்சியுடன்சேர்ந்துஇயங்கவும் முடியாது. அவர்கள் சின்னத்தில்தேர்தலில்போட்டியிடவும் முடியாது. – எனத் தெரிவித்தார்.

# பெருந்தொகை கஞ்சா வவுனியாவில் மீட்பு!

## குளிரூட்டி பஸ்ஸின் வவுனியாவில் சாரதி,நடத்துனர் கைது

வவுனியாவில்பெருந்தொகை கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாக கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்துவவுனியாநோக்கி வந்த குளி ரூட்டி பேருந்தில் கொண்டுவரப்பட்ட 93 கிலோ 278 கிராம் நிறையுடைய கஞ்சாவே கைப்பற்றப்பட்டுள்ளது.

கானகராயன்குளம் பொலிஸாருக்குகிடைத்த தகவலின்அடிப்படையில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் வெல்கமவின் வழிநடத்தலில் கனகராயன்குளம் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி சமிந்த பிந்து தலைமையிலான குழுவினரே பேருந்தை வழிமறித்து சோதனை நடத்தியபோது மறைத்து வைக்கப்பட்டிருந்தகஞ்சாவைமீட்டனர்.

பேருந்தின் சாரதி மற்றும் நடத்துனரையும் கைது செய்துள்ள பொலிஸார் இருவரையும் வவுனியா நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கானநடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.





# ஆலயக் கேணிக்குள் கழிவு ஒயில் தொல்புரத்தில் நேற்றுப் பதற்றம்

யாழ்ப்பாணம், நவ.13

இளைஞர்கள் நீந்திக் கொண்டிருந்தவேளை கோயில் கேணிக்குள் பரிபாலனசபை உறுப்பினர்ஒருவர்கழிவுஒயிலை ஊற்றினார். இதனால் தொல்புரம் வழக்கம்பரை அம்மன் கோயிலடியில் பதற்றம் ஏற்பட்டது.

தொல்புரம் வழக்கம் பரை முத்துமாரியம்மன் ஆலயக் கேணியில், இளைஞர்கள்சிலர்கடந்த சிலநாள்களாக நீந்தியுள்ளனர். எனினும் குறித்த கேணியில் நீந்தக்கூடாது என்று பரிபாலன சபையினர் கண்டித்துள்ளனர். இந்தநிலையில் , நேற்று மாலை 4.30 மணியளவில் இளைஞர்கள் நீந்திக் கொண்டிருந்த போது, பரிபாலன சபை உறுப்பினர் ஒருவர் கேணியில்இருந்துவெளியேறுமாறுகோரியபோது, அவருக்கும், இளைஞர்களுக்குமிடையே முரண்பாடு தோன்றியுள்ளது. இதனால் ஒரு கட்டத்தில் கழிவு ஒயிலைக் கோயில் கேணியில் பரிபாலன சபை உறுப்பினர் ஊற்றியமையால், கைகலப்பு ஏற்படுமளவுக்குநிலைமை மாறியது.

“நாங்கள் ஒவ்வொரு வருடமும் நீந்தும் கேணியில் திடீரெனப் புதிய கட்டுப்பாடுகள் போடுகின்றனர். நாங்கள் கோயில் கேணியில் குளிப்பதால் அதன் புனிதம் கெட்டு விடுமென்று எம்மை அப்புறப்படுத்தும் நிர்வாகத்தி



னர், புனிதமான கோயில் கேணிக்குள் கழிவு ஒயில் ஊற்றுவது சரியா?” – என நீந்திக் கொண்டிருந்த இளைஞர்கள் கேட்டனர்.

ஆறு வருடங்களுக்கு முன்னர் புனரமைக்கப் பட்ட கேணியைச் சுத்தமாகப்பேணும்வகையில் சுற்றிவர வேலியமைத்து, பூட்டி வைத்திருந்தோம். ஆனால் அதையும் மீறிச் சிலர் பூட்டை உடைத்து, கேணிக்குள் நீந்தினர். இதனை இரு நாள்கள் எச்சரித்தும் அவர்கள் கேட்கவில்லை. இந்த நிலையில் இன்று அவர்களைத் தடுக்கச் சென்ற பரிபாலனசபைஉறுப்பினருடன் அவர்கள் தர்க்கப் பட்டதால், இந்தச்சம்பவம் இடம்பெற்றிருக்கலாம். நான் கொழும்பில் நிற்பதால் அங்கு என்ன நடந்ததுஎன்பதைஉறுதியாகச் சொல்ல முடியாதிருக்கிறது.” – என ஆலயத்தின் பரிபாலன சபைச் செயலாளர் கூறினார்.

# மோட்டார் சைக்கிளில் வந்தவர் ரயிலுடன் மோதுண்டு உயிரிழப்பு

## மீசாலை புத்தூர்சந்தியில் கோரம்





கொடிகாமம், நவ.13

நேற்றுபிற்பகல்3மணியளவில் கொழும்பில் இருந்துயாழ்நோக்கிவந்த ரயிலுடன் மோட்டார் சைக்கிளில் வந்த குடும்பஸ்தர் மோதியதில் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார். மீசாலை புத்தூர்சந்தி அம்மன் வீதிரயில்கடவையில் இருந்து சுமார் 300 மீற்றர் தூரம் மோட்டார் சைக்கிளை ரயில்இழுத்துச் சென்றுள்ளது.

இவ்விபத்தில் கிளிநொச்சி திருவையாற்றை சொந்த இடமாகவும் மீசாலை புத்தூர்ச் சந்தியை வதிவிடமாகவும் கொண்ட 38 வயதான தெய்வேந்திரம் ஞானசுகன் என்பவரே பலியாகியுள்ளார். இவரது சடலம் ரயிலில் கொண்டு வரப் பட்டு சாவகச்சேரி ரயில் நிலையத்தில் வைக்கப் பட்டு உறவினர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விபத்தின் போது டிஸ்கவரி ரக மோட்டர்சைக்கிள் முழுமையாக சேதமடைந்துள்ளது. மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ – 21)

காலைக்கதிர்
Kalaikkathir

காலைக்கதிர்
விளம்பரதாரருக்கு
ஒரு வாய்ப்பு

‘காலைக்கதிர்’ நாளிதழில்
பிரசுரத்துக்குக் கையளிக்கப்படும்
மரண அறிவித்தல்கள் உடனடியாகவே
Dan Tv மூலம் இலவசமாக
உள்நாட்டிலும், தமிழர் வாழும்
சர்வதேச நாடுகள் எங்கும்
ஒளிபரப்பாகும்.

விவரங்களைப் பெற
‘காலைக்கதிர்’ அலுவலகம்
கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 – 222 3000

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.11.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.